www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியம் என்பது வெளிப்பாடு என்பதே கருத்து. அதிலிருந்துதான் பெறப்படுகிறது அடிக்கடி மறக்கப்படும் க்ரோஸினுடைய மற்றைய கொள்கை; இலக்கியம் என்பது வெளிப்பாடு என்றால், இலக்கியம் வார்த்தைகளால் ஆக்கப்பட்டி ருந்தால், மொழியும்கூட ஒரு அழகியல் புலனுணர் நிகழ்வுதான். மொழி என்பது ஒரு அழகியல் நிகழ்வு என்ற கருத்து நமக்கு ஒத்துக்கொள்ள ஓரளவு சிரமமானதுதான். க்ரோஸினுடைய கொள்கையை யாருமே கிட்டத்தட்ட வெளிப்படையாகத் தெரிவிப் பதில்லை, ஆனால் அனைவரும் அதைத் தொடர்ந்து பிரயோகிக்கிறார்கள்.

ஆழமாகத் தடம்பதிக்கக்கூடிய மொழி ஸ்பானிய மொழி என்றும், பலதரப்பட்ட ஓசைகளைக்கொண்டது ஆங்கிலம் என்றும், பிற்காலத்தைய மொழிகளெல்லாம் கொண்டிருக்க விரும்பிய ஒரு குறிப்பிட்ட கௌரவத்தை லத்தீன் கொண்டிருக்கிறது என்றும் நாம் கூறுகிறோம்; அழகியல் வகைப்பாடுகளை மொழிகளின்மேல் நாம் பொருத்திப்பார்க்கிறோம்.

மஞ்சளாக, பிரகாசமுடையதாக, மாறிக்கொண்டிருப்பதாக உள்ள ஏதோ வொன்றை நாம் கற்பனை செய்வோம். அது ஆகாயத்திலுள்ள ஏதோவொன்று, வட்ட மாயிருக்கும்; மற்ற தருணங்களில் அது ஒரு பிறை வடிவத்தைக் கொண்டிருக்கும், மற்ற நேரங்களில் அது வளரவும் சுருங்கவும் செய்யும். யாரோ - அந்த 'யாரோ' வின் பெயரை நாம் என்றும் தெரிந்து கொள்ளமுடியாது - நம் மூதாதை ஒருவர், நமது பொது மூதாதை, அதற்கு Moon என்ற பெயரை அளிக்கிறார், வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர்களுடனும், பலதரப்பட்டவகையில் அழகுமிக்கதாகவும். Selene என்ற கிரேக்க வார்த்தை சந்திரனுக்கு மிகச் சிக்கலான தாகவும், ஆங்கில Moon என்பது சந்திரனுக்கேயுரிய ஒரு நிதானத்தைக் குரலில் புகுத்துவதாகவும், கிட்டதட்ட அது வட்டமாயிருப்பதால் சந்திரனைப்போலவே இருப்பதாகவும் நான் கூறுவேன்; இறுதி எழுத்தைப்போலவே ஏறக்குறைய உள்ள ஒரு எழுத்தைக்கொண்டே அது தொடங்கிறது. ஸ்பானிய மொழியின் Luna லத்தீனிடமிருந்து ஸ்வீகரித்துக்கொண்ட, இத்தாலிய மொழியுடன் பகிர்ந்துகொள்ளும் அந்த அழகிய வார்த்தை; அது இரண்டு ஒலிப்பிரிவுகளால் ஆனது. இரண்டு பகுதிகள் - ஒருவேளை அவை அதிகமாகக் கூட இருக்கலாம். போர்த்துகீசிய மொழியில் Lua என்று உள்ளது அழகுக் குறைவாகத் தோன்றுகிறது; ஃப்ரெஞ்சின் Lune என்பது மர்மமான ஏதோவொன்றைக் கொண்டுள்ளது. சந்திரனுக்கான ஜெர்மன் வார்த்தை ஆண்தன்மை கொண்டுள்ளது. எனவே, பூமியைப் பொறாமையுடன் பார்க்கும் ஒரு துறவியாகவோ அல்லது நட்சத்திரக் கம்பளத்தின்மேல் நடக்கும் ஒரு பூனையாகவோ சந்திரனை நீட்ஷேவால் கூறமுடிந்தது.

யாரோ, எங்கோ Moon என்ற வார்த்தையைக் கண்டுபிடித்ததாக நாம் கற்பனைசெய்கிறோம். முதல் கண்டுபிடிப்பு ஒருவகையில் சற்று வித்தியாசமான தாயிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்த ஒலி அல்லது மற்றொன்றைக்கொண்டு சந்திரனுக்குப் பெயரிட்ட அந்த முதல் மனிதனுடன் மட்டுமே ஏன் அது முடிந்துபோகவில்லை?

சந்திரன் என்பது காலத்தின் கண்ணாடி எனக் கூறும் ஒரு பாரசீக உருவகம் இருக்கிறது. காலத்தின் கண்ணாடி என்ற அந்தச் சொற்றொடரில் சந்திரனது லகுத்தன்மையும் முடிவின்மையும் இருக்கின்றன. ஒளி ஊடுருமளவு தெளிவை மிக அனேகமாகக் கொண்ட, மிக அனேகமாக எதுவுமற்ற தாயிருக்கும், ஆனால் தன் அளவை முடிவின்மையாகக் கொண்ட சந்திரனுக்கு அது முரணான ஒன்று. சந்திரன் என்பதோ காலத்தின் கண்ணாடி என்று கூறுவதோ, பின்னது இரண்டாம் கட்டமொன்றின் வேலை என்பதைத்தவிர, இரண்டு அழகியல் நிகழ்வுகள்தான். ஏனென்றால் காலத்தின் கண்ணாடி என்பது இரண்டு ஒருமைகளால் ஆனாது, ஆனால் சந்திரன் என்பது



படிப்பகம்

www.padippakam.com

ஒருவகையில் இன்னும் திறன்வாய்ந்த முறையில், வார்த்தையை, சந்திரன் என்ற கருத்தை நமக்குத் தருகிறது. ஒவ்வொரு வார்த்தையுமே கவித்துவ வேலைப்பாடுதான்.

கவிதையைவிட உரைநடை யாதார்த்துக்கு நெருக்கமானதென்று கூறப்படுகிறது. இது தவறென்று நான் நினைக்கிறேன். சிறுகதை எழுத்தாளர் ஹொராஷியோ க்விரோகாவுடையதாக அறியப்படும் ஒரு கருத்து இருக்கிறது. குளிர்ந்த காற்று ஆற்றங்கரையிலிருந்து வீசினால், ஒருவர் வெறுமனே ''குளிர்ந்த காற்று ஆற்றங்கரையிலிருந்து வீசுகிறது'' என்று எழுத வேண்டும் என்பதே அது. அதைப்பற்றிய நம் புலனுணர்தல் என்ன? காற்று அசைவதை நாம் உணர்கிறோம். அதைக் காற்று என்று அழைக்கிறோம்; ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து, ஆற்றங்கரை யிலிருந்து காற்று வருவதை நாம் உணர்கிறோம். இதைக்கொண்டு, கோங்கொராவினுடைய கவிதை வரி போலவோ ஜாய்ஸினுடையதைப் போன்ற ஒரு வாக்கியம் போலவோ சிக்கலான ஏதோவொன்றை உருவாக்குகிறோம். ''குளிர்ந்த காற்று ஆற்றங்கரையிலிருந்து வீசுகிறது'' என்ற அந்தச் சொற்றொடருக்குத் திரும்புவோம். காற்று என்கிற பெயர்ச் சொல்லையும் வீசுகிறது என்ற வினைச் சொல்லையும் ஆற்றங்கரை யிலிருந்து என்ற அர்த்தத் தளத்தையும் உருவாக்குகிறோம். இவை அனைத்தும் யதார்த்தத்திலிருந்து தொலைவானவை. யதார்த்தமென்பது எளிமையான ஒன்று. வெளிப்பார்வைக்கு மந்தமானதாகவும் சாதாரணமாகவும் தெரியக்கூடிய, வேண்டுமென்றே க்விரோகாவால் அப்படியே தேர்ந்தெடுக்கப் பட்ட அந்த வரி, ஒரு சிக்கலான சொற்றொடர்; அது ஒரு அமைப்பு.

*கவிதையைவிட உரைநடை யதார்த்தத்துக்கு நெருக்கமானதென்று கூறப்படுகிறது. இது தவறென்று நான் நினைக்கிறேன். சிறுகதை எழுத்தாளர் ஹொராஷியோ க்விரோகாவுடையதாக அறியப்படும் ஒரு கருத்து இருக்கிறது.*

கார்டுக்கியின் பிரபலமான வரியை நாம் எடுத்துக்கொள்வோம். ''வயல்களின் பச்சை மௌனம்.'' இதை ஒரு தவறு என்றும், கார்டுக்கி பண்பை வேறிடத்தில் பொருத்திவிட்டார் எனவும், ''பச்சை வயல்களின் மௌனம்'' என்று எழுத அவர் உத்தேசித்திருந்ததாகவும் நாம் நினைக்கக்கூடும். அதை நாம் எப்படி உணர்வது? ஒரேநேரத்தில் பல விஷயங்களை நாம் உணர்கிறோம். (விஷயம் என்ற வார்த்தை ஒருவேளை மிகவும் பொருள் ரீதியாகவும் இருக்கலாம்.) வயலை, வயலின் கண்ட இருப்பை, செழுமையை, மௌனத்தை நாம் உணர்கிறோம். மௌனத்துக்கு ஒரு வார்த்தை உண்டென்பது அழகியல் சிருஷ்டியே. மக்களுக்குப் பொறுத்தவரையிலான மௌனம். வயலில் எந்தச் சப்தமும் இல்லை என்ற சந்தர்ப்பத்துக்கு அதைப் பிரயோகித்தது ஒரு அழகியல் செயல்பாடுதான், சந்தேகமேயில்லாமல் அந்தக் காலத்துக்கு மிகவும் துணிச்சலான ஒன்று. கார்டுக்கி ''வயல்களின் பச்சை மௌனம்'' என்னும்போது, ''பச்சை வயல்களின் மௌனம்'' என்று கூறியிருக்கக்கூடியதைப் போலவே உடனடி யதார்த்தத்திலிருந்து மிகவும் நெருக்கமான, அதே சமயம் மிகத் தொலைவிலுள்ள ஏதோவொன்றைப்பற்றிக் கூறுகிறார்.

நம்மிடம் இன்னொரு உதாரணமும் உள்ளது, விர்ஜிலின் வெல்லமுடியாத அந்த வரி, ''நிழல்களினூடாக ஏகாந்த இரவின் கீழ் அவர்கள் இருண்டு சென்றார்கள்.'' வாக்கியத்தை வட்டமாக்கும் ''நிழல்களி னூடாக'' வைத் தவிர்த்துவிட்டு, ''ஏகாந்த இரவின்கீழ் அவர்கள் (ஏனியாஸூம் சிபிலும்) இருண்டு சென்றார்கள்'' என்பதை எடுத்துக் கொள்வோம். வார்த்தைகளை விர்ஜில் மாற்றியிருக்கிறாரென்று நாம் நினைத்துக் கொள்வோம், ஏனென்றால் உண்மையில் கூறியிருக்கக்கூடியதானது ''இருண்ட இரவின் கீழ் அவர்கள் தனியாகச்



படிப்பகம்

www.padippakam.com

சென்றார்கள்" என்பதே. இருந்தாலும், அந்தப் படிமத்தைப் புத்துருவாக்கம் செய்யும் போது ஏனியாஸையும் சிபிலையும் நாம் நினைப்போம், மேலும், "இருண்ட இரவின்கீழ் அவர்கள் தனியாகச் சென்றார்கள்" என்பதைப் போல் "ஏகாந்த இரவின்கீழ் அவர்கள் இருண்டு சென்றார்கள்" எனபதும் நமது படிமத்துக்கு அதேயளவு நெருக்கத்துடன் இருக்கிறது.

மொழி என்பது அழகியல் சிருஷ்டி. அதைப்பற்றிய கேள்விகளேதுமில்லையென்று நான் நினைக்கிறேன். ஒரு மொழியை நாம் கற்கும்போது, வார்த்தைகளை நெருக்கமாகப் பார்க்க வேண்டியிருக்கும் போது அவை அழகானவை அல்லது அழகற்றவை என்று நாம் உணர்வது இதற்கொரு காட்சியாக இருக்கின்றது. மொழியைக் கற்கும்போது ஒருவன் வார்த்தைகளைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கிறான்; இந்த வார்த்தை அசிங்கமானது, இது அழகானது, இது மிகவும் கனமுடையது என்று நினைக்கிறான். ஒருவனது தாய்மொழியில் இது நிகழ்வதில்லை, அங்கே வார்த்தைகள் , பேச்சிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வையாக நமக்குத் தோன்றுவதில்லை.

கவிதை என்பது வெளிப்பாடு என்றார் க்ரோஸ், ஒரு வரி என்பதும், பாடல் உருவாக்கத்தின் ஒவ்வொரு பாகமும் வெளிப்பாடு என்றால், ஒவ்வொரு வார்த்தையும் கூட அதனளவில் வெளிப் பாட்டுத்தன்மை கொண்டதே. இது ஒன்றும் புதிதானதல்ல என்றும், அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்றும் நீங்கள் கூறுவீர்கள். ஆனால் இது நமக்குத் தெரியுமா என்பது எனக்குத் தெரியாது, அதை நாம் உணர்வது அது உண்மை என்பதால்தானென்று நினைக்கிறேன்.

கவிதை என்பது நூலகத்திலுள்ள புத்தகங்கள் அல்ல, எமர்ஸனின் மாயக் கூடத்திலுள்ள புத்தகங்கள் அல்ல என்பதே நிஜம். கவிதை என்பது புத்தகமும் வாசகனும் நிகழ்த்தும் சந்திப்பு, புத்தகத்தின் கண்டுபிடிப்பு. கவிஞன், படைப்பை மனதில் உருவாக்கி, அதைக் கண்டுபிடிக்கவோ புதிதாகத் தோற்றுவிக்கவோ செய்வதான மற்றொரு வினோதமான அழகியல் அனுபவமும் இருக்கிறது. (Invent) என்பதற்கும் (discover) எனபதற்கும் லத்தீனிலுள்ளது ஒரே வார்த்தைதான் என்பது நன்கு தெரிந்ததே. கண்டுபிடிப்பதோ புதுத்தோற்றுவிப்பு செய்வதோ நினைவுகூர்வதே என்னும் ப்ளேட்டோவின் கொள்கையுடன் இது அனைத்தும் ஒத்துப்போகிறது. கற்பது என்பது நினைவுகூர்வது என்பதையும், தெரியாமலிருப்பது என்பது மறக்கத் தெரிவது என்பதையும் ஃப்ரான்ஸிஸ் பேகன் ஒப்புக்கொண்டார், அனைத்தும் இந்த வகையில்தானிருக்கின்றன, நாம்தான் அவற்றைக் காண்பதில்லை.

ஏதாவதொன்றை நான் எழுதும்போது, அது ஏற்கனவே இருந்திருக்கின்றது என்ற உணர்வைப் பெறுகிறேன். ஒரு பொதுவான கருத்திலிருந்து நான் தொடங்குகிறேன். தொடக்கமும் முடிவும் சற்றேறக்குறைய எனக்குத் தெரிகிறது, பின்பு நான் இடைப்பட்ட பகுதிகளைக் கண்டு பிடிக்கிறேன். ஆனால் அவற்றை நான் புதுத்தோற்றுவிப்பு செய்ததாகவோ, என் சுதந்திரமான விளைவை அவை நம்பியிருப்பதாகவோ நான் உணரவில்லை. பொருட்கள் அவை போலவேயிருக்கின்றன, ஆனால் அவை மறைந்துள்ளன, ஒரு கவிஞனாக எனது கடமை அவற்றைக் கண்டுபிடிப்பதுதான்.

புதிதாக ஏதோவொன்றைக் கண்டுபிடிப்பது என்பதல்லாமல், நாம் மறந்துவிட்ட ஏதோவொன்றை நினைவு கூறச்செய்வதே கவிதையின் விளைவுகளில் ஒன்று என்றார் ப்ராட்லி. ஒரு நல்ல கவிதையை வாசிக்கும் போது நாமும் அதை எழுதியிருக்கலாமென்றும், அந்தக் கவிதை ஏற்கனவே நமக்குள் இருந்திருக்கிறதென்றும் கற்பனை செய்கிறோம். சிறகுகளைக் கொண்ட, உருமாறிக்கொண்டேயிருக்கும் புனிதமான அந்த விஷயமான கவிதையைப் பற்றிய ப்ளாட்டோனிக் வரையறுத்தலுக்கு இது நம்மை அழைத்துச்செல்கிறது. வரையறுப்பு என்றமட்டில் அது தவறாக இருக்கலாம், ஏனென்றால் அந்த



படிப்பகம்

www.padippakam.com

சிறகுகளைக்கொண்ட, உருமாறிக் கொண்டேயிருக்கும் புனிதமான அந்த விஷயம் இசையாகக்கூட இருக்கலாம். (கவிதை என்பது இசையின் ஒரு வடிவம் என்பதை விடுத்து) கவிதையை வரையறுக்கும் ப்ளேட்டோ, கவிதையின் ஒரு உதாரணத்தையும் தருகிறார். கவிதையென்பது ஒரு அழகியல் அனுபவம் என்னும் கருத்துக்கு இது நம்மை அழைத்துச் செல்கிறது.

ப்யூனோஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தின் தத்துவ மற்றும் படைப்புக்கலைக் கல்லூரியில் நான் ஆங்கில இலக்கியப் பேராசிரியராகப் பணிபுரிந்திருக்கிறேன். மேலும், இலக்கிய வரலாற்றை எவ்வளவு தவிர்க்க முடியுமோ அவ்வளவு தவிர்க்க முயன்றிருக்கிறேன். என் மாணவர்கள் என்னிடம் ஒரு புத்தகப்பட்டியல் கேட்டபோது நான் அவர்களிடம் கூறினேன் "புத்தகப்பட்டியல் என்பது முக்கியத்துவ மற்றது" ஷேக்ஸ்பியரிய விமர்சனங்களைப் பற்றி ஷேக்ஸ்பியருக்கு எதுவும் தெரியாது. பிரதிகளை ஏன் நேரடியாகப் படிக்கக் கூடாது? உங்களுக்குப் புத்தகம் பிடித்திருந்தால், நல்லது, இல்லையென்றால் அதைப் படிக்காதீர்கள். கட்டாய வாசிப்பு என்பது முட்டாள்தனமானது, கட்டாயமான சந்தோஷத்தைப்பற்றிப் பேசுவது வேண்டு மானால் பிரயோஜனமான தாயிருக்கும். உங்களால் கவிதையை உணரமுடியவில்லையென்றால், அழகு பற்றிய உணர்வு உங்களுக்கு இல்லையென்றால் அடுத்து என்ன நிகழ்ந்ததென்று தெரிந்துகொள்ள ஒரு கதை உங்களைத் தூண்டாவிட்டால், அந்த எழுத்தாளன் உங்களுக்காக எழுதவில்லை. அதைத்தூக்கிப் போடுங்கள். உங்களது கவனத்தைக் கவருமளவு வேறொரு எழுத்தாளனையோ - அல்லது, இன்றைக்கு உங்கள் கவனத்தை ஈர்க்கத் தகுதியற்ற, நீங்கள் நாளை படிக்கக்கூடிய எழுத்தாளனைக் கொண்டிருக்குமளவு இலக்கியம் செழுமைபெற்றது."

வரையறுக்கப்படத் தேவையற்ற அழகியல் நிகழ்வைச் சார்ந்து இப்படித்தான் நான் கற்பித்தேன். அழகியல் நிகழ்வென்பது காதலைப்போல், கனியின் சுவையைப்போல், தண்ணீரைப்போலத் தெளிவானதும், உடனடியானதும் வரையறுக்கமுடியாதது மான ஏதோவொன்று. ஒரு பெண்ணின் நெருக்கத்தை, அல்லது ஒரு மலையை அல்லது ஒரு வளைகுடாவை உணர்வதைப் போல் நாம் கவிதையை உணர்கிறோம். நாம் அதை உடனடியாக உணரும்போது, நமது உணர்வுகளைவிடச் சந்தேகமற்றவகையில் பலவீனமாயிருக்கக்கூடிய பிற வார்த்தை களைக் கொண்டு அதை ஏன் நீர்த்துப் போகச் செய்யவேண்டும்?

கவிதையைக் கிட்டத்தட்ட உணரவே செய்யாத சிலர் இருக்கின்றார்கள், பொதுவாக அவர்கள்தான் கவிதையைக் கற்பிக்க அர்ப்பணித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். கவிதையை உணர்வதையும், அது கற்பிக்கப்படாமலிருப்பதையுமே நான் நம்புகிறேன். சில பிரதிகளைப்பற்றிய காதலை நான் கற்பித்ததில்லை, இலக்கியத்தை எப்படி நேசிப்பது, மகிழ்ச்சியின் ஒரு வடிவமாக இலக்கியத்தை எப்படிப் பார்ப்பது என்பதையே என் மாணவர்களுக்கு கற்பித்து வந்திருக்கிறேன். நான் குணரூபமாகச் சிந்திக்க கிட்டத்தட்ட இயலாதவன் - மேற்கோள்களைக் கொண்டும் நினைவுக்களைக் கொண்டும் தொடர்ந்து ஊன்றுதாங்கல் செய்கிறே னென்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். குணரூபமாகக் கவிதையைப்பற்றிப் பேசுவதான - மனதைக் களைப்படையச் செய்வதும் நேரத்தை வீணடிப்பதுமான செயலைவிட, இரண்டு ஸ்பானியக் கவிதைகளை எடுத்துக்கொண்டு அவற்றை அலசுவோம்.

நன்றாகத் தெரியவந்துள்ள இரண்டு கவிதைகளை நான் தேர்வுசெய்கிறேன். ஏனெனில் என் நினைவுகள் தவறு செய்யக்கூடும்; உங்கள் நினைவுகளில் ஏற்கனவே தங்கியுள்ள பிரதிகளை நான் தேர்வுசெய்கிறேன். ஒஸுனாவின் கோமகன் டான் பெட்ரோ டேல்லெஸ் ஜிரோனின் நினைவாக க்விவடோவால் எழுதப்பட்ட பதினான்குவரிக் கவிதையை நாம் எடுத்துக் கொள்வோம். அதை நான் நிதானமாகக் கூறுகிறேன், பின்பு அதற்குள் போகலாம், ஒவ்வொரு வரியாக



படிப்பகம்

www.padippakam.com

*பெருமைமிகு ஒஸ்ஹினா தன் தாய்மண்ணை இழந்திருக்கலாம்*
*ஆனால் அதன் எதிர்ப்புக்கான தீரச்செயல்களை அல்ல*
*ஸ்பெயின் கொணர்ந்தது மரணத்தையும் சிறைவாசத்தையும்*
*அவனுக்கு, அதிர்ஷ்டம் அடிமையாக்கியது அவனை.*

*பொறாமையில் அவர்கள் அழுதார்கள், ஒருவர்பின் ஒருவராக,*
*அயல்தேசங்களும் அவனுக்குச் சொந்தமானதும்;*
*ஃப்ளாண்டர்களின் படையெடுப்புக்களே அவன் கல்லறை,*
*ரத்தமயமான நிலவே அவனது கல்லறை வாசகம்.*

*அவனுடைய சவச்சடங்குகளுக்காக பார்த்தீனோப்*
*எரித்தது வெஸூவியஸை, ட்ரினாக்ரியா மாங்கிபெலோவை;*
*ராணுவ அழுகை வெள்ளமாய் வளர்ந்தது.*

*சொர்க்கத்தில் சிறந்த இடத்தை செவ்வாய் அளித்தான்*
*மோஸெல், ரைன், டாகஸ், டான்யூப் யாவும்*
*துக்கத்தில் முணுமுணுக்கின்றன தங்கள் சோகத்தை*

நான் கவனிக்கவிரும்பும் முதல் விஷயம், அது ஒரு சட்டரீதியான காரணங்காட்டலில் ஈடுபடுகிறது என்பதே. ஒஸூனாவின் கோமகனைப்பற்றிய நினைவுகளை - வேறொரு கவிதையில் அவரே எழுதியதுபோல, "சிறையில் இறந்தான், இறந்தவன் கைதி'' என்று தற்காத்துக்கொள்ள கவிஞர் விரும்புகிறார். கோமகனுக்கு ஸ்பெயின் பெரும் ராணுவ மரியாதையைக் கடன்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அவனுக்குச் சிறையை அளித்தார்கள் என்கிறார் கவிஞர். இது நிறைவான ஆதாரபூர்வங்களற்றது, ஏனெனில் ஒரு கதாநாயகன் குற்றவாளியாக இருக்கமுடியாது என்பதற்கோ அவன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்கோ எந்தக் கட்டாயமுமில்லை இருந்தாலும்,

*பெருமைமிகு ஒஸூனா*

*தன் தாய்மண்ணை இழந்திருக்கலாம்,*

*ஆனால் அதன் எதிர்ப்புக்கான*
*தீரச்செயல்களை அல்ல*

*ஸ்பெயின் கொணர்ந்தது மரணத்தையும்*
*சிறைவாசத்தையும்*

*அவனுக்கு, அதிர்ஷ்டம் அடிமையாக்கியது*
*அவனை.*

என்பது, காரணங்களையன்றி, உணர்வுகளை மட்டுமே தூண்டும் ஒன்று. இந்தப் பதினான்குவரிக் கவிதைக்காகவோ, அதை எதிர்த்தோ நான் பேசவில்லை, அதை நான் அலச முயல்கிறேன்.

*பொறாமையில் அவர்கள் அழுதார்கள்,*
*ஒருவர்பின் ஒருவராக,*

*அயல்தேசங்களும் அவனுக்குச்*
*சொந்தமானது;*

இந்த இரண்டு வரிகளும் பிரதானமான கவித்துவ அதிர்வு ஏதுமற்றவை. கவிதையை விஸ்தாரப்படுத்தும் பொருட்டே அவை அங்கே வைக்கப்பட்டுள்ளன. நான்கு அடியியைபுகள் தேவைப்படும் இத்தாலியப் பதினான்கு வரிக் கவிதையின் சிக்கலான வடிவத்தை க்விவடோ பின்பற்றினார். ஷேக்ஸிபியர் பின்பற்றியது இரண்டு மட்டும் தேவைப்படும் எலிஸபெத்திய பதினான்குவரிக் கவிதை யின் சுலபமான வடிவத்தை. க்விவடோ தொடர்கிறார்;

*ஃப்ளாண்டர்களின்*
*படையெடுப்புக்களே அவன் கல்லறை,*

*ரத்தமயமான நிலவே அவனது கல்லறை*
*வாசகம்.*

தேவையானது இதோ இருக்கிறது. இந்த இரண்டு வரிகளும் தம் செழுமையை அதன் நிச்சயமின்மைக்குக் கடன்பட்டிருக்கின்றன. "ஃப்ளாண்டர்களின் படையெடுப்புக்களே அவன் கல்லறை'' என்பதன் அர்த்தம் என்ன? ஃப்ளாண்டர்களின் பிரதேசங்களைப்பற்றி,



படிப்பகம்

www.padippakam.com

கோமகன் மேற்கொண்ட ராணுவப் படையெடுப்புகள் பற்றி நாம் நினைக்கலாம். "ரத்தமயமான நிலவே அவன் கல்லறை வாசகம்" என்பது ஸ்பானிய மொழியின் மிக அமரத்துவமான வரிகளுள் ஒன்று. அதன் அர்த்தம் என்ன? அழிவு நாளின் போது தோன்றும், அல்லது யுத்தகளத்தின்மேல் தோன்றும் ரத்தமயமான சந்திரனை நாம் நினைக்கலாம். ஆனால், ஒஸுனாவின் கோமகனுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட மற்றொரு பதினான்குவரிக்கவிதையில் அவர் கூறுகிறார்...

*"த்ரேஸின் நிலவுகளுக்கு, ரத்தமயமான*
*கிரஹணத்துடன் இப்போதுங்கள்*
*பயணம்*
*முடிக்கப்படுகிறது."*

ஒட்டோமான் கொடியைப்பற்றி க்விவடோ ஆரம்பத்தில் நினைத்திருக்கக்கூடும்; ரத்தமயமான சந்திரன் என்பது செந்நிறமான அரைச் சந்திரனாக இருக்கக்கூடும். எந்தவொரு அர்த்தமும் தவிர்க்கப் படக்கூடாது என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டோமென்று நினைக்கிறேன். க்விவடோ, ராணுவப் பயணங்களை மட்டுமோ, கோமகனின் சேவைகளையோ, ஃப்ளாண்டர் படையெடுப் பையோ, துருக்கியக் கொடியையோ மட்டும் குறிப்பிடுகிறாரென்று நாம் கூறமாட்டோம். பல்வேறு அர்த்தங்களை நினைவில் கொண்டார் க்விவடோ. இந்த வரிகள் நிச்சயமின்மை கொண்டதால் அற்புதமாயி ருக்கின்றன.



படம்: மோனிகா

*அவனுடைய சவச்சடங்குகளுக்காக*
*பார்த்தீனோப்*
*எரித்தது வெஸுவியஸை, ட்ரினாக்ரியா*
*மாங்கிபெலோவை,*

வெஸுவியஸை நேப்பிள்ஸும், எட்னாவை சிசிலியும் எரித்ததாக அது கூறுகிறது. அந்தப் புராதனப் பெயர்கள் எவ்வளவு வினோதமாக இங்கு உபயோகிக்கப்பட்டுள்ள. - பின்பு வந்த புகழ்மிக்க பெயர்களைவிட அவை வெகுதொலைவில் இருப்பதாகப் படுகிறது.

*ராணுவ அழுகை வெள்ளமாய்*
*வளர்ந்தது*

கவிதை என்பது ஒரு விஷயம், அறிவார்ந்த உணர்வென்பது மற்றொரு விஷயம் என்பதற்கான மற்றொரு ஆதாரம் இதோ இருக்கிறது. வெள்ளம் உருவாக்குமளவு ராணுவ வீரர்கள் அழுதார்களென்றபடிமம் விஷமத்தனமானவகையில் அபத்தமானது. ஆனால், தனக்கேயுரிய விதிகள் கொண்ட கவிதையில் அது அபத்தமானதல்ல. "ராணுவ அழுகை" - ''ராணுவ'' என்ற வார்த்தை ஆச்சரியந்தருகிறது. அழுகைக்கு அளிக்கப்படும் வினோதமான அடையாக "ராணுவ" என்பது இருக்கிறது.

*'சொர்க்கத்தில் சிறந்த இடத்தை செவ்வாய்*
*அளித்தான்*

இதையும் நாம் தர்க்கபூர்வமாக நியாயப்படுத்தமுடியாது; சீஸருக்கு பக்கத்தில்




படிப்பகம்

www.padippakam.com

ஒஸுனாவின் கோமகனை செவ்வாய் தங்கவைப்பானென்று நினைப்பதில் அர்த்தமில்லை. தன் மிகைப்படுத்தும் குணாம்சத்தாலேயே இந்தச் சொற்றொடர் தன் இருப்பைக் கொண்டிருக்கிறது. இதுதான் கவிதையின் உரைகல். அர்த்தத்தைத்தாண்டியும் ஜீவித்திருக்கிறது அந்த வரி.

*மோஸெல், ரைன், டாகஸ், டான்யூப் யாவும்*
*துக்கத்தில் முணுமுணுக்கின்றன தங்கள்*
*சோகத்தை.*

பலவருடங்களாக என் மனதைத் தொட்டுவந்திருந்த இந்த வரிகள் அடிப்படையில் தவறானவை என்று கூறுவேன். தனது படையெடுப்புக்களின் புவியியலாலும் பிரபலமான நதிகளாலும் அழுதுதீர்க்கப்பட்ட ஒரு கதாநாயகன் பற்றிய கருத்து தன்னை இழுத்துச் சென்றுவிட க்விவடோ அனுமதித்தார். அது தவறென்று நாம் உணர்கிறோம். உண்மையைக் கூறுவது நல்லதாயிருந்திருக்கும், தனது பதினான்குவரிக் கவிதையின் இறுதியில் காடு ஒன்றை



படம்: A.செல்வம்

அழித்ததற்காக டக்ளஸை வேர்ட்ஸ்வொர்த் தாக்கியது போல அவர் கூறுகிறார், ஆம். "சகோதரத்துவங்கொண்ட வழிபடத்தக்க மரங்களின்" உயர்ந்த பெரும் கூட்டமொன்றை அழித்தது டக்ளஸ் வனத்துக்கிழைத்த கொடூரமான ஒன்றாகும். இருந்தாலும், அவர் மேலும் கூறுகிறார், நாம் உணரும் தீமையின் வலிகள் இயற்கைக்கு ஒன்று மேயில்லாததாக இருக்கிறது - ட்வீட் ஆறும் பச்சைப் புல்வெளிகளும் மலைகளும் பாதிப் பேதுமின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. உண்மையைக் கூறுவதன்மூலம் வலுவான தாக்கத்தை உண்டாக்க முடியுமென அவர் கருதினார். அந்த அழகிய மரங்களை அவர்கள் அழித்துவிட்டார்கள் என்பது நம்மை வலிகொள்ளச்செய்கிறது, ஆனால் இயற்கைக்கு அது ஒரு விஷயமில்லை. இயற்கையால் - அப்படி அழைக்கப்படும் ஒன்று இருந்தால் - அவற்றைச் சீர்செய்து கொள்ளமுடியுமென்பது அதற்குத் தெரியும். ஆறு ஓடிக்கொண்டேயிருக்கிறது.

க்விவடோவுக்கு, ஆற்றின் கடவுளைப் பற்றியதுதான் முக்கியமான தாயிருக்கிற தென்பதுதான் உண்மை. ஒஸுனாவின் கோமகனின் மரணம் நதிகளுக்கு ஒரு பொருட்டாயிருக்க வில்லையென்றுஅவர் எழுதியிருந்தால் ஒருவேளை இன்னும் கவித்துவமானதாக இருந்திருக்கும். ஆனால், மனிதன் ஒருவனது மரணத்தின்பின் இயற்றப்படும் ஒரு இரங்கற்பாவை உருவாக்க க்விவடோ விரும்பினார். மனிதனின் மரணம் என்பது என்ன? மறுபடி தோன்ற முடியாத ஒரு முகம் அவனுடன் இறக்கிறது என்று கண்டார் ப்ளினி. ஒவ்வொரு மனிதனுக்கும் பிரத்யேக முகமொன்று இருக்கிறது, மிகவும் மனிதத்தன்மை கொண்ட ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளும், ஆயிரக்கணக்கான நினைவுகளும் அவனுடனே சேர்ந்து இறக்கின்றன. இது எதையும் க்விவடோ உணர்வதாக தெரியவில்லை அவரது நண்பரான ஒஸுனா கோமகன் சிறையில் இறந்திருக்கிறார், க்விவடோ இந்தக் கவிதையை இரக்கமின்றி எழுதுகிறார், அதன் தேவையான வேறுபாடின்மையை நாம் உணர்கிறோம். கோமகனைச் சிறையில் தள்ளிய அரசுக்கு எதிரான குரலாக அதை எழுதுகிறார். கோமகனை அவர் விரும்பாததுபோல் கூடத் தோன்றும். இருந்தாலும், நமது மொழியின் பெருமைமிகு பதினான்குவரிக் கவிதைகளுள் அதுவும் ஒன்று.

என்ரிக் பாங்க்ஸ் எழுதிய மற்றொரு பதினான்குவரிக் கவிதையை நாம் பார்ப்போம். க்விவடோவைவிட பாங்க்ஸ் நல்ல கவிஞர் என்று கூறுவது அபத்தமானது. பின்பும், இப்படிப்பட்ட ஒப்புமைகள் எதை



படிப்பகம்

www.padippakam.com

*உயிரினங்கள் புழங்கும் இடத்தில்*
*பிரதிபலிப்பதில் வரவேற்கக்கூடியதும் விசுவாசமானதும்*
*தோற்றத்தைப் பொறுத்தமட்டில், கண்ணாடி*
*இருளில் சந்திர ஒளி போன்றது.*

*பெருமைகொள்கிறது இரவுக்குக்கொணர்வதில் விளக்கின்*
*மிதக்கும் தெளிவை, சோகத்தை.*
*பூந்தொட்டியில் இறந்துகொண்டிருக்கும் ரோஜா*
*அதற்குள்ளும் தலையை நுழைக்கிறது.*

*வலியை அது இரட்டிப்பித்தால், அது மறுபடியும் நிகழ்த்துகிறது*
*எனக்கோர் ஆன்மாவின் தோட்டமான விஷயங்களை.*
*ஒருநாள் வாழக்கூடுமென்று அது நம்பிக்கை கொள்கிறது*

*அதன் நீல நிசப்தத்தின் மாயத்தில்*
*நெற்றிகள் இணைக்கப்பட்டும் கைகள் பின்னப்பட்டும்*
*பிரதிபலிக்கப்படும் ஒரு விருந்தாளி.*

அர்த்தப்படுத்துகின்றன? பாங்க்ஸின் இந்தப் பதினான்குவரிக் கவிதையைக் கவனித்து, இதை மிகவும் அனுபவிக்கத்தக்கதாய் ஆக்குவது எது என்று பார்ப்போம்.

இந்தப் பதினான்குவரிக் கவிதை ஓரளவு விசித்திரமானது. ஏனெனில் முன்னிலைப் படுத்தப்படுவது கண்ணாடி அல்ல, இறுதியில் நமக்குத் தெரியவரும் ஒரு ரகசிய முன்னிலையாளன் இருக்கிறான். அனைத்துக்கும் முதலாக, நம்மிடருக்கும் மையக்கருத்து மிகவும் கவித்துவமானது. அனைத்துப் பொருட்களையும் இரட்டிப்பாக்கும் கண்ணாடி.

ப்ளோட்டினஸை நாம் நினைவுகூரலாம். அவனது உருவத்தை ஓவியமாக வரைய விரும்பினார்கள், ஆனால், "நானே ஒரு நிழல், ஆகாயத்திலுள்ள மூதாதையுருவின் ஒரு நிழல், அந்த நிழலின் ஒரு நிழலைச் செய்வதில் என்ன அர்த்தமிருக்கிறது?" எனக் கூறி, மறுத்துவிட்டான். கலை என்பதே இரண்டாம்படி நிலை ஆவியுருதான் என்று நினைத்தான் ப்ளோட்டினஸ். மனிதன் பலவீனனாயிருந்தால், அவனது பிம்பத்தை எப்படி நேசிக்கமுடியும்? பாங்க்ஸ் உணர்ந்தது இதுதான். கண்ணாடியின் மாயாரூபத் தன்மையை அவர் உணர்ந்தார்.

கண்ணாடிகள் இருக்கின்றன என்பதே கொடுமையானது; நான் எப்போதுமே கண்ணாடிகளால் திகிலடைந்திருக்கிறேன். 'போ'வும் உணர்ந்திருக்கிறாரென்று நினைக்கிறேன். அறை அலங்காரத்தைப் பற்றிய, அதிகம் தெரியவராதஅவரது கட்டுரை ஒன்று உள்ளது. அவர் வலியுறுத்தும் விதிமுறைகளில் ஒன்று, உட்கார்ந்திருக்கக்கூடிய மனிதன் பிரதிபலிக் கப்படாத வகையில் கண்ணாடிகள் நிறுவப் படவேண்டும் என்பதே. கண்ணாடியில் பார்ப்பதைப்பற்றிய இவரது பயத்தை இது உணர்த்துகிறது. இரட்டையைப் பற்றிய கதையான "வில்லியம் வில்சன்" னிலும் நாம் இதைக் காணமுடியும். மேலும், "ஆர்தர் கார்டன் பிம்மின் கதைக்கூற்று" என்ற கதையில் ஒரு அண்டார்டிக ஆதிவாசிக் கூட்டத்தையும், அதிலொரு மனிதன் முதல்முறையாகக் கண்ணாடிப் பார்த்தும் திகிலடைந்து வீழ்வதையும் காணலாம். கண்ணாடிகளுக்கு நாம் பழகிவிட்டோம், ஆனால் நிஜத்தின் அந்தப் பார்வைப் புல இரட்டிப்பில் பீதியூட்டும் ஏதோவொன்று இருக்கிறது.

பாங்க்ஸின் கவிதைக்குத் திரும்புவோம். ''வரவேற்கக்கூடியதும்'' என்பது ஒரு மனிதநேயப் பாங்கைத் தருகிறது. இருந்தாலும், கண்ணாடிகள் வரவேற்கக் கூடியவை என்று நாம் நினைத்திருக்கவே இல்லை. ஒரு நட்பான விலகலோடு கண்ணாடிகள் அமைதியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

*உயிரினங்கள் புழங்கும் இடத்தில்*
*பிரதிபலிப்பதில் வரவேற்கக்கூடியதும்*



படிப்பகம்

www.padippakam.com

*விசுவாசமானதும்*
*தோற்றத்தைப் பொறுத்தமட்டில், கண்ணாடி*
*இருளில் சந்திர ஒளி போன்றது.*

தன்னளவில் பிரகாசமானதாகக் கண்ணாடியை நாம் பார்க்கிறோம், அவர், சந்திரன் போன்ற தொட்டுணரமுடியாத ஒன்றுடன் அதை மேலும் ஒப்பிடுகிறார். கண்ணாடியின் வினோதத்தன்மையையும் மாயத்தன்மையையும் உணர்வதைத் தொடர்கிறார். "நிழலின்மேலான சந்திர ஒளிபோல்."

*பெருமைகொள்கிறது இரவுக்குக்*
*கொணர்வதில் விளக்கின்*

*மிதக்கும் தெளிவை...*

"மிதக்கும் தெளிவு" என்பது, பொருட்களை வரையறுக்க முடியா தென்பதைக் கூறுகிறது; கண்ணாடியைப் போல அனைத்தும் துல்லியமற்றதாக இருக்க வேண்டும். நிழலின் கண்ணாடிபோல் அது ஒருவேளை பிந்தைய மதியமாகவோ இரவாகவோ இருக்கலாம்.

*.....விளக்கின்*
*மிதக்கும் தெளிவை, சோகத்தை.*
*பூந்தொட்டியில் இறந்துகொண்டிருக்கும்*
*ரோஜா*
*அதற்குள்ளும் தலையை நுழைக்கிறது.*

அனைத்தும் தெளிவற்றதாகப் போய் விடாமலிருப்பதற்கு, இப்போது நம்மிடம் ஒரு ரோஜா உள்ளது, ஒரு துல்லியமான ரோஜா.

*வலியை அது இரட்டிப்பித்தால், அது*
*மறுபடியும் நிகழ்த்துகிறது*
*எனக்கோர் ஆன்மாவின் தோட்டமான*
*விஷயங்களை.*

*ஒருநாள் வாழக்கூடுமென்று அது*
*நம்பிக்கைகொள்கிறது*
*அதன் நீல நிசப்தத்தின் மாயத்தில்*
*நெற்றிகள் இணைக்கப்பட்டும் கைகள்*
*பின்னப்பட்டும்*
*பிரதிபலிக்கப்படும் ஒரு விருந்தாளி.*

இங்கே நாம் கவிதைக்கான விஷயத்தை நெருங்குகிறோம், அது கண்ணாடி அல்ல, காதல் - அடக்கமான காதல், நெற்றிகள் இணைபட்டும் கைகள் பின்னப்பட்டும் காண விழைவது. கண்ணாடி அல்ல, கவிஞன்தான். ஆனால், ஒருவிதமான அடக்கம் இது அனைத்தையும் மறைமுகமான வழியில் கூறச்செய்கிறது. பாராட்டத்தக்கவகையில் இது தயாரிக்கப் பட்டுள்ளது. தொடக்கத் திலேயே "வரவேற்கத்தக்கதும் விசுவாச மானதும்" என்பதை நாம் காண்கிறோம், தொடக்கத்திலிருந்தே கண்ணாடி என்பது கண்ணாடிப்பொருளால் ஆனதோ உலோகத்தால் ஆனதோ அல்ல. கண்ணாடி என்பது ஒரு ஜீவன், வரைவேற்றும் விசுவாசமாகவுமிருந்து, கவிஞனுடையதாக இறுதியில் அடையாளங் காணப்படும் தோற்றங்களாலான உலகத்தை நமக்கு அது பரிச்சயமாக்குகிறது. கவிஞன் என்பவன், காதல் என்ற விருந்தாளியைப் பார்க்க நம்பிக்கையுடனிருப்பவன்.

மொழிகளைப்பற்றியும், அவற்றை ஒப்பிடுவது எவ்வளவு நியாயமற்றது என்பதுபற்றியும், பேசியிருக்கிறேன். உதாரணத்துக்கு ஒரு கவிதைப் பத்தியை ஸ்பானிய மொழியில் யோசித்தால்

*quie'n hubiera tal ventura*
*sobre las aguas del mar*
*Como hubo el conde Arnaldoes*
*la manana de San Juan*

*கடல்தண்ணீர் மேல்*
*யாருக்கு அவ்வளவு அதிர்ஷ்டமிருந்தது*
*அர்னால்டோஸ் கோமகன் போல*
*சான் ஜுவானின் காலையில்*

அர்னால்டோஸ் கோமகன் அல்லது சான் ஜுவானின் காலை என்பது ஒரு பொருட்டல்ல. அந்த வரிகள் ஸ்பானிய மொழியில் மட்டுமே சொல்லப்பட முடியும்.

ஃபிரெஞ்சு மொழியின் ஒலி என்னால் ஒத்துக்கொள்ள முடியாததாயிருக்கிறது. பிற லத்தீன் மொழிகளின் ஒலியதிர்வை அது கொண்டிருக்கவில்லையென்று நினைக்கிறேன். ஆனால் ஹ்யூகோவின் இதுபோன்ற பிரமாதமான வரிகளுக்கு இடமளித்திருக்கும் ஒரு மொழியைப் பற்றி எப்படி ஒருவர் மோசமாக எண்ண முடியும்?

*L' hydre - Univers tordant son Coprs*
*e'Calle' d' astres*



படிப்பகம்

www.padippakam.com

எப்படித் தவிர்க்கமுடியும் இப்படிபட்ட ஒரு மொழியை, அதில்லாமல் இப்படிபட்ட வரிகள் சாத்தியமில்லை எனும்போது.

ஆங்கிலத்தைப் பொறுத்தமட்டில், பழைய ஆங்கிலத்தின் திறந்த உயிரெழுத்துக்களைத் தொலைத்துவிட்ட குறைபாடு அதற்கு உள்ளதென்று நினைக்கிறேன். இருந்தாலும்,

*And shalee the yoke of inauspicious stars*
*From this World - Wearied flesh*

போன்ற வரிகளை அது ஷேக்ஸ்பியருக்கு சாத்தியமாக்கியது.

ஒரு மொழியை நான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் அந்த ஒரு மொழியைத் தேர்ந்தெடுப்பதற்கும் காரணங்களில்லாமலில்லை அந்த மொழி, பல சொற்களாலாக்கப்பட்ட சொற்களை உருவாக்கச் சாத்தியமுள்ள (ஆங்கிலத்தைப் போல, ஆனால் இன்னும் அதிகமாக), திறந்த உயிரெழுத்துக் களையும் நுண்மையான இசையையும் கொண்ட ஜெர்மானிய மொழியாகத் தானிருக்கும். இத்தாலிய மொழியைப் பொறுத்தமட்டில் commedia போதுமானதாயிருக்கிறது.

பல்வேறு மொழிகளுக்கிடையில் இவ்வளவு பெரும் அழகு விரவிக் கிடக்கிறதென்பதை விட பிரமாதமான விஷயம் வேறொன்றுமில்லை. என் ஆசிரியரும், ஸ்பானிய - யூதப் பெருங்கவிஞருமான ரஃபேல் கன்ஸினோஸ் அஸ்ஸேன்ஸ் நம்மிடம் விட்டுச்சென்ற கடவுளைநோக்கிய பிராத்தனையொன்றில் கூறுகிறார், ''கடவுளே, இவ்வளவு அழகு இல்லாமலிருக்கட்டுமாக".

ப்ரௌனிங் கூறுகிறார்

*இருப்பதிலேயே பத்திரமாக*
*நாமிருக்கும்போது, இருக்கிறதொரு*
*அஸ்தமனத்து வருடல்,*
*பூவின் ஓசையிலிருந்தொரு கற்பனை,*
*யாரோ ஒருவரின் மரணம்,*
*யூரிப்பிடிஸிடமிருந்து*
*ஒரு குழு-இசைமுடிவு*
*நாம் மறுபடித் தோற்கிறோம்.*

அழகு நமக்காகப் பதுங்கியவாறு காத்திருக்கிறது. நாம் உணர்வுடையவர் களாயிருந்தால், அனைத்து மொழிகளின் கவிதைகளையும் உணர்வோம்.

கீழைத்தேச மொழிகளை நான் கற்றிருக்க வேண்டும். மொழிபெயர்ப்புகள் வாயிலாகத் தான் அவற்றை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவைகளின் வீரியத்தை, அவற்றின் அழகின் தாக்கத்தை உணர்ந்திருக்கிறேன். உதாரணத்துக்கு, பாரசீகக் கவிஞர் ஹஃபீஸின் அந்த வரி, 'நான் பறந்துசெல்கிறேன், என் தூசு நானாயிருக்கும்' கூடுவிட்டுக் கூடுமாறுதலின் மொத்தக் கொள்கையும் இதிலுள்ளது. "என் தூசு நானயிருக்கும்". நான் மறுபடி மறுபடிப் பிறப்பேன். இன்னொரு நாட்டில், நான் ஹஃபீஸ் என்ற கவிஞனாயிருப்பேன். இது அனைத்தையும் உள்ளடக்கிய சில வார்த்தைகள் ஆங்கிலத்தில் நான் படித்துள்ளேன், ஆனால் பாரசீகத்தில் அது மிகவும் வேறுபட்டதாக இருக்கமுடியாது. பெருமளவில் மாற்றப்படத் தேவையற்ற அளவு அது எளிமையாக உள்ளது.

அழகு எங்கும் இருக்கிறது, நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும். பாரசீகத்தில் சற்றுக்காலம் வசித்துவந்து, உமர்கய்யாமை நேரடியாக ஃபார்ஸியிலிருந்து மொழிபெயர்ந்த என் நண்பர் ராய் பார்த்தொலோமியூ, ஏற்கனவே நான் யூகித்துவிட்டிருந்ததை எனக்குக் கூறினார்; கிழக்கில், பொதுவாக, இலக்கியத்தையும் தத்துவத்தையும் அவர்கள் காலவரிசையில் படிப்பதில்லை. தத்துவ வரலாற்றை அவர்கள், பெர்க்ஸனுடன், அரிஸ்டாட்டிலும், ஹ்யூமுடன் ப்ளேட்டோவும், விவாதிப்பது போல அனைத்தையும் ஒரே காலத்தில் படிக்கிறார்கள். ட்யூஸ்ஸனையும், மாக்ஸ்முல்ல ரையும் இது பெருமளவில் பாதித்தது, அவர்கள் வாசித்த எழுத்தாளர் களின் காலவரிசையை அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை.

முதலாம் நூற்றாண்டு ஃபொனீஷியக் கடலோடிகளின் மூன்று பிரார்த்தனைகளைக் கூறி முடித்துக்கொள்கிறேன். கடலில் தொலைந்து போகுமளவு கப்பல் சென்று



படிப்பகம்

www.padippakam.com

விட்டபோது இந்தப் பிரார்த்தனைகள் கூறப்பட்டன. முதலாவது;

*கார்தேஜின் தாயே, என் துடுப்பைத் திருப்பியளிக்கிறேன்*

கார்தேஜின் தாய் என்பது, டிடோவின் ஊரான டைர் நகரம். பின்பு, ''என் துடுப்புக்களைத் திருப்பியளிக்கிறேன்.''- அசாதாரணமான ஒன்று இங்கிருக்கிறது; ஃபொனீஷியன் ஒருவன், தன் வாழ்க்கையை ஒரு துடுப்புப் போடுபவனாகத்தான் மேற்கொள்ளமுடியும். அவன் தனது வாழ்க்கையை முடித்துவிட்டான். மற்றவர்கள் துடுப்புப்போடுவதைத் தொடர்வதற்காகத் தன் துடுப்பைத் திருப்பியளிக்கிறான்.

இன்னும் சோகமான மற்றொரு பிராத்தனை;

*நான் தூங்குகிறேன்; இப்போதைக்கு*
*மறுபடித் துடுப்புப்போடுகிறேன்.*

அந்த மனிதன், வேறு எந்த விதியையும் கருத்தில் கொள்ளவில்லை. வட்டமான காலம் என்ற கருத்தையும் அது காட்டுகிறது.

இறுதியாக, மிகவும் உருக்கமானதும், மற்றவைகளிடமிருந்து வேறுபட்டதுமான இந்தப் பிராத்தனை. ஏனெனில் இது விதியை ஏற்றுக்கொள்வதாகக் கூறவில்லை. அது, இறக்கப்போகும் மனிதன் ஒருவனின், தீக்கடவுள்களின் தீர்ப்புக்குள்ளாகப்போகும் ஒருவனின் விரக்தி. அவன் கூறுகிறான்;

*கடவுள்களே, என்னைக் கடவுளாக*
*விசாரிக்காதீர்கள்*
*ஆனால் சமுத்திரம் சிதைத்துவிட்ட*
*ஒரு மனிதனாக*

இந்த மூன்று பிராத்தனைகளில் உடனடியாக நாம் கவிதையின் இருப்பை உணர்கிறோம். அல்லது குறைந்தபட்சம் நானாவது உணர்கிறேன். நூலகங்களிலோ புத்தகப்பட்டியல்களிலோ, காலவரிசைப் படியான கையெழுத்துப் பிரதிகளின் ஆய்வுகளிலோ, மூடப்பட்ட புத்தகங் களிலோ, இல்லாத அழகியல் நிகழ்வு இதில் உள்ளது.

ஃபொனீஷியக் கடலோடிகளின் அந்த மூன்று பிரார்த்தனைகளை, புனித பாலைப்பற்றிய "மனிதர்களின் பாங்குகள்" என்ற கிப்ளிங்கின் கதையில் படித்தேன். அவை நம்பகமானதா (அவர்கள் சொல்வது போல்) அல்லது கிப்ளிங் என்ற பெரும் கவிஞரால் அவை எழுதப்பட்டனவா? இந்தக் கேள்வியை உருவாக்கிக் கொண்டதும் நான் குற்றவுணர்வு கொண்டேன, ஏனென்றால் தேர்ந் தெடுப்பதால் என்ன பயன்? சிக்கலின் இரண்டு கொம்புகளான இரண்டு சாத்தியங்களையும் பார்ப்போம்.

முதலாவதன்படி, கடலில் மட்டுமே வாழ்க்கைகொள்ளமுடியும் கடல்மக்களான ஃபொனீஷியக் கடலோடிகளின் பிரார்த் தனைகளை நாம் எடுத்துக்கொண்டுள்ளோம். ஃபொனீஷிய மொழியிலிருந்து அவை கிரேக்கத்துக்குச் சென்றதாகவும், பின்பு கிரேக்கத்திலிருந்து லத்தீனுக்கும், லத்தீனிலிருந்து ஆங்கிலத்துக்கும் சென்றதாக நாம் கூறலாம். கிப்ளிங் அவற்றை மறுபடி எழுதினார்.

இரண்டாவதன்படி, பெரும் கவிஞரான கிப்ளிங், ஃபொனீஷியக் கடலோடிகளைக் கற்பனைசெய்கிறார். ஏதோ ஒருவகையில் அவர் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கிறார், ஒருவகையில் அவரே அவர்களாயிருக்கிறார். வாழ்க்கையை, கடலிலுள்ள வாழ்க்கையாகக் கொள்கிறார், இந்தப் பிரார்த்னையை அவர்களது உதடுகளில் பதிக்கிறார். அனைத்தும் கடந்தகாலத்தில் நிகழ்ந்தன. ஃபொனீஷியக் கடலோடிகள் இறந்து விட்டார்கள், கிப்ளிங் இறந்துவிட்டார். இந்த இரண்டு ஆவிகளில் எது இந்த வரிகளை எழுதியது அல்லது யோசித்தது என்பது எப்படியிருந்தால் என்ன?

இந்தியக் கவிதையொன்றில் ஒரு விநோதமான உருவகம் உள்ளது. அதை முழுதுமாகக் கூறமுடியுமா என்பதை என்னால் நிச்சயித்துக் கூற முடியவில்லை. இமயமலை என்பது- அந்த மலையும் அதன் சிகரங்களும், கிப்ளிங்கைப் பொறுத்தமட்டில் பிற மலைகளின் முழங்கால்களே- இமயமலை என்பது சிவனின் சிரிப்பு - அந்த உயர்ந்த மலைகள் ஒரு கடவுளின், உக்கிரமான ஒரு கடவுளின் சிரிப்பு. அதிரவைக்கும் உருவகம் அது.



படிப்பகம்

www.padippakam.com

என்னைப் பொறுத்தவரையில் அழகு என்பது பௌதீகரீதியான ஒரு உணர்வு, நம் முழு உடலால் உணரக்கூடிய ஒன்று. தீர்வொன்றின் முடிவல்ல இது. விதிமுறைகளின் வழி நாம் அங்கே வந்து சேர்வதில்லை. ஒன்று நாம் அழகை உணர்வோம், அல்லது உணர்வதில்லை.

17ம் நூற்றாண்டில், ஏஞ்சலஸ் சைலீஸியஸ் என்ற வினோதமான வகையில் நிஜமான, கவித்துவமான பெயரை ஏற்றுக்கொண்ட கவிஞர் ஒருவரின் முக்கியத்துவம் வாய்ந்த வரியைக் கூறி இதை முடிக்கிறேன். இந்த இரவு நான் கூறிய அனைத்து விஷயங்களின் சுருக்கம் அது - அவற்றை நான் தர்க்க அறிவின் வாயிலாகவும், பாசாங்கான தர்க்க அறிவின் உதவியுடனும் கூறினேன் என்பதைத் தவிர. அதை முதலில் ஸ்பானிய மொழியிலும் பின்பு ஜெர்மனிலும் கூறுகிறேன்.

*La rosa sin proque' florece porque florece*

*Die Rose ist ohne Warum; Sie bliihet weil sie bliihet.*

*[The rose has no why, it flowers because it flowers]*

ஏன் என்பது ரோஜாவிடமில்லை, அது பூக்கிறது ஏனென்றால் அது பூக்கிறது.

**1977 ஜூனிலிருந்து ஆகஸ்டுக்குள்ளாக ப்யூனோஸ் அயர்ஸின் Teatro Coliseo வில் ஏழு வெவ்வேறு தலைப்புகளில் போர்ஹேயால் நிகழ்த்தப்பட்ட உரைகளில் Poetry என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட உரை. பின்னர் பதிப்புக்காக அவரால் திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப் பட்டது.**

***தமிழில் : சுபத்ரா***

---




பாழியெனும் ஒற்றை வார்த்தையின் முடிவற்ற அகராதி நவீனப் படிகமாக மாறுவதற்கு மரபுப் பிரதிகளில் படர்ந்த திராட்சைத் தோட்டத்தில் கொடிவெட்டி தலைமுறையாகப் பதியம் போட்டு கால்நாட்டி மனிதஞாபகத்தின் அழுத்தமான ரூபிநிறக் கோப்பைகளில் தேவதாசிகளின் கோட்டுருவங்களைத் தீட்டும் திராட்சைநிற வயலின் வில் சிறகடிக்கப்பில் பறந்த தாய்வழி இசைமரபை என் ரத்த அலை ஸ்பரிசித்துக் தலை வணங்குகிறது.

நிகண்டு வடிவத்தைப் பின்பற்றி, பல பொருளுடைய ஒரு சொல்தான் இந்நாவல்.

பாழி (நாவல்), கோணங்கி, விலை ரூ. 185/-, வெளியீடு: பார்க்கர், 293, அகமத் காம்ளக்ஸ் 2வது மாடி, ராயபேட்டை நெடுஞ்சாலை, சென்னை-14., தொலைபேசி: 8215684



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்வு


# ம. மதிவண்ணனின் நெரிந்து...

## கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு

கடந்த 30-7-2000 ஞாயிறு காலை மேட்டூர் 'தேடல்' சமுக கலை இலக்கிய அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வில் மதிவண்ணனின் நெரிந்து... கவிதைத் தொகுப்பை அழகியபெரியவன் வெளியிட மருதாசலம் பெற்றுக் கொண்டார். ஓவியர் உலகநாதனின் ஓவியங்களும், புகழேந்தியின் ஓவிய ஒளிப்படங்களும் அரங்கில் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. இலக்கிய ஆர்வலர்கள் சுமார் 80பேர் நிகழ்வில் கலந்து கொண்டனர். அ. மார்க்ஸ், அழகிய பெரியவன், அ. கார்த்திகேயன், ஓவியர் உலகநாதன், ஜே.வி. ராஜேந்திரன், வை. சரவணன் ஆகியோர் நூலை அறிமுகம் செய்து கட்டுரை வாசித்தனர். கவிதாசரண் அனுப்பி வைத்த கட்டுரையை பழனியப்பன அரங்கில் வாசித்தார். நிகழ்வை வீ. காந்திலெனின் தொகுத்து வழங்கினார். ரெண்டாவது அமர்வில் கதா விருது பெற்றமைக்காக பெருமாள் முருகனின் படைப்புகள் குறித்த தம் பார்வைகளை எழிலரசி, கு. மணிகண்டன், கவிஞர் சிபிச்செல்வன் ஆகியோர் கட்டுரை வடிவில் முன் வைத்தனர். மதிவண்ணனின் கவிதைகளை அறிமுகப்படுத்தி வாசிக்கப் பட்ட கட்டுரையிலிருந்து சில பகுதிகள்-

***அழகியபெரியவன்***

வரலாறு முழுவதும் ஆயுதங்களையும் சொற்களையும் பறிகொடுத்துவிட்டு நிற்கும் தலித்துக்களுக்கு இன்று அரசியலில் ஆயுதமாய் கலகமும், இலக்கியத்தில் ஆயுதமாய் சொற்களும் உள்ளன. தலித் அனுபவங்களைப் பதிவுசெய்வது கலகச் செயல்பாடாகி எழுதுபவனையும் வாசிப் பவனையும் அரசியல் செயல்பாட்டிற்கு இழுத்துச்சென்று விடுகிறது. நெடுங்காலமாய் பதிவு மறுக்கப் பட்டிருப்பதால் தலித்தின் சொற்கள் விசையூக்கத்துடன் திரண்டுமோதி படைப்பாளியின் மேல் வந்து விழுகின்றன.



எதைச்சொல்ல - எந்தச் சொற்கள் என்று யோசித்துத் தெரிவு செய்யும் முன்பே தன்முனைப்புடன் இயல்பாக அவை பீறிட்டுக் கிளம்புகின்றன. ஆதிக்க சக்திகளின்



படிப்பகம்

www.padippakam.com

அனுபவங்களின் உக்கிரத்தை, கண்ணீரை என எதையுமே எளிதாய்ச் சொல்லிவிட முடியாதபடிக்கு நெருக்குகிறது. எனவே இதுவரை பயன்பாட்டிலுள்ள எழுத்து மொழியை முதலாவதாக தலித் தன் படைப்புகளில் உடைத்தெறிய வேண்டியிருக்கிறது. அத்தகைய தலித்மொழியை வீரியத்துடன் கையாள முடியாமல் போனதே தலித்படைப்புகளின் தேக்கநிலைக்குக் காரணமாகிவிட்டது. இதுகாறும் வரலாற்றின் பக்கங்களில் பதிவுபெறத் துடித்துக் கொண்டிருக்கும் அலறல்களில் சிலவற்றை நெரிந்து பதிவு செய்துள்ளது.

விரக்தி, நடுக்கம், உட்குமைந்து முடங்கல்... என்கிற தீவிர உணர்வுநிலையில் அசலான ஒரு தலித் மொழியின் வெளிப் பாடாய் மதியின் கவிதைகள் இருக்கின்றன. அரசியல் தளத்திலும், கருத்தியல் தளத்திலும் காலங்காலமாய் நின்று மல்லுக்கட்டும் தலித்தின் பிம்பத்தை - நீண்ட தெருவினை கனத்த மூட்டைகளை முதுகில் சுமந்து கொண்டு இடையறாது பெருக்கிக் கொண்டிருக்கும் ஒருவனாக கவிதை உயிர்ப்பித்து காட்டுகிறது. நிறுவப்பட்ட அறமதிப்பீடுகளுக்கு முன்பாக கீழானதாகக் கருதப்படுபவற்றை கலகச் செயல்பாடாக ஆக்கிக்கொள்கிறது - செத்த மாட்டிரலைச் சுட்டுத்தின்று மதியின் பாட்டன் ஆதிக்கசாதியின் முகத்தில் விட்ட குசு.

தலித்மக்களின் கலகச்செயல்பாடென்பது சமூகம் ஒதுக்குபனவற்றை அதற்கெதிராகக் கடைபிடிப்பதும்-நிகழ்த்திக்காட்டு வதுமாகும். வேறெந்த இனக் குழுவிற்கும் இல்லாத அபார்ஷன் (கவிதை-பக்.7) மட்டுமல்ல குழந்தையே பெற்றுக்கொண்ட பெண்களுடன் இணைந்துவாழும் மனிதப் பண்பு தலித் மக்களுக்கே உண்டு. மனம் குறைந்த பாலியல் விளைவுகளோடு யோக்கியப் பிம்மங்களுடன் திரியும் வக்கிரப்புத்திகளைக் கிழித்துக் காட்டுகிறது சில கவிதைகள். சாதியமும், குடும்பமும், சமூகமும் பாலுறுப்புகள் சார்ந்த வரையறைகளின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்ட சூழலில், முகங்களை மறந்து சுற்றியிருப்போர் பாலுறுப்புகளைக் கண்காணிப்பதோடு முடிந்து விடுகிறது சகமனிதர் மீதான அக்கறைகள் என நக்கல் செய்கிறது ஒரு கவிதை. (பக்.20) தலித் பெண்களின் மீதான பாலியல் வன்முறைகளைக் களைய தொல் தெய்வத்தின் அரிவாளைக் கேட்டும் தலித்துக்கு அவனின் கடவுளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் வந்து விடுகிறது.

சமூகந்தான் 'தலித்' என்கிற அடையாளத்தை விலக்கிவைத்தும், ஒடுக்கி வைத்தும் ஒருவனுக்கு வழங்குகிறது. தலித்தென்று சொல்லிக்கொள்வதில் நாய்மோண்ட கல்லாக இருக்கத் தேவை யில்லை. இப்படிச் சொல்வதுகூட ஒரு கலகச் செயல்பாடே. அசூயை அடையாமல் எழுதிக்கொள்வது நெரிந்தை முன்வைத்து தலித் கவிதை களுக்கான அடையாளமாகக் கருதப்படலாம். தலித்தின் புலம்பலும் அவலமுமான வாழ்வில் கோரமும் பரிதாபமுமான நிமிடங்களை மட்டுமே பொத்தி வைத்திருக்கும் கவிதைகள் அவனின் இளைப்பாறல், அழகுணர்வு.... இவற்றின் மீதெல்லாம் இன்னமும் திரும்பவில்லை. வரலாறு முழுவதும் நாய் ஏவிவிட்ட அவனிடமிருந்தும் அவன் ஏவிவிட்ட நாயிடமிருந்தும் தப்பிய கிலியைப் பகிர்ந்துகொள்ளவே நேரமின்றி நிற்கும் தலித்திடம் திணைகளைத் தூக்கிக் கொணரவில்லை எனக் கேட்பதில் எவ்வித நியாயமுமில்லை.

கே.வி. ராஜேந்திரன்

மதிவண்ணனின் நெரிந்து... கவிதைகள் சமூகம், அரசியல், பொருளியல்... மற்றும் தனிமனித உணர்வுகளையும் புரட்டிப் போடுகிறது. கட்டுடைக்கிறது. சமுகத்தின் இருண்ட பகுதிகளில் ஒடுக்கப்பட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் தலித்தின் குரலாக பக்கங்கள்தோறும் தெறித்துப்படர்கிறது. அடக்குமுறைகளின் விளிம்பில் நின்றுபேசும் கவிதைகள் நிலவும் மொழியை அறுத்து தமக்கான தனித்த மொழியைப் படைத்துக் கொள்கின்றன.

தலித் மக்களின் கண்ணீரையும், கோபத்தையும், காதலையும் மட்டுமல்ல அவர்களைப் பரிவின் பேரால் காயடிக்க நினைப்பவர்களையும், குத்திக்காட்டி சொரணையை தூண்டுகிறது. தம்



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்படையான பேச்சினால் - ஆதிக்க சாதியினரின் குற்றவுணர்வைத்தூண்டி தம்மைத்தாமே செருப்பாலறைந்து கொள்ளச் செய்கிறது மதிவண்ணனின் கவிதைகள்.

**அ. கார்த்திகேயன்**

நெரிந்து... தொகுப்பில் எதிர்மரபுசார்ந்த செய்திகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நுட்பமான எதிர்மரபுச் சொல்லாடல்களை உருவாக்குவதே தலித் இலக்கியத்தின் தனித்தன்மை. சங்க இலக்கியம் தொடங்கி இன்றைய நவீன இலக்கியம் வரை பயின்று வந்துள்ள தொன்மங்களுக்கான வாசிப்பு களை விலக்கிவிட்டு புதிய வாசிப்புகளை தலித் இலக்கியமே நிர்மாணிக்கிறது. நிலவி வருகின்ற புனிதங்களையும் நாகரிக உசாவல்களையும் உடைத்து தற்காலப் போராட்ட நிலைமைகளை மய்யப்படுத்திப் பேசும் புதிய தொன் மங்களைக் கட்டமைப்பது தலித் இலக்கியத்தில் மட்டுமே சாத்தியமாகிறது. இங்கே மதியின் கவிதையொன்றில் பன்னிக்கறியின் மெதனை படிந்த கைகளில் கொடுவாளேந்தி வரும் தொல்குடித்தலைவனுடன் நடை பெறும் சமகால அரசியல் உரையாடல் ஒரு சிறப்பான முயற்சி (கவிதை பக்.41)

அரசியல் எதிர்வினையை உசுப்பி விடுவது, மய்யத்திற்கு எதிரான கலகக்கூறுகள் கொண்ட அரசியல் நிகழ்வுகளை உருவாக்குவது, போராடும் சூழலை அமைத்துத் தருவது.... போன்ற இவை தலித் இலக்கித்தின் புறச் செய்ல்களாக அமைகின்றன. அப்படியான செயலூக்கமுள்ள ஒரு தொகுப்பாக நெரிந்து.... விளங்குகிறது.

**வை. சரவணன்**

நம்முள் தோன்றும் எல்லா உணர்வு களையும் மனவலிகளையும் மற்றவர் களோடு பகிர்ந்துகொள்ள முடியும், அதன்மூலம் மனசை ஆற்றிக்கொள்ள முடியும் என்பதெல்லாங்கூட பம்மாத்துக் கள்தான். யாரும் அனுபவித்தா லன்றி எல்லா வலிகளையும் உணர்ந்துவிட முடியாது. தம் அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுவதில் ஆசுவாசப் படுத்திக் கொள்ள முடியாத உணர்வுகளோடும், வலிகளோடும் அலைவுறும் மதியின் கவிதைகள். உள்மனப்பிரதிகளையே ஒரு படைப்பாளி தன் படைப்புகளினூடாக அர்த்தப்படுத்திக் கொள்கிறான். பகீரதப் பிரயத்தனப்பட்டு கவிதைக்கெனப் பாதுகாக்கப் பட்டு வந்த சொற்களெல்லாம் காலாவதியாகி விட்டதை நெரிந்து... அறிவிக்கிறது. அதனால்தான் மார்புக்கு பதில் முலையும், தென்றலுக்கு ஈடாக குசுவும், மனிதக் கழிவினிடத்தில் பீயும்... ஆன சொற்கள் காட்டமாக வந்து விழுகின்றன. நாய்களோடு மனிதர்களும், பூக்களும் பீவாளிகளும் கலந்துவந்து நம்மை கலவரப்படுத்துகின்றன.

இந்தத் தொகுப்பை பலர் படிக்காமல் விடலாம். படித்தும் பிடிக்காமல் முகஞ் சுளிக்கலாம். ஆயினும் இதுகுறித்து விசாரணை செய்ய எவருக்கு அருகதை இருக்கிறது? மதியின் வரிகளிலேயே சொன்னால் தலித்தை எழுதும் உரிமைக்காக முண்டாதட்டிக் கொண்டு வரும் பண்பாளனே.... சொல்லப் பதில்லையெனில் தூரமோடிப்போ... எல்லாவத்தையும் பொத்திக் கொண்டு

**கவிதாசரண் (கட்டுரையிலிருந்து)**

உண்மையில் கவிதை குறித்த மதிவண்ணனின் மதிப்பீடு என்னவென்பது ஒரு கவனத்திற்குரிய கேள்வியாகிறது. காகிதத்தில் பொதிந்து வைத்த கவிதை ஒரு மிருகப்புணர்ச்சியின் வக்கிரத்துளி படர/ கிழிந்து கிடக்கும் யோனி மயிர் துடைக்கவும் / பிரயோஜனப்படாது என்கிறார் ஓரிடத்தில். ஆனால், நக்கலான ஒரு நல்ல கவிதையைக் கொண்டுதான் 'மக்கள் கவிதை' அருளிச் செய்த சைவப்பிள்ளைமார் கவி விக்ரமாதித்யனை அவரால் விளாச முடிந்திருக்கிறது. இந்தத் தொகுதியில் இடம்பெறாத வேறொரு கவிதையில்

*ரயில்வே ஸ்டேஷன் பெஞ்சுகளிலும்*
*கழிப்பறைச் சுவர்களிலும் பொறிப்பதற்கு*
*எல்லா அவன்களுக்கும்*
*ஒவ்வொரு அவள் இருக்கிறாள்.*
*இல்லையென்று சொல்லாமல்*
*இந்தக் கவிதைகளிருக்கு*
*எனக்கும்.*

என்று சொல்லி முடிக்கிறார். நமக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தோன்றுவதெல்லாம், இப்போதைக்கு இவர் கவிதையொன்றில்தான் தன்னை சுத்த சுயம்புவாகக் கரையேற்றிக் கொண்டிருக் கிறார் என்பதுதான்.

**அ. மார்க்ஸ்**

எல்லாரும் கலந்துழலும் இந்தப் பொதுவுலகில் மண்ணின் மைந்தனாக, இந்தக் கலாச்சாரத்திற்கு உரியவனாக எண்ணி வாழ்ந்துகொண்டிருக்கும் அவன் ஏதேனும் ஒரு கணத்தில் தன்னை ஒரு தலித்தாக / கறுப்பனாக உணரும்போது அவனுடைய உலகம் நொருங்கிச் சிதறி விடுகிறது. இதுவொரு வண்ணப்பூச்சாக வரலாறு முழுவதும் திரையாக வந்து கவிந்து விடுகிறது. அதனூடாகத்தான் அவன் பயணப்படவேண்டும். இவ்வாறு பொதுமை, மய்யம் போன்றவற்றிலிருந்து வெளியேற்றப்பட்டவனாகத் தன்னை உணருவதுதான் அவனுக்கான (Initiation) (உருப்பெறல்) எனலாம்.

மேலை நவீன இலக்கியச் சூழலில் டி.எஸ். எலியட் போன்றோர் 'நான்' என்பதிலிருந்து விலகிக் கடந்து செல்லும்போதே படைப்புமனமும் - கவிதையும் பிறக்கும் என்கின்றனர். நமது சூழலில் ஒரு ஆதிக்கசாதிக்காரனுக்கு வேண்டுமானால் இக்கூற்று பொருந்தலாம். உதாரணமாக பூணூல் அணிதல் பார்ப்பனருக்கு தமது சுயத்தை உறுதிசெய்யும் - அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் - ஒரு கலாச்சார நிகழ்வு. முப்புரி நூலணிந்து இரண்டாம் பிறப்பெடுத்தவுடன் அவன் பெறும் Cultural Power-னால் எல்லாவற்றையும் வழிநடத்தும் மனிதனாக மாறுகிறான். ஆக அதைக் கழற்றி எறியும்போது அவன் தனது சுயத்தை - அதிகாரத்தை - 'நானை' மறுப்பவனாக மாறுகிறான். அத்தகைய மாற்றத்தினூடாக ஒரு படைப்பாளியாக அவன் உருவாகக்கூடும்தான்.

ஆனால் ஏற்கனவே சுயம் / நான் என்பதே இழிவுக்குரியதாக அவமானம் கொள்ளத் தக்கதாக கேவலமானதாக உணர்ந்திருக்கும் ஒரு தலித்துக்கு 'நான்'னை மறப்பதே. அதிலிருந்து தப்புவதே வாழ்க்கையாக இருக்கிறது. 'நானை' உறுதிசெய்தல் ஆதிக்கச் சாதிக்காரனின் வாழ்க்கையெனில் நானிலிருந்து தப்புவதே தலித்தின் வாழ்க்கையாக இருக்கிறது. காதலியைக் கொஞ்சும்போதுகூட இங்கே 'நான்' மதிவண்ணனை சுருட்டிக் கொண்டுபோய் ஒரு மூலையில் கிடத்தி விடுகிறது. (கவிதை பக்.8) நானிலிருந்து விடுபடுவதுதான் இலக்கியம் என்று சொன்னால் தலித் மக்களின் வாழ்க்கையே அதுவானதால் அவர்கள் வாழ்க்கையை எழுதுவதே இலக்கியமாகி / கவிதையாகி விடுகிறது.

ஒரு ஆதிக்கசாதிக்காரன் தனது நானை எவ்வாறு கடக்கிறான்? ஒன்று தனது பாரம்பர்யங்களை உணர்ந்து அவற்றைக் காப்பதினூடாக இரண்டாவதாக தனக்கு மேலான ஒன்றை ஏற்று தனது சுயத்தை 'நானை' அதற்கு அர்ப்பணிப்பதன் மூலமாக அவன் கடவுள், மதம், நாடு, மொழி, இனம்... போன்ற அடையாளங்களினூடாக தனது நானை சிதறடித்துக்கொண்டு அவற்றுள் கரைந்து போவதில் அவன் உயர்வு பெறுகிறான். தமிழின் பக்தி இலக்கியம் இதற்கு முழுமையான சான்றாகும். மண்ணும் இமயமலை எங்கள் மலையே... செந்தமிழ் நாடெனும் போதினிலே... என்று பாரதியும், சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும் என்று பாரதிதாசனும் தம் சுயம் அழித்து மொழியினூடாக, நாட்டுப்பற்றினூடாக அடையாளங்கொள்வது இங்கே நினைவுகூர வேண்டும்.

ஆனால் 'நான்' ஐக் கேவலமாக எண்ணித் தப்ப முனையும் தலித்துக்கு இப்படி 'நானை' சிதறடித்தல் தேவையா? மாறாக சுயத்தை உறுதி செய்து கொள்ளுதலே ஒரு தலித் படைப்பாளியின் முதன்மைப்பணியாகும். இங்கேதான் எலியட்டிலிருந்து நாம் நீட்ஷேவுக்குப் பாயவேண்டியுள்ளது. நீட்ஷேயின் will to power (விருப்புறுதி), பெரியாரின் சுயமரியாதை... கருத்தாக்கங்களே ஒரு தலித்துக்கு தன் சுயத்தைத் தக்கவைத்துக் கொள்ளுதலில் உதவுகின்றன. அடித்தள மக்களை நோக்கி, "விடுதலை வேண்டிநிற்பவன் - உடைமை, அதிகாரம், பந்தபாசம்... போன்ற பற்றுக்களை மட்டுமல்ல மதம், மொழி, சாதி, நாடு,



படிப்பகம்

www.padippakam.com

கடவுள்... போன்ற அனைத்தின் மீதான பற்றுக்களையும் விட்டுவிட வேண்டும்" என்று பெரியார் சொன்னதை இங்கே நினைவு கொள்ளவேண்டியதிருக்கிறது. நீட்ஷேயின் "கடவுள் இறந்துவிட்டான். அதிகாரங்களின் காலம் முடிந்துவிட்டது. ஒழுக்கம், அறம், நீதி போன்றவற்றிற்கான தீர்வு வெளியிலிருந்து வரமுடியாது. எனக்கு வழிகாட்டி நானே. (சுயமரியாதை) எல்லைவரை செல்வேன்"... போன்ற கருத்தாடல்களையும் இத்துடன் இணைத்துப்பார்க்க வேண்டும்.

இங்கே ஒரு தலித்தாக தன் சுயத்தை உறுதிசெய்து கொள்வதாகவும், ஆதிக்க சாதியின் சுயத்தை - ஸ்தானத்தை - பீடத்தை கேள்விக்குள்ளாக்கித் தகர்த்தெறிவதாகவும் ஆன இரண்டு வழிகளிலும் மதியின் கவிதைகள் முனைப்புடன் செயல் படுகின்றன.

நவீன கவிஞர்கள் பலரிலிருந்தும் மதியின் கவிதைகள் வேறுபட்டு நிற்கின்றன. மண்ணின் கவிஞராக அறியப்படும் பழமலையின் கவிதைகளில் கூட தன் ஊர், உறவுகள், ஆறு, செடிகொடி, மாடு... போன்றவை பாடு பொருளாகின்றன. மதிவண்ணனுக்கு தம் கவிதைகளில் இவைகுறித்துச் சொல்ல ஏதுமில்லை. இந்த நாடு, மொழி, ஊர், ஆறு, மலை, மனிதர்கள்... எல்லாவற்றிலிருந்தும் அவன் அன்னியப் பட்டவனாய் அகதிமன நிலையில் அவன் இருக்கிறான்.

*அவன் ஏவிவிட்ட நாயிடமும்*
*நாய் ஏவிவிட்ட அவனிடமும்*
*சிக்கிவிடாது தப்பியோடிய கிலியைப்*
*பகிர்ந்துகொண்டிருக்கிறேன்.*
*திணைகளைத் தூக்கிக் கொணரவில்லை*
*யென*
*ரொம்பத்தான் சடைத்துக் கொள்கிறாய்...*
*(பக்.11)*

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தலித் இலக்கியம் தமிழில் அறிமுகமானபோது மய்ய நீரோட்ட இலக்கியப் பிதாமகன்கள் முதலில் முணுமுணுத்தனர் - எதிர்த்தனர் - புறக்கணிக்க முடியாது என்றானபோது மேலோட்மாக அங்கீகரித்தனர். தம் கலை-அழகியல் அளவுகோல்களை வைத்து தரமதிப்பீடு செய்தனர். ஏதேனுமொரு முகமணிந்து (மனிதநேயன்-முற்போக்கு சிந்தனையாளன்...) தம் பீடங்களைத் தக்க வைத்துக்கொள்வதில்- தலித் இலக்கியத் திணையும் தமிழ் இலக்கியத்தில் ஒரு வகையாக ரட்சிக்க வருகின்றனர். இந்நிலையில் தமிழ்ச்சூழலில் தலித் இலக்கியம் குறித்த விவாதங்களுக்கு பதில் சொல்லும் வகையில் மதியின் சில கவிதைகள் கவனம் கொள்ளத்தக்கன.

1. *அறிவாயா?*
*என்னை எழுதும் உரிமை நாட்ட*
*முண்டாத்தட்டும் நீ*
*சொல்ல பதிலில்லையெனில்,*
*தூரமோடிப்போ*
*எல்லாத்தையும் பொத்திக் கொண்டு.*
*(பக்.8)*

2. *ஒரு நீர்க் கயிறாய் வலியின்றிப்*
*பிணைத்திருக்கும்*
*உன் வார்த்தைகளிலிருந்து மீள*
*வேறென்ன வழி மீந்திருக்கிறது சொல்!*
*கனிவு ததும்பும் உன் விழிகள் ஒளிர*
*பரிவு சுமந்து வரும் அவ்வார்த்தைகள்*
*புறப்படும்*
*உனதந்தக் குரல்வளையைக் குதறுவதைத்*
*தவிர.*
*(பக்.30)*

இம்மாதிரியான மதியின் சில கவிதைகள் இலக்கிய நிறுவனங்களை நோக்கி நேரடியாக எறியப்பட்ட கூரம்புகள்.

**ஓவியர் உலகநாதன்**

மதிவண்ணன் பெற்றது மாதிரியான அனுபவங்களை முழுமையாக இல்லா விட்டாலும் பெரும்பாண்மையாக நானும் பெற்றிருக்கிறேன். நான் தலைமறைவாக இருந்த காலங்களில் தலித் மக்களுடன் சேர்ந்து வாழ்ந்த அனுபவங்களை மதியின் கவிதை வரிகளினூடாக இணைத்து வெளிப்படுத்து பவையாக நெரிந்து... தொகுப்பில் எனது ஓவியங்கள் அமைந்திருப்பதாகவே நான் கருதுகிறேன். எந்தவொரு படைப்பிலும் அதன் உள்முகமாகச் சென்று படைப்பின், படைப் பாளியின் அண்மையில் அதன் அந்தராத் மாவை உணரும்போது படைப் பனுபவத்தின் எல்லையை ஓரளவு தொட்டுவிடக்கூடும்தான்.



படிப்பகம்

www.padippakam.com




சும்மாகிட என்று சனாதன அனுபூதித்தள தத்துவவாதிகள் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஏதும் செய்ய இயலாத நிலையிலுங்கூட சும்மா இருந்து விடாமல் - போராட்டத் திற்கான நெருப்பை அணைத்து விடாமல் கனன்றுகொண்டிருக்க செய்யக் கோரும் முதல் கவிதை தொடங்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பாடுகளில் நோவுகளில், கண்ணீரில் கோபத்தில்... தெறித்து விழுகின்றன மதியின் கவிதைகளும் அவற்றுக்கான என் ஓவியங்களும்.

**மதிவண்ணன் ஏற்புரை**

இங்கே நண்பர்கள் வைத்த பல்வேறு விமர்சனங்களுக்கும் விரிவாக பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. குறிப்பாக கவிதாச ரணுக்கு விரிவாக எழுத வேண்டும். கவிதைகளுக்கான தலைப்புகளை நான் தவிர்த்து விட்டேன். நண்பர் சரவணன் குறிப்பிட்டதுபோல அது பல்வேறு வாசிப்புகளை சாத்தியப்படுத்தலாம்.

ஒரு சாதாரண விசயத்தை நான் பார்ப்பதற்கும் ஒரு மேல்தட்டு மனிதன் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாக செரட்டையை (தேங்காய்த் தொட்டி) நீங்கள் வெறும் தேங்காய் முடியாகத்தான் பார்ப்பீர்கள். ஆனால் அதுதான் நான் டீ குடிப்பதற்கான ஒரு பாத்திரம்.

என் கவிதைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களில், பீ. பன்னிக்கறி, மாட்டுக்கறி, குசு, நாற்றம்... இவைகளில் மட்டுமே உழலுவதாக - இதை விட்டால் ஒரு தலித்துக்கு சொல்ல வேறு ஏதும் இல்லையா என்பதாக அ. கார்த்திகேயன் போன்ற நண்பர்கள் கேட்டனர். முடியலேங்க என்பதுதான் உண்மை.

*தொகுப்பு :*

***வி. சுரேஷ்-ச. அனந்த்.***

வெளியீடு: வேறுவேறு
111-ஆ காந்தி நகர், (ப.எண் 89ஆ)
ஆத்தூர்-636102. விலை : ரூ. 20/-




அருள், ஜெ. சாந்தாராம்
எண். 1, பி.ஏ.ஒய் நகர்
குழந்தை இயேசு கோவில் அருகில்
புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர்-5
தனி இதழ் ரூ.20/-ஆண்டு சந்தா ரூ.80/-



படிப்பகம்

www.padippakam.com

கவிதைப் பட்டறை

# குதித்துக் குதித்துக் குதித்தே...

(பாஷோவும் தேவதேவனுடனுமான ஓர் உரையாடல்)

**தவளைகள்**

*குதித்துக் குதித்துக் குதித்தேநிதம் சாகின்றன*
*தூரம் வந்துவிட்ட தவளைகள்.*

*கரையோரத் தவளைதான் அறியும்*
*முதல் அடியும் இறுதி அடியுமான*
*அந்த ஒரே தாவலை...*

மேற்படி தேவதேவனின் கவிதையை அவரது நோட்டுப் புத்தகத்தில் வாசித்தவுடன் உடனடியாக நினைவுக்கு வந்தது பாஷோவின் புகழ் பெற்ற ஹைக்கு;

*"ஒரு பழைய குளம்*
*தவளை குதித்தது உள்ளே*
*பிளாப்"*

நான் கேட்டேன். "பாருங்கள் தேவதேவன், பாஷோ எவ்வளவு குறைந்த சொற்களில் சொல்லிவிட்டார். அந்தப் பார்வையின் துல்லியம் எத்துணை ஆச்சரியம். உங்கள் கவிதை விளக்குகிறது. அனாவசியம் பேசுகிறது. தத்துவத்தைத் தனக்குள் கொண்டதுபோலும் தெரிகிறதே" என்றேன்.

தேவதேவன் சற்று மவுனமானபின் உடைந்தார்.

"பின்புலமான ஒரு போதத்தைத் தத்துவம் என்று கூறுகிறீர்கள் இல்லையா? போத மில்லாதவன் கவிஞனே இல்லை. பாஷோவிடம் அது இல்லையா என்ன? பாஷோ பழைய குளம் என்று கூறுவது என்ன? குளம் என்றால் போதாதா?" தவளை குதிக்கிறது உள்ளே பிளாப்" என்பதுவே போதும். ஹைக்கு இலக்கணத்தைக் காப்பதற்காகத்தான் குளம்கூட அவர் எழுத வேண்டியுள்ளது, என்று அவரை ஏன் நீங்கள் குறை சொல்லக் கூடாது? தவளைதான் எதற்கு? ப்ளப் என்ற ஒரு ஒலி போதாதா? கவிதை ரசிகனுக்கு?"

எனக்கு தேவதேவனின் குறிப்புப் புத்தகத்தைவிட்டு வெளியேறாத ஒரு வரிக் கவிதையொன்று நினைவுக்கு வந்தது. (எல்லா ஒலிகளிலும் என்பெயர் ஒலிக்கிறது) அவரது கோபத்தை ரசித்தபடி பேசாமல் இருந்தேன்.

கவிஞன் தன் தரிசன அனுபவத்தைக் கூறுகிறான். அனுபவத்தைப் பிறருக்கான தரிசனமாக்குவதற்கே அவன் பெரிதும் விரும்புகிறவன். அதாவது தன் தரிசனத்தை விட அதற்கு அடிப்படையான அனுப வத்தையே கூற விரும்புகிறவன். எல்லாம் சரிதான். என்றாலும் அதற்காகப் பிளப் என்று மட்டும் எழுதிக் கவிதை செய்ய முடியாது. இசையும்கூட முடியாது. தவிர்க்க முடியாத வகையில் அதற்கு மேலும் சில் முக்கியமாகக் கவிஞனின் பார்வை தேவைப்படவே செய்கிறது. பாஷோ பழைய குளம் என்கிறார். தேவதேவனோ இவ்விஷயத் தோடு முற்றிலும் வேறு படுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

*குதித்துக் குதித்துக் குதித்தேநிதம் சாகின்றன*
*தூரம் வந்துவிட்ட தவளைகள்*

இயற்கையைவிட்டு, பிரம்மாண்டத்தை விட்டு, சத்தியத்தைவிட்டு, கடவுளைவிட்டு-இன்னும் வேறு எந்தெந்தச் சொற்களில் சொன்னாலும் சரி - 'தூரம் வந்துவிட்டவர்கள்' குதித்துக் குதித்துக் குதித்தேநிதம் சாகின்றனர். பெருமை, பவிஷு, அகங்காரம், இன்னபிற வகைகள் கொண்டு எத்தனைமுறை அவர்கள் குதித்தாலும் இங்கேயிருந்து கொண்டு செய்யும் முயற்சிகள் எல்லாமே வியர்த்தமே ஆகின்றன. ஆனால் அதே வேளை ஒரே குதி, ஒரே தாவலில் அந்தப் பிரமாண்டத்தை அடைந்துவிடுகின்றவன் யார்? அந்தப் பிரமாண்டம் குளமாகவும் அதன் அண்மையே கரையாகவும் தரிசன மளிக்கிறது. 'கரையோரத் தவளைதான் அறியும் முதல் அடியும் இறுதி அடியுமான அந்த ஒரே தாவலை.

தேவதேவன் இரண்டு பக்கங்களையும் அதன் மூலம் ஒரு முழுமையையும் உருவாக்குகிறார். பாஷோ? பாஷோவும் தான். ஆனால், எப்படி? ஒரு பக்கத்தை எழுதாமலேயே. ஒரே ஒரு சிக்கல்தான். '**பழைய குளம்**' என்றுமட்டும் அவர் எழுதியிருக்காவிடில் தேவதேவன் இந்தக் கவிதையையே எழுதியிருக்க வேண்டி யிருக்காதோ? பாஷோ இப்போது நம்மிடம் இல்லை. இதை நாமேதான் கண்டுபிடித்தாக வேண்டும். ஓர் அனுபவத்தை, தன் கவிதையைவிட ஆழமான கவிதையாக எழுதுவதற்கான போதம் பாஷோவிடம் இல்லை என நினைக்கிறாரோ தேவ தேவன்?

"நாம் என்ன நினைக்கிறோம் என்பதல்ல முக்கியம். உண்மை அனாதியானது" என்றார் தேவதேவன் நான் திடுக்கிடும்படி என்றாலும் நான் நிலை குலைந்து விடவில்லை. 'குறிப்புணர்த்துதல் என்பதே படைத்தல் ஆகும். விளக்குதல் என்பது அதை அழித்தலே ஆகும்.' (to suggest is to create to name is destray) என்பது தாங்கள் அறியாததல்லவே.

*குதித்துக் குதித்துக் குதித்தேநிதம் சாகின்றன*
*தூரம் வந்துவிட்ட தவளைகள்.*

என்ற குறள் போன்ற இந்த இரு வரிகளுமே பிந்தைய மூன்று வரிகளையும் கச்சிதமாகக் குறிப்புணர்த்தத்தானே செய்கின்றன என்றேன்.

சிறு இடைவெளிக்குப் பின் ஆம் என்றார் தேவதேவன் தளர்ந்த குரலில் நிமிர்ந்து உட்கார்ந்தேன் நான். இத்துடன் இந்த உரையாடலை நிறுத்திக் கொள்வோமா என்றார்.

மறுநாள் அவரை நான் சந்தித்தபோது அவர் மேஜையில் கிடந்த அந்தக் கவிதையை மீண்டும் காணும் ஆர்வத்துடன் எடுத்தேன்.

அடித்தல் கோடுகளால் பிந்தைய மூன்று வரிகளும் நீக்கப்பட்டிருந்தன. இப்போது அது ஒரு குறள்வெண்பா வடிவில் காட்சியளித்தது. முன்பு ஒரு கவிதையை குறள்வெண் பாவுக்கான இலக்கணத்தில் அமைக்க முயன்று அந்த முயற்சி வெற்றியும் திருப்தியும் அளித்தது ஞாபகம் வந்தது (இரண்டு மிக முக்கியமான புதுக் குறள்கள் என்ற தலைப்பிட்ட கவிதை அது) வெண்பாவிலுள்ள செப்பலோசை வாய்மொழி வழியான உணர்ச்சி வெளிப்பாட்டிற்கேற்ற ஓர் இசைத் தன்மையை உடையது. வெகுகால முயற்சிக்குப் பின்னேதான் அது கண்டடையப் பட்டிருக்க வேண்டும். அப்புறம்தான் அது இலக்கணமாகி யிருக்கிறது. அதைக் கூடுமாவரை நாம் பயன்படுத்தத் தவறலாகாது என்றெல்லாம் சிலாகித்தவர், பிறகு... "ஆனால் எந்த ஓசையானாலும் அது பழக்கமாகி விடுகிறபோது அது தன் சுயநோக்கை இழந்துவிடுவதையும் ஒருவன் அறிந்து கொள்ள வேண்டும். இந்த முரண்களை நன்கு உணர்ந்தவனே சமயோசிதமாகச் செயல்பட முடியும். திடீர்திடீரென எதிர்பாராவகையில் அத்தகைய வரிகளை அமையவிடுவது நம் வாசகனின் ஆழ்மனதைத் தொட்டுவிடக் கூடியதாகும் என்றெல்லாம் அச்சந்தர்ப் பத்தில் ஊற்றெடுத்த புது உற்சாகத்தோடு அவர் கூறியதையெல்லாம் நினைத்துக் கொண்டேன். 'இரு மிக முக்கியமான புதுக் குறள்கள்' என்ற அந்தக் கவிதை அதன் செப்பலோசையில் மட்டுமின்றி குறள்களாக அமைந்த விதத்தாலும் ஒரு சூட்சுமமான கவித்துவம் ரசிக்க கிடைத்தது.

இதையும் குறள் வெண்பாவாக மாற்றுவீர்களா?



படிப்பகம்

www.padippakam.com

"கண்டிப்பாக. இன்று அதுதான் வேலை."

நான்கும் மூன்றுமாக ஏழு சீர்கள் எளிதாக அமைந்து விடுகின்றன. அதன்பிறகு வெண்பாவுக்குரிய இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய தளைகள் தட்டாமல் பார்த்துக்கொண்டால் செப்பலோசை பிசகாமல் வந்துவிடுகிறது. ஆனால் இச் சீர்ப்படுத்தும் செயல் முடிவிலும் கவிதை அமைப்பில் முன்னேற்றம் இல்லாவிடில் இந்தப் பிரதியே போதுமென்று நிறுத்திவிடுவேன் என்றார். மறுநாள் வந்து அவர் நோட்டுப் புத்தகத்தைக் காண ஆவலாக இருந்தேன்.

ஒவ்வொரு சீருக்கு மேலும் நிரை நேர், நேர் நிரை, நேர் நேர் நேர் என்றெல்லாம் எழுதி அடித்து சீர்மாற்றி சொல்மாற்றி என்னென்னவெல்லாமோ செய்து பார்த்தும் பயனற்றுப் போய் இறுதியாக முந்தைய பிரதியே 'வெற்றிப் புன்னகை' புரிய கீழே எடுத்து எழுதிவைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

வெகுநேர மவுனத்திற்குப் பிறகு அந்த இரு வரிகளையும் வெறுமே பார்த்துக் கொண்டிருக்கையில் ஓர் இழப்புணர்வை உணர்ந்தேன். பின்னோக்கிச் சென்று அதன் முதல் பிரதியைப் பார்த்தேன் சற்றுநேரம். (முதல் பிரதியைப் பார்க்க) இன்னொரு விஷயம் புரிந்தது.

பிந்தைய மூன்று வரிகளையும் குறிப்புணர்த்தும் முந்தைய இருவரிகளுமே தனித்து ஒரு கவிதையாவது போலவே,

முந்தைய இருவரிகளையும் குறிப்பு ணர்த்தும் பிந்தைய மூன்று வரிகளுமே தனித்து இன்னொரு கவிதையுமாகி,

இரண்டு கவிதைகள் சாத்தியமாவதை...

இகழ்ச்சியாகச் சிரித்தார் தேவதேவன். "இரண்டில் ஏதாவதொன்றை இழப்பதற்கான தைரியம் வேண்டும் கவிஞனுக்கு" என்றார். பெருமூச்செறிந்தேன்.

சற்று இடைவெளிக்குப் பின் மீண்டும் தினவுகொண்டு போரைத் தொடுத்தேன். எஸ்ராபவுண்டு தன் அறிக்கை ஒன்றில் ஒருவர் உபயோகித்த படிமத்தையே நீயும் உபயோகிக்காதே என்றிருக்கிறாரே.

அப்படியானால் எந்தப் படிமத்தையுமே நீங்கள் உபயோகிக்க முடியாமல் போய்விடும். அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பதைப் புரிந்துகொள்வதே நல்லது. இந்த ஹைக்குவையே கவனி யுங்கள். ஒரு பழைய குளம் - பழைய படிமம். அதில் தவளை விழுந்து புதுப்பிக்கிறது அதை இல்லையா?

எல்லாம் சரிதான். ஆனால்...

பெரும்பான்மை வாசகர்கள் பற்றித் தானே உங்களுக்குக் கவலை? எல்லாக் கவிஞர்களுமே ஒரு நெடிய பாரம்பரியத்தின் தொடர்ந்த வாரிசுகள்தான். தன் கவிதைகள் புரிந்துகொள்ளப்படுவதற்காக முடிவற்றுக் காத்திருக்கும் பொறுமை வேண்டும் கவிஞனுக்கு. ஆத்திரமோ அவசரமோ சமரசமோ கவிஞனுக்கு அழகு தருவன அல்ல. எந்நிலையிலும் தன்நிலை குலையாத பொறுமையும் உறுதியும் அவனுடையது. பஞ்சப்பாட்டுப் பாடுபவன் கவிஞனே அல்ல. எந்நிலையிலும் அவன் தன் ஆன்மாவின் ராகங்களையே இசைக்கிறான். கவிஞர்கள் அற்ப விஷயங்களில் ஈடுபடமாட்டார்கள். பிரமாண்டத்தின் மிக அண்மையில் உள்ளவர்கள் அவர்கள்....

சரி. ரொம்பக் குதிக்க வேண்டாம் என்று நான் மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டதைக் கேட்டுவிட்டவர்போல் திடுக்குற்று பேச்சை நிறுத்திக் கொண்டார் தேவதேவன்.

கவிதையின் மவுனத்தின் முன்னே; சே! எவ்வளவு ஆபாசம் இந்த உரையாடல்.

**- தேவதேவன்**



படிப்பகம்

www.padippakam.com

## நாய்

இந்த நாய்
என் இரத்தத்தை
ருசி பார்ப்பதற்கு முன்
என் வீட்டில் இருந்து
துரத்தி விடலாம் என்று
நினைக்கிறேன்

அதுயாரையும் கடித்ததில்லை
கடிக்காதபடிதான்
கட்டிப்போட்டிருக்கிறேன்
இருந்தும்,
அது என் வீட்டில் கிடப்பதால்
இங்கே வருகிறவர்கள்
நாய் கிடக்கிறது என்று
வருத்தத்தோடு வெளியேறுகிறார்கள்.

என் நாயோ திருடனையும்
பிச்சைக்காரனையும்
மட்டுமே குரைக்கிறது.

குரைக்கிற நாய் கடிக்காது
என்று எப்படி நம்புவது?

இறை. ச. இராசேந்திரன்.

## நேர்த்திக் கடன்

ரோஜா நிறத்தில்
தெரியும் அரைமுதுகும்
கறுப்பு ரவிக்கையும்
வெள்ளைப் பிராவின் அழுத்தமும்
பார்வையில் இருந்து மறைய
அருள்மிகு
சுப்பிரமணிய சாமி உண்டியலில்
இரண்டு ரூபாய் காணிக்கை
போட்டுவிட்டு நகர்ந்தேன்.

இறை. ச. இராசேந்திரன்.



படம்: A.செல்வம்




இந்தப் புத்தகம் முழுக்க முழுக்க விக்ரமாதித்யன் என்ற ஆளுமையை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. கவிதைகளின் மூலமான கவிஞனின் மூலத்தையே இந்தக் கட்டுரைகளில் மிக விரிவாக நமக்கு வழங்கி இருக்கிறார் விக்கிரமாதித்யன்.

வெளியீடு மருதா, 62/1 முதல் தளம், பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14. விலை ரூ. 40/-



படிப்பகம்

www.padippakam.com

# தருணங்களைச் சித்திரமாக்கும் கவிதைகள்

-மோகன்




சிறுகதைகளையும் நாவல்களையும் தமிழுக்குத் தந்து கொண்டிருக்கும் இளம் படைப்பாளியான பாவண்ணன் கவிதைத் துறையிலும் தொடர்ந்து தம் படைப்புகளை வெளியிட்டு வந்திருக்கிறார். உரைநடைப் படைப்பாளிகள் கவிஞர்களாகவும் இருப்பது தமிழுக்குப் புதிய விஷயமில்லை. புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி தொடங்கி வண்ணதாசன், வண்ணநிலவன் வரை பலரை முன்னோடியாகச் சொல்லலாம்.

**குழந்தையைப் பின்தொடரும் காலம்** என்ற தலைப்பில் வந்துள்ள இத்தொகுப்பில் 44 கவிதைகள் வந்துள்ளன. மிகச் சிறந்த சொல்லாட்சியும் கவிதைக்கேயான எளிமையும் நயமும் எல்லாக் கவிதை களிலுமே உள்ளன.

புகைப்படங்களாகப் பிடிக்கப்பட்ட சிறுசிறு சித்திரங்கள், மானுட வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட சிற்சில தருணங்கள், கையறு நிலையில் மனித மனத்தில் கொந்தளிப்புடன் பொங்கியடங்கும் மௌனம் ஆகியவையே பாவண்ணனின் கவிதை உலகமாக விரிந்திருக்கிறது.

பூனை, கயிற்றில் நடக்கும் சிறுமி, திரும்பி வராத குருவிகள், ஆளற்ற வெளியில் ஒரு குருடன், ஒரு சண்டைக் காட்சி, பேசவந்த பெண், ஒரு சதியாலோசனை, எளிய பதிலைத் தேடி ஆகிய கவிதைகள் சித்திரத்தன்மை வாய்ந்தவை. இவற்றில் "ஆளற்ற வெளியில் ஒரு குருடன்" கவிதை மிக முக்கியமானதாகப் படுகிறது. கவிதையை வாசித்து முடித்ததும் நாம் நம்மையே குருடராக உணர்கிறோம். இந்த உலகமே ஆளற்ற வெளியாக மாறிவிடுகிறது. உறவினர், நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என நம்மைச் சுற்றிச் சதாகாலமும் ஏகப்பட்ட கூட்டம் நெரிகிறது. எனினும் தீவிரமான மனநிலையில் நாம் தனிமையின் விளிம்புக்கே, சென்றுவிடுகிறோம். அப்போது இந்த உலகம் ஆளற்ற வெளிதானே? நடுங்க வைக்கும் தனிமையின் துயரத்தை மிகச் சிறப்பாக முன்வைக்கிறது இக்கவிதை. "பூனை" கவிதையில் மனிதனுக்கு எதிராக நிற்கிறது பூனை. "உன் மீன் எனக்கு இரையாகுமா, என்வாசல் தூய்மை தவறாகுமா" என்று பூனையை முன்வைத்து மனிதர்கள் பேசும் வார்த்தைகள் எளிமையான கோலத்தில் மனத்தில் ஆழப்பதிந்துவிடுகின்றன. தனிமையில் அடைபடுவதும் மனிதன். தனிமையில் தத்தளித்து அவதியுறுவதும் மனிதன். பெரிய வதை இது. வதையின் கணங்களை பாவண்ணனின் கவிதைகள் செறிவுடன் சித்தரிக்கின்றன.

இன்று பெய்த மழை, உன் பிறந்த நாள், ஒரு கனவு, மிதிபட ஆகிய கவிதைகள் எழுத்தினால் உறையவைக்கப்பட்ட சில முக்கிய தருணங்கள் என்று சொல்லலாம். இவற்றுள் ''மிதிபட'' முக்கியமான கவிதையாகப்படுகிறது. "மல்லாந்து கிடக்கிறது மல்லிகைச் சரம்" இந்த வாழ்வைப் பற்றிய அழகான படிமம். சூட முடியவில்லை அந்த மல்லிகைச் சரத்தை. சூட்டத் தோதான தருணத்தில் கைக்குக் கிடைக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

கிடைத்ததும் சூட்டிய வேகத்தில் நழுவி விட்டது. எவ்வளவோ எதிர்பார்ப்புகள் நடக்க வேண்டிய ஒரு தருணத்திற்கு முந்திய கணத்தில் நடந்து விடுகிறது அல்லது பிந்தி போய்விடுகிறது. ''உன் பிறந்த நாள்'' கவிதையில் நெருக்கமான பெண்ணின் கையில் பூவைத் தர இயலவில்லை. பூ இருக்கிறது. அவளும் இருக்கிறாள். ஆனால் "உன்னிடம் தர நினைத்த பூவை உன் வாசலில் வைத்துவிட்டுச் செல்கிறேன்'' என்று சொல்லத்தான் முடிகிறது. தருணங்கள் தவறிவிடுகின்றன.

ஒரு வாய் தண்ணீர், காட்டின் அழைப்பு, கண்ணாடிப் பரப்பில் ஒரு கிறுக்கல், ஆறுதல் எல்லாமே மௌனம் மிகுந்த கவிதைகள். ஏதோ ஒரு வகையில் எல்லாவற்றையும் வாழ்வோடு தொடர்பான படிமங்களாக மாற்றிவிடுகின்றன பாவண்ணனின் கவிதைகள்.

பாவண்ணன் கையாளும் கவிதை மொழியில் எளிமையும் ஈர்ப்பும் அதிகம். பல வரிகளில் தென்படும் இனிய ஓசை நல்ல தாளத்துடன் மீண்டும் மீண்டும் மனதில் அலைமோதுகிறது.


| |
|---|
| குழந்தையைப் பின்தொடரும் காலம். கவிதைத் தொகுப்பு-பாவண்ணன், வெளியீடு விடியல் பதிப்பகம், 3, உப்பிலிப்பாளையம், கோவை-15 விலை ரூ. 20/- |

# அ. குமணன் கவிதைகள்

*அத்தி பூ*
*கானகத்தில்*
*வற்றிய நீரோடையில்*
*விதவையின்*
*கண்ணீர் வரிகோடுகள்*
*கல் முலைகளில்*
*பதுங்கி*
*சாவின் நிறம் காட்டும்*
*உதிர்ந்த*
*மஞ்சள் இலைகள்*
*ஒற்றை பனைமரத்தில்*
*குருவியின்*
*திசையறியாத*
*குரலின் ஓசையில்*
*ஊர் மறையும்*

* * * *

*கண்ணில்*
*விரிந்த*
*புனல் ஓசையில்*
*புதைந்த*
*கனவு முலைகள்*
*பாசிபடர்ந்து*
*நீருக்காய்*
*மீனுக்காய்*
*காத்திருக்கிறது.*



படம்: A.செல்வம்

*கண்ணாடியில்*
*கண்ணாடி விரியன்பாம்பு*
*நாக்கின் ஓசை*
*அலைவுற*
*கை விரல்கள்*
*தீண்டாத*
*நவரத்தினகல் பாஷான*
*ஒளிக்கற்றைகள்*
*முடியாத*
*இரவின் இருளை*
*தீண்டி*
*ஒளி சிந்தியவாறு.*

* * * *

*முக்கோண பாதையில்*
*இணைக்கும் புள்ளிகள்*
*தனிமை*
*தவிப்பில்*
*அருபமாய்*
*கண்ணில் சுருண்டு*
*நூல்கண்டுகளின்*
*சிடுக்கு*
*திசைகள் அறியாது*
*வண்ணத்துபூச்சிகளாய்*
*காத்திருக்கிறது.*



படிப்பகம்

www.padippakam.com

# நிறமற்றுப்போன கனவுகள்


**(கவிதைத் தொகுதி இளவாலை விஜயேந்திரன்)**

*-கற்சுறா*

இளவாலை விஜயேந்திரன் இலங்கையின் யுத்தச்சூழலில் இருந்து 1987இல் நோர் வேயிற்குப் புலம் பெயர்ந்தவர். அக்காலத் திலிருந்து 92 வரை 5 வருடங்கள் அவர் எழுதிய 55 கவிதைகள் கொண்ட தொகுப்பே இந்த நிறமற்றுப்போன கனவுகள் கவிதைத் தொகுதி. இந்தக் கவிதைகள் எப்போதோ தொகுக்கப்பட்டிருக்க வேண்டியவை, காலம் பிந்தி சி. சிவசேகரத்தின் தூண்டுதலால் இப்போது வெளியிடுகிறோம் என கவலை கொள்கிறார்கள் வெளியீட்டாளர்கள். உண்மையில் இக்கவிதைகள் அதன் உரிய காலத்திலேயே தொகுத்து வெளியிடப்பட்டிருக்குமாயின் இத்தொகுப்பிற்கான நிலை கொள்ளல் வேறுவகையாகத் தானிருந்திருக்கும். இக்கவிதைகளுக்கான காலம் அதுவே. யுத்தம் இன்னும் முடியாதிருப்பினும் கூட.

*அது வேறொரு காலம்.*
*அது வேறொரு உலகம்.*

அங்கே சரி, தவறு என யாரும் எதையும் இலகுவாக கூறிவிட முடியாது. ஆயுதங்கள் மட்டுமே வாய் திறந்திருக்க மக்கள் எல்லோரும் மௌனியாக ஆக்கப்பட்டார்கள். எல்லா அநியாயங்களும் நன்மைக்கே எனக் கூறிய போது, இல்லை என்று மறுத்தவர்களெல்லாம் இரவோடிரவாய் காணாமல் போனார்கள். அல்லது பட்டப்பகலில் துரோகி என சுட்டுத்தள்ளப்பட்டார்கள். இப்படித்தான் அந்தக்காலத்தில் ராஜினியையும் செல்வியையும் இன்னும் பலரையும் இழந்தோம்.




இந்த யுத்தம், ஓலங் களைக் காற்றிலும், குருதியை மண்ணிலும் கரைத்து விட்டதைத் தவிர்த்து வேறேதையும் எமக்குத் தந்துவிடவில்லை.

இன்றைக்கு யுத்தவெறியர்களாலும் அதன் அபிமானிகளாலும் யுத்தம் பற்றி எழுப்பப்படும் மாய கோசங்களினிடையே இளவாலை விஜயேந்திரனின் கவிதைகள் யுத்தம் பற்றிய உண்மையைப் பேசி நிற்கும் என்றென்றைக்கும்.

நிறமற்றுப்போன கனவுகள் தொகுப்பினுள் அடங்கியுருக்கக் கூடிய கவிதைகளைப் பொறுத்த மட்டில் ஈழ யுத்தச் சூழல், அவலச் சாவுகள், கருத்துச் சுதந்திர மறுப்பு, புலம்பெயர்ந்த நிகழ்வு, அவை தரும் அச்சுறுத்தல்கள், சொந்த தேசம் பற்றிய ஏக்கம், இழந்த காதலி, பால்ய நினைவு என்று புலம் பெயர்ந்த ஒருத்தி /ஒருவன் பெற்றிருக்கக்கூடிய அல்லது எழுதியிருக்கக் கூடிய அத்தனை விடையங்களையும் விஜயேந்திரனும் கொண்டிருக்கிறார். புலம் பெயர்ந்தவர்கள் அனைவருமே இவ்வாறான சங்கட நிலையினை ஆரம்பத்தில் கொண்டிருந்தவர்களே. அதில் விஜயேந்திரனும் அடக்கம். ஆனால் ஈழ யுத்தம் பற்றியும் விடுதலை இயக்கங்களின் வன்முறை பற்றியும், மக்களின் அவலச் சாவுகள் பற்றியும் விஜயேந்திரன் கொண்டிருந்த மாற்றுக் கருத்தே அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது. இன்றும் கூட வன்முறைகள் பற்றி மௌனம் காத்துக்கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதக் கலாச்சாரத்திற்குள் அள்ளுண்டு போன கவிஞர்களையே அதிகமாகக் காணமுடிகிறது. (இந்தியா-இலங்கை என்ற பேதம் கிடையாது.) புலம் பெயர்ந்த நாடுகளிலும் ஈழத்தைப் போன்ற ஆயுத வன்முறைச் சூழல் பரவியிருந்தும் கூட அதையும் மீறி இவரது கவிதைகள் பேசுகின்றது.

....

*பின்னால் துப்பாக்கியோடு ஒருவன்*
*நின்றபடி இட்ட கட்டளைகள்*
*ஏற்க மறுத்தேன்*

*சுட்டு வெருட்டினர்*
*போய்ச் சேர்ந்தேன் பிறதேசம்*
*என்றேன்*
*உன்னை மன்னித்தோம்*
*எனக் கூறி நெற்றியிலே*
*சுட்டார்கள் மூன்றுதரம்*
*செத்தேன்.*

(கனவிலும் தொடர்வது)

....

*அவனை யார் கொன்றனர்?*
*நான் அறிவேன்தான்*
*எனக்கவரைத் தெரியும்தான் ஆனாலும்*
*என்னைக் கேளாதே*
*நான் உனக்குப் பதில் சொன்னால்*
*எனது குருதியை*
*இன்னொரு சுவரில்*
*நீ காண நேரிடும்.*

(கேள்விகளைக் கேட்காதே)

விடுதலை இயக்கங்களினது தலைமை வழிபாட்டு முறையையும் அவர்களது வன்முறைச் சூழலினையும் எதிர்த்துப் பயனின்றி ஆமாம் சாமி போடப் பழகிவிட்டனர் மக்கள். ஆதலினால் மக்கள் அநியாயச்சாவுகளைத் தவிர்க்கின்றனர் என்று இயலாத் தன்மையை

.....

*வாழ்வார்*
*வீண் சாதல் தவிர்த்து*
*காலம் வேண்டுவது கதையாது*
*இருத்தல்தான்*
*பரம்பொருளின் பெரும் புகழைப்*
*பாடிப் பணிதலின்றிப்*
*பிறிதொன்றும் பேசார்*
*இந்தக் காலத்தில் எனது மக்கள்.*

(பாடுபொருள்)

என்று குறிப்பிட்டும், கொலைகளுக்குப் பழகிவிட்ட மனித மனத்தை

*இறப்பவர் பற்றி*
*இருப்பவர்க்கு கவலையில்லை*

....

*செத்ததெல்லாம்*
*மனித உயிர்*
*சிதைந்தழுகிக்*
*காகம் குதறி*
*நாய் பிடுங்கக்*
*கிடந்ததெல்லாம்*
*மனித உடல்.*

*இவையெல்லாம்*
*நிகழ்ந்த பின்னும்*
*இன்னும்*
*சனங்களேதும்*
*பேசாதிருத்தல் அதிசயம்தான்.*

(செத்துப் போனவர்களின் சம்பாசனை)

என்று கவலை கொள்கிறார்.

தொகுப்பில் மிகச்செறிவாகவும் படிம அடுக்குகளாகவும் விழுந்த கவிதைகளுள்

....

*சல்மான் ருஷ்டி*
*உனக்கென்ன...*
*பொலிஸ் காவல்*
*எனக்கு?*

(எனது வாசகம்)

....

*நெடுநாளின் பிறகாக*
*நீட்டிச் சவம் கிடத்தி*
*நெருப்பெரிக்கும் சுடலையிலே*
*பாதிக் கருக்கலுடன்*
*மீட்டெடுத்தேன்.*

(மனம்)

என்ற கவிதை வரிகள் குறிப்பிடக் கூடியவை.

இந்த 55 கவிதைகளில் தேசத்தை இழந்து விட்டு இருக்கின்ற இடத்தையும் ஏற்றுக் கொள்ளாது தத்தளிக்கின்ற கவிதை களாகவே அநேகமானவை இருக்கின்றது. இத்தன்மை ஒரு எல்லைக்கு அப்புறம் வாசிப்பில் அலுப்பை உண்டுபண்ணுகிறது. அநேக கவிதைகள் செறிவுத் தன்மை இல்லாது இருப்பதும் கவிதைகளில் ஒரு இழுபட்ட தன்மையையே ஏற்படுத்துகிறது. மிக



படிப்பகம்

www.padippakam.com

விளக்கமான விளங்கப் படுத்தல்களுக்குள் நுழைந்து வாசகனை மிகவும் எரிச்சலடைய வைக்கிறது சில கவிதைகள்.

அடுத்து, இன்றைக்கு தமிழ் சமூகத்தில் இருக்கின்ற அதீத சிக்கல் கொடுக்கின்ற சாதீயம், பெண்ணியம் பற்றிய கவிதைகளை அதிகம் காண முடியவில்லை. சில வேளைகளில் அதுபற்றி தீவிரமாக எழுதியவை இத்தொகுதியில் சேர்க்கபடாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் ஒரு இடத்தில்

....

*சாதியும் சாறியுமாய்*
*பிரச்சனை அலசும் பெண்கள்*
*கண்ணிவெடிக்கு*
*காதும் மூக்கும் வைத்தபடி ஆண்கள்.*
(திருமணம்)

என்று திருமணங்களில் சாதி ஏற்படுத்தும் தாக்கம் பற்றி குறிப்பிடும் கவிஞர், சாதியை எப்போதும் பெண்களே காப்பாற்ற முனைவதாகவும் ஆண்கள் எப்போதும் அரசியல் மட்டும் பேசக்கூடியவர்களாக காட்ட முனைவதாகவே தோன்றுகிறது.

இறுதியாக, சேரன், கா. சிவத்தம்பி, மதுர கவி நாகராஜன், அ.செ.மு, கே. டானியல்... என மிகப்பெரிய பட்டாளமே தனது இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்ததாக முன்னுரையில் குறிப்பிடும் விஜயேந்திரன், அவர்களைத் தாண்டிய ஒரு கவிதையைத் தன்னும் இத்தொப்பில் தந்து விடாதது மிகப் பெரும் குறைபாடாகவேயுள்ளது.

*-கற்சுறா*


**நிறமற்றுபோன கனவுகள்**
**(கவிதைத் தொகுப்பு)**
*இளவாலை விஜயேந்திரன்*
**வெளியீடு:-**
**தேசிய கலை இலக்கியப்பேரவை**
சவுத்விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை 600 002
விலை 40/- ரூபா



## சிதைவுகளின் ஒழுங்கமைவு

பின்நவீனத்துவப் பிரச்சினைப்பாடுகள்
-பிரேம்ரமேஷ், விலை ரூ.150/-.




அறிதல் முறையிலும், அணுகல் முறையிலும் மரபுகள் என்று கூறப்பட்டுவந்த உறுதி வடிவங்கள் பற்றிய அடிப்படை முரண்பாட்டில் தொடங்கி புலன் முறையின் அடிப்படைகளையே மாற்றி அமைத்தல் என்பது வரை எமது தேடுதல் தொடர்ந்தபோது புதிய சிந்தனைச் சட்டகங்களை, அறிதல் அடிப்படைகளைக் கண்டடையவேண்டிய தேவையும் எமக்கு உருவானது...

*-பிரேம் ரமேஷ்*




இந்த 'ஆராரோ'வில் நான் இருக்கிறேன். எனது பால்ய காலம் உள்ளது. எங்கள் ஊர் உள்ளது. என் சின்ன வயசு சேக்காளிகள் இருக் கின்றார்கள். இது auto biographical நாவல்தான். 'ஆராரோ'
விலை ரூ. 30 /- *- சு. சண்முகசுந்தரம்*

இருபுத்தகங்களும் கிடைக்குமிடம்
காவ்யா பதிப்பகம், 16, 17th 'E' Cross,
Indira Nagar 2nd Stage, Bangalore-38




படிப்பகம்

www.padippakam.com

# CHARLES PIERRE BAUDELAIRE - 1821-1867

## சால்ஸ் பெர்ரி போதெலர்

பிரஞ்சுக் குறியீட்டியல் இயக்கத்தின் பிதாக்களுள் ஒருவர். 'போதெலெரியன்' என்றாலே நடத்தை கெட்டவன், ஆரோக்யமற்றவன், ஆபாசமானவன் என்று பொருள் ஆனால் இக்கவிதையில் அவைகளைக் காண முடியாது. இது போதெலெரின் வகைமாதிரியான கவிதை அல்ல. ஆனால் அவரது கசப்பான கவியுள்ளமும் முக்கியமாக அவரது முழுவாழ்வும் இக்கவிதையிலுள்ளதால் குறிப்பிடத்தக்க ஒரு கவிதை இது.

போதைக்கும் கிரந்திநோய்க்கும் ஆட்பட்டுச் சீரழிந்தவர் போதெலெர். புத்தி பேதலித்தும், பேச்சிழந்தும், நடக்க இயலாது முடமாகியும் தனது 46ம் வயதில் இறந்தார். இவரது ஆளுமை பிராய்டியர்களுக்கு ஆர்வமூட்டும் தளமாக விளங்கியது. வாழ்ந்த காலத்தில் மிகவும் அவமதிக்கப்பட்டார். கலை பற்றிய அவரது விமர்சனங்கள் அவர் இறந்த 30 ஆண்டுகளுக்குப் பிறகு , நவீன கலைத் தத்துவத்தின் மையமாகப் பார்க்கப்பட்டது. நவீன நாகரிகத்தின் கவி போதெலெர் என்று மதிப்பிடப்பட்டார். நவீன கவிதையின் தந்தை மட்டுமின்றி நவீன ஓவியத்தின் தந்தையும் என்று கணிக்கப்பட்டார்.

ஒரு கவிதையின் அழகியல் ரீதியான முழுமை பற்றி மிக அழுத்தமான கருத்து வைத்திருந்தார் போதெலெர். அவர் ஓசைலயமில்லாமல் (Rhyme) கவிதை எழுதியதில்லை. அதிலே ரகசியமான ஓர் அமைப்பு (Secret Architecture) உள்ளது. என நம்பினார். பிரஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கையில் அது இழக்கப்படுகிறது. இத்தமிழ் மொழிபெயர்ப்பு (Richard Howard) மற்றும் (Jacques Leelercq) என்பவர்களின் இரண்டு மொழி பெயர்ப்பு களையும் கொண்டு செய்யப்பட்டுள்ளது. போதெலெரின் ஒரே தொகுப்பு (Flowers of evil)

### கடற்பறவைகள்

ஆழ்கடலில் மேலோட்டமாய் நகரும் கப்பலை
அசட்டையாய்த் தொடர்ந்துவரும்
அந்தப் பெரிய கடற்பறவைகளுள் சிலதை
அடிக்கடி மேல்தளத்தில் நேரம்போக்கும் கும்பல் பிடிக்கும்.

அரிதாகவே இங்கே வந்தமரும் இப்பறவைகள்,
விண்ணின் ராஜாக்கள், இந்நிலையில்தான் எவ்வளவு அருவருப்பு!
பரிதாபம்! வெட்கக்கேடு! அவைகளின் மகத்தான வெண் இறக்கைகள்
பயனற்ற ஜோடித் துடுப்புகள்போல் இழுபட்டுக் கொண்டிருப்பது!

இந்தப் பறக்கும் பயணிகள்! எத்துணை அலங்கோலம் இவர்கள் நடை!
ஒருகாலம் மேன்மையுற்றிருந்தது, எவ்வளவு கேலிக்குரியதாகிவிட்டது இப்போது!
ஒருத்தன் அவைகளைத் தன் சுருட்டுக் குழாயால் சுடுகிறான், அவன் மனைவி
நொண்டியடித்தபடி வக்கணை செய்கிறாள் ஒருகாலம் பறந்தவைகளை.

வானத்தின் மேகத்தின் இந்த அரசர்களைப்போலவே கவிஞனும்
புயல் சவாரி செய்வோன், காரியவாதி மனிதர்களைக் கேலி செய்வோன்,
கேலிக்குரியவர்களுக்கு மத்தியில், நாடுகடத்தப்பட்டவன், நிலத்தில்
அவனது ராட்சச இறக்கைகள் ஒடித்துமுடக்கப்பட்டு மூலையில் எறியப்பட்டவன்.

தமிழில் தேவதேவன்



படிப்பகம்

www.padippakam.com

# சுஜாதா பட்

சுஜாதா பட் (1956) இந்திய ஆங்கிலக் கவி. அகமதாபாத்தில் பிறந்து புனேயில் வளர்ந்தவர். USA யில் கற்றவர். இவர் இப்பொழுது பிரேமனில், தனது ஜெர்மன் எழுத்தாளக் கணவர் மைக்கேல் அகஸ்டினுடன் வாழ்கிறார். சமகால இந்தியப் பெண் கவிஞர்கள் என்ற பெங்குவின் தொகுப்பிற்காக குஜராத்திக் கவிதைகளை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துள்ளார். இவர் கவிதைகள் பிரிட்டிஷ், அமெரிக்க, ஐரிஷ் இதழ்களில் வெளிவந்துள்ளன. 1991ல் கவிதைக்காக சோழ மண்டல் விருதும், இக்கவிதை இடம் பெற்றுள்ள Brurigion தொகுப்புக்காக Alice hunt..' மற்றும் Comman Wealth Poetry Prize (Asia)-ம் பெற்றுள்ளார். Monkey Shadow இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு (1993).

## ஹேய்

(தமிழில்-தேவதேவன்)

உனது இந்தியக் கோயில் புகைப்படங்கள்
முழுமையானவையல்ல
எங்கே நான் தினசரி பார்த்துவந்த அந்த மனிதன்
தன்னைக் கண்டு பயப்படும் அந்த
சுத்த பிராமணச் சிறுவர்களைப் பார்த்துச்
சிரித்துக் கொண்டிருக்கும் அந்த மனிதன்?
எங்கே அந்த மனிதன்,
வீங்கிய யானைக் காலுடன்
கடவுள்களோடும் ஈக்களோடும்
அந்தத் தூணருகே தவழ்ந்து கொண்டிருப்பவன்?

# Erich Fried

(ஆஸ்திரியா, 1921-88 ஆங்கிலம் வழி தமிழில் - தேவதேவன்)

## எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

சோம்பேறிகள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகின் தொழில்வளம் பெருகுவதற்காக.

அவலட்சணமானவர்கள் கொன்று குவிக்கப்படு
கிறார்கள்
இந்த உலகம் அழகாய்த் திகழ்வதற்காக.

முட்டாள்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகில் ஞானம் சுடர்வதற்காக


நோயாளிகள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகில் குதூகலம் பொலிவதற்காக.

அழு மூஞ்சிகள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகில் குதூகலம் பொலிவதற்காக

முதியவர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகம் இளமையாய் ஜொலிப்பதற்காக.

பகைவர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகில் நட்பு நிலவுவதற்காக.

துஷ்டர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்
இந்த உலகில் மேன்மை தங்குவதற்காக.



படம்: A.செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# நகாபெட் கூச்சக்

-தமிழில் கலாமோகன்

ஆர்மேனியக் கவிஞரான நகாபெட் கூச்சக் (Nahabed Koutvhak) மீதான தகவல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. 1500-1592 களில் இவர் வாழ்ந்தார் எனக் கருதப்படுகின்றது. ஆர்மேனிய இலக்கியத்தில் தனி மரியாதைக்குள்ளன இவரது கவிதைகள். புகலிடமும் காதலுமே இவர் படைப்புகளின் கருப் பொருள்கள். துருக்கிய ஏகாதிபத்தியத்தால் ஆர்மேனியர்கள் துன்புறுத்தப்பட்டமையே இவரைக் கவிதைகள் எழுதத் தூண்டின என இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முதல் தடவையாக இவரது கவிதைகளில் சில பிரெஞ்சு மொழிபெயர்ப்பிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.


இரவும் பகலும் நான் அழுகின்றேன்.
நான் அழுவது அவளுக்குக் கேட்கின்றதா?
நான் அழுகின்றேன்.
உதிரமே எனது விழிகளிலிருந்து சொரிகின்றது.
அவள் எப்படியானாள் என எனக்கு யார் சொல்வர்?
நான் தொலைத்ததை யார் என்னிடம் கொண்டுவந்து தருவர்?
எனது கண்ணீர்களை யார் காய வைப்பர்?
எனது உயிரை யார் என்னிடம் திருப்பித் தருவர்?

* * *

ஒரு தாய் மகனிடம் சினந்து கொண்டாள்
"பிசாசிடம் போ!
புகலிடத்தின் வசீகரங்களைச் சுவைக்கப் போ
மண்ணால்
பாறாங்கல்லால் உனது தலைகணியைச் செய்
வானத்துக்கு இன்பமாக இரு.
நாளை அதிகாலையில் நீ விழிக்கும் போது
சூனியத்தைக் கண்டு பிடிப்பாய்."

* * *

வானத்தைத் துதிப்போம்.
அது ஓர் தணலை எழச்செய்யட்டும்
நிழல் பிரகாசம் பெறட்டும்...
இறக்கைகளில் தணல் எங்களைத் தூக்கிச்
செல்லட்டும்
விருந்தோம்பல் நிரம்பிய
ஓர் நிலத்தை நோக்கி...



படம்: மோனிகா



படிப்பகம்

www.padippakam.com

# WISLAWA SZYMBONSKA

**விச்லவா சிம்போன்ச்கா,** தமிழில் - அரவிந்த் அப்பாதுரை

போலந்து நாட்டைச் சேர்ந்த கவிஞரான விச்லவா சிம்போர்ச்கா 1996 ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர். இவரது கவிதைகள் அழகியல் ரீதியாகவும் தத்வார்த்த ரீதியாகவும் ஒரு ஒற்றுமைத் தன்மையைக் கொண்டவை. அத்தோடு இரண்டாம் உலகப் போருக்கு பின் வட அய்ரோப்பிய நாடுகளின் அரசியல் கட்டமைப்பினால் ஏற்பட்ட சிந்தனைப் போக்குகளை இவரது கவிதைகள் பிரதிபலிப்பவை.

## மூன்று வினோதமான வார்த்தைகள்

எதிர்காலம் என்ற வார்த்தையை நான் உச்சரித்து முடிக்கும் முன்
அதன் முதல் அசை இறந்த காலத்திற்கு சொந்தமாகிவிட்டது.

நான் நிசப்தம் என்ற சொல்லை உச்சரிப்பதன் மூலம்
அதனை உடைத்து விடுகிறேன்.

நான் ஒன்றுமில்லை என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது
இருத்தலற்ற தர்க்கிக்க முடியாத ஏதோ ஒன்றைச் செய்கிறேன்.

---



படம்: A.செல்வம்

செதிள்
செதிளாய்
காலம் சீவுகிறது
வயதை

குட்டையாகிக்
கொண்டே
யிருக்கிறது ஆயுள்

குவிந்து
கொண்டிருக்கிறது
அனுபவ சில்லுகள்

இந்த உயிராய்
எதை எழுதுகிறது
வாழ்வு

கவிதை
யுள் அலைகிறது
கேள்வி

-ஹவி

மேலும் ஒரு கடல்
அரிச்சல் முனையிலிருந்து
சுழன்று சுழன்று சுக்கானை
அசைக்க
இப்படியும் அப்படியுமாய் ஆடி
திரிகிறது படகு

இவனுக்கு பயம்
அவனுக்கு கேலி

மரணத்தை உள்ளே மறைத்து
வைத்திருக்கும் கடல்

இருக்கிறது மௌனமாய் நடுவில்

-ஹவி



படிப்பகம்

www.padippakam.com

# கற்சுறா கவிதைகள்

எல்லாக் காலங்களிலும்
பழக்கப்பட்டதான வாழ்வு.

குளிர், வெயில், பனி, யுத்தம்,
குளிர்பனிவெயில்
இரத்தம்குளிர்கொலைபனிவெயில்கு...
எல்லாம் காலங்களாகவும்
எல்லாம் வாழ்வாகவும்
குறியிட்ட பின்னால்
சலிப்படைந்து போகாதிருக்க
எவர் மீதும்
குற்றம் சொல்ல வேண்டும்.

சிங்களவன், அல்ஜீரியன்,
ஆபிரிக்கன், வடக்கத்தையான்,
சோனகன்கறுப்பிஅடைச்சிஅடையான்
சிங்களத்திமுக்கால்அடைச்சிசிங்...

அண்டத் தெருக்களில் விழுந்து நனைந்த
ஈரம் காய விருப்பம் இல்லை.

தவற விட்டதாயும்
ஏங்கியிருப்பதாயும்
குச்சொழுங்கை குடிசைகளை
இழந்து விட்டதாயும்
பாசாங்கு செய்தல் அபத்தம்.

தற்செயலாய் நிகழ்ந்ததா இது?

பிறந்தும் வளர்ந்தும்
நெடு நாளாய்
பழகிப் போனதாய் ஆகிவிட்ட அது.

நகரவிடாது
அவ்வப்போது மிரட்டியும்
சாதுவாயும்
நீ கொண்டுள்ள கவனம்
புறத்தே பிய்த்துக் கொண்டு
வெளியேறு
என்பதாகவே உறுத்துகிறது.

கண்காணிப்புக்குள் அகப்பட்டு
வெளியைப்பற்றி மட்டுமே
யோசிக்கும் மூளை
வயது கூடிக் களைத்துவிடுகிறது.

காரணங்கள்
இலகுவாய்த் தெரியப்படுகையில்
தப்பித்தலுக்கு அப்பால்
சொல்லி விட முடியாது சங்கதி.

ஒரு பெயர்
அல்லது
உருவாக
ஒட்டிக்கொண்டுள்ள
கயிற்றை அறுக்க
ஒருபோதும் நினைத்ததில்லை.

ஆட்டம் இதமாக இருக்கிறது
கட்டியாடும் ஊஞ்சல் போல.

தலையும் காலும்
உயர்ந்து உயர்ந்து.



படிப்பகம்

www.padippakam.com



படம்: மோனிகா

# அகமுகம்

வெப்பம் முழுவதையும் உறிஞ்சித்
தொடங்கிய ஆட்சி இரவும்,
அடங்கி அணைந்த விளக்குகளும்.

அவள்
தாய்,
மனைவி,
உறவின் அந்தஸ்து,
ஓயாத உழைப்பு.

எழுந்து மறுபக்கம் சரிந்தாள்.

மனம் நிதானித்துக் கணக்கிட
கண்ணீர் விட நேரம் பார்க்கிறாள்.

துளைத்துச் சோதனையிடுகிறது ஆத்மா.

▭

மூளை கட்டளையிடுகிறது
வெளியேறு
தாமதியாதே

நடக்கிறாள்...
கதைக்கிறாள்....

கோடுகளைத் தாண்டுதல்
எவ்வளவு சுகமானது.

-ஜெபா (பிரான்ஸ்)

▭ இந்த இடத்தில் எழுதவேண்டிய நிலையினைத்
தெரிவிக்க மிகக் கடுமையான சொற்கள்
இல்லாததால் எழுத முடியவில்லை.

கலவரம் தொடங்கியது

யார் ஓடுகிறார்கள்
விரட்டுகிறார்களென
குழப்பக்காற்று
வெடிக்கும் சப்தமும்
கூக்குரலும் தொலைவில்
காவல் வண்டிகளின்
சிவப்பு ஓலம்.
அலுவலக ஜன்னலின் பின்
இன்னமும் இருளும்வெளிபார்த்து
பதுங்கிநிற்கிறேன்
டிபன்பாக்ஸ் கூடையுடன்
பள்ளியில் என்செல்லமகள்
பாதுகாப்பாய் இருப்பாள்
இருவரும் வரும் வண்டியின்
குதுகுது சப்தம் கேட்க
ஒருவிளக்கு எரியும் வீட்டில்
உறைந்திருந்தோம்
இரவு விடிய விடிய.

- கௌரி ஷங்கர்

* * * *

இன்று
மானுட சுவாரஸ்யமே
கலகமும் வேடிக்கை பார்த்தலும்
தேர் எனவீதிகளில்
சுழன்றது வெறும்உன்
அதிகாரமேன்மைக்குறியீடு
தந்து வாங்கவும்
தத்தெடுக்கவும்
குழந்தையல்ல,
குருதிஒழுகும்உன்தேர்க்
கலகம் - வேண்டாமெனக்கு
என்உளி கொண்டு
செதுக்கிவைப்பேன்
என்சாமிக்கு ஒரு
தேர்.

- கௌரி ஷங்கர்



படிப்பகம்

www.padippakam.com

# நசிகேதனுக்கு

அந்தி கருக்கிறது
நட்சத்திரங்கள்
வராமலா போகும்

நட்சத்திரங்களை
மூடும் மேகம்
மழை பெய்யட்டுமே

எத்தனை நாள்கள்
கடைசி பஸ்ஸை
தவறவிட்டிருக்கிறாய்

கனவு
கண்டுகொண்டு
இருக்கிறாள் அவள்

முத்தம் கொடு
கட்டிப் பிடி
எதுவானாலும் உன் இஷ்டம்

காலத்தைக் கடத்த
பிராந்திக் குப்பிகள்
வேண்டியதிருக்கிறது

சிறுதெய்வங்கள்
வலுத்தால்
பெருந்தெய்வம்

உணவு உறக்கம்
விட்டுச் சில
உயிர்கள்

நிறுத்து
நசிகேதா

கேள்விமேல்
கேள்வி கேட்டுக் கொல்லாதே

வேர்க்கேள்விகள்
கிளைக்கேள்விகள்
துணைக்கேள்விகள்
தனிக்கேள்விகள்

ஒரு கேள்விக்கும் பதில்சொல்ல
உத்திரவாகவில்லை

நசிகேதா
நிறுத்து

மௌனத்தை
மிஞ்சிய மொழியுமில்லை
மாதாவை
மீறிய தெய்வமுமில்லை

மனைவியைப் போலத் துணையுமில்லை
மக்களைப் போலத் தோழர்களுமில்லை...

– அபராஜிதா



படிப்பகம்

www.padippakam.com

# ஜெ. பிரான்சிஸ் கிருபா கவிதைகள்

உள்ளங்கையை (படர்த்தி)
நீட்டி நீட்டி
கெஞ்சுகிறாள் அக்காள்-
வெகு
நேரமாக வீட்டுக்குள்
பம்பரம் விட்டு
விளையாடிக் கொண்டிருக்கிறான்
தம்பி-
வெளியே
மழை!

* * * *

பார்த்த வண்ணம் நிற்கிறாள்
சிலை போல்-
சிறு வயதில்
பிடி தப்பிய கனாவையா-
விழிக்கும்
விரலுக்கும்
இடைபட்ட தூரத்தையா
தெரியவில்லை-
பிழிந்த சேலைகள் தோளில்
முறுகி கிடக்கிறது-
ஈரம் பட்டு முற்றும்
நனைந்து விட்டது
இடது ஸ்தனம்-
இன்னும்
தூங்கிக் கொண்டிருக்கிறது
துணி உலர்த்தும் கொடியில்
தட்டான்!

* * * *

அது
மீள்வதும் ஆழ்வதுமாய்
இருக்கிறது
அலைகள் உள்ளேறும்
ஞாபக பரப்பில்
நிமிர்த்தி நேர் செய்ய
ஏலாததாய் சுழிந்திருக்கிறது
அதன் கேள்வி குறி-

அது ஒரு மழைக் காலமாக
இருந்திருக்கலாம்
எந்த மனக்கடிதத்திலும்
குறிப்பிட முடியவில்லை துல்லியமாக-
விருந்தாட வந்தவர்கள்
முகங்கள் பதிந்து கிடக்கின்றன
உறவு முறைகளில் தெளிவில்லை.
விளக்குழியில் துட்டு துழாவிய போது
தேள் கொட்டியது என்னை.
இடக்கையிலிருந்த ஓமத்திராவக
பாட்டில் நழுவி விழுந்து
இரவு சிதறியது
எல்லோரும்
ஓடிவந்து சூழ்ந்தார்கள்
நீ தாமதமாகத்தான் வந்தாய்.
சிம்னி விளக்கை வாங்கி
தேளை தேடி கையில்
எடுத்தாள் பாட்டி-

மத்தியானம்
குளமீனை கழுவி
குடல் நீக்கும் போது கண்டெடுத்து
தம்பிக்கு விளையாட ஆகுமென்று
பத்திர படுத்தியதாய் சொல்லிவிட்டு
போனாய்-

அனைவரும் வாங்கி
தனித்தனியே பார்த்தார்கள்
லேசாக துருவேறிய
தூண்டில் முள்ளை!

* * * *



படிப்பகம்

www.padippakam.com

யாரொருத்தியும் வாய்க்காமல்
சுய முடிவெடுத்து
செத்தும் தொலையாமல்
நம்பிக்கையோடு இன்னும்
பெண் தேடிக் கொண்டுதான்
இருக்கிறது அது. என்பதே
இத்தரப்பிலிருந்து
எல்லோருக்குமான தலைப்புச் செய்தி -
இதே நாளில்
பிரிந்து போனதற்காக
நாளிதழில்
குடும்பத்தோடு வருந்துபவர்கள்
தயவு செய்து தவிர்த்து விடுங்கள்
இளம் பெண்களின் புகைப்படங்களை.

முதற்பார்வையில் தாவும் மனம்
மறு பார்வையில்
வேதனையில் துவள்கிறது.

இறந்தவர்களிடம்
எப்படி
மன்னிப்பு பெறுவது

* * * *

விரல்கள் பற்றியெடுத்ததுமே
ஓவியமாகி விட்டது தூரிகை.

கலைந்த துயிலையும் - அதன்
மீதி கனவையும்
வரையப் போவது யார்?

– ஜெ. பிரான்சிஸ் கிருபா





பொதிகை,
பொதியவெற்பன் பொன்விழா மலர் - 2000
சிலிக்குயில், 20-பு, கோதண்டபாணி தெரு,
கும்பகோணம்-1, விலை ரூ.100/-


# இரு கவிதைகள்

1. ஊஞ்சலாகித்திரிகின்றன
சிகப்புப் பூக்களை உதிர்க்கும்
மரங்கள் இக் கோடைக் காற்றில்

இலைகளை அசைத்தசைத்து
சோர்ந்தது காற்று

படர்கிற காற்றின்
மெல்லேடுகளில் காதலை
வரித்த மரங்களின்
பூவிதழ்களில் காற்றின்
தினம் வழிந்தோடும்
மரங்களைப் புணரும்
கதைகளை கதைத்தவாறு.

வேர்களை நிரப்பிய
நீரினுள் ஈரம் வற்றிய
முளைகளுக்கடியில் பதுங்கிக்
கொண்டது நஞ்சு.
பிறகு
ஆகாஸ வெளியில் மரங்களுக்கென
சவக்குழிகளை தோண்டிய படி
பறந்தது காற்று.

2. திசைகளற்று திரியும்
பிரக்ஞையின் ஆழம்
எழவேண்டிய உயரம் நோக்கி
சலித்துவிட

ஓசையற்று வீழும் முதிரா கனியென
வலிந்து உதிரும் பழங்ஞாபகங்களோடு
உறுத்தும் ஓர் ஜோடிக் கண்களை
ஆழ்மனப் போர்வையிட்டு
மறைப்பினும்

இருள் பிரபஞ்சத்தின் மூலைகளில்
மெலிந்து ஒடுங்குகிற
என்னிருப்பை
எளிதாய்ச் சுட்டும்
உந்நெருப்பு.

-தாமரைபாரதி



படிப்பகம்

www.padippakam.com

# லேசர் படிம உடலகங்கள்

பகலும் இரவும்
புணர்ந்து
இரவில் மூழ்கிய
பகல் நேரம்.

வெறுமையை உணர்த்தும்
நிர்வாண நிமிடங்கள்.

கலவிக்கு அழைக்கும்
தவளையின் குரல்பை
சத்தம்.

விரல் நுனியில்
உயிர் வழியும்
இயற்கையின்
அபிநயம்.

தயங்கித் தூங்கும்
விழிகளில்
பட்டுத் தெறிக்கும்
காமக்கதிர் வீச்சு.

காமத்துயிலாழ
தொட்டுத் தழுவும்
லேசர் படிம உடலகங்கள்.

நாகாஸ்திர பட்டுவிரிப்பில்
சொர்க்கபுரி.

ருத்ரதாண்டவத்தின்
மைக்ரோ
தாளலயசிலிர்ப்புகள்

சிந்தும் இரு கைகளின்
இடைவெளியில்
அமில அரிப்புக்காமம்.

ஜனனத் தொழிற்சாலையில்
காமக்கூலிகளாய்
ஆணும் பெண்ணும்.
நிலவாய் வளர்ந்து
நிலவாய் தேய்ந்து
நிலவாய் மாறி
கைப்பற்றிய ராகு
முற்றுகையிட்ட கிரகணம்
விலகா விகார
கிரகண வாழ்வில்
உழன்று திரியும்
அவர்கள்
விகாரமானவர்கள்.

* * *

பார்வையின் கூர்முனை படையெடுப்பில்
தொட்டதும் தொடர்கிற உறவு
நீந்துகின்றன
கோதையின் விரல் மீன்கள்
நீரில் முத்தம் பெறுகின்றன.
ஒருவரும் அறியாமல்
இருவரும் தொலைத்து நிற்கிறோம்
இதயத்தின் மறித்த மயானம்
எங்கும் வியாபித்திருக்கும்
நிகோடின் நுரையிரல்கள்
நாம் நமது
எல்லையை வரையறுக்கிறோம்
கால் தூக்கி
சிறுநீர் கழிக்கும் நாயாய்
நீ
உன்னதையும்
நான்
என்னதையும்.

-ப்ரதாபருத்ரன்



படிப்பகம்

www.padippakam.com

## கடலின் ஓசை

கோணலாய் வட்டம் தீட்டிய குழந்தை
இதுதான் உலகம் என்றது
குறுக்கிலொரு கோடிழுத்து
நமது வீடு பாரென்று சொன்னது
அருகிலிரு புள்ளிகள் வைத்து
அவைதாம் நாம் என்றது
எங்கெங்கோ சதுரங்கள் எழுதி
தோட்டம் காடென்று சிரித்தது
கவனம் பிசகிய கணமொன்றில்
காற்றில் நெளிந்தது உலகவட்டம்
மனமதிர்ந்த சிறுபொழுதில்
காதுப்பறையைக் கிழித்தடங்கியது
கடலின் ஓசை.

- பாவண்ணன்

## இழந்த துயில்

யாருமற்ற நள்ளிரவில்
ஆழ்துயிலைக் கலைத்தபடி
என் வீட்டுக்கருகில் படபடத்தது
ஆட்டோ ஊர்ந்து வந்த சத்தம்

ஊருக்குப் போன மனைவியும் குழந்தையும்
மனத்திரையில் படமாய் நெளிந்ததும்
உள்ளூரப் பரவியது நடுக்கம்

அவசரம் அவசரமாக ஜன்னலை நெருங்கி
ஆள்தெரியா இருட்டில் பார்வையை ஓட்டி
என்ன என்ன என்று துழாவிய கணத்தில்
அதிகரித்தது இதயத்துடிப்பு

அகாலத்தில் வந்த விருந்தா
மரணச் செய்தியைச் சுமந்துவந்தவனா
பிரசவத்துக்கு அழைத்துப் போகிறதா
மதுக்கடையிலிருந்து
தூக்கியனுப்பப்பட்ட ஆளா

ஆட்டோவின் ஓசை அடங்கிக் கரையும்வரை
நிம்மதியற்று நிலைகுலைந்து போனேன்

தன்னைக் குறிபார்த்த அம்பொன்று
திசைமாறிப் போனதுபோல ஆறுதல்
அப்பாடாவென்று படுக்கையில் விழுந்தேன்

வெடித்துச் சிதைந்த உடல் கூறுகள்
மீண்டும் ஒருங்கிணைவதை உணர்ந்தபடி

- பாவண்ணன்

## சாமான்யப்பிரதேசம்

மனச்சுடலையில்
பயத்தீயின்
சுட்டெரித்தலில்
வேகும் சுயம்.

உதறியெழ நினைத்த பிணம் போல
வெளிமை கண்டு
உதறியெழுந்து கொண்டிருக்கிறேன்.

தீய்த்தலற்று
வளர்க்கும் தீ யென....
த்தீ.

கழுதையின் விறைத்தக் குறிகளைச்
சூட்டுவித்த கோல்களின்
சிறையில்
இழந்து போகும் இருப்பு

மரத்தடி தவிர்த்து
போக்கிடமற்ற
நிழல் போலா வாழ்வு.

அம்மணம் அவிழ்ந்து கிடக்கும்
வெளிகளில்,
அம்மணமாய் ஆட
அம்மணமாய் திங்க, குளிக்க
அப்படியாயினும்
அம்மணமாகுமோ மனசு

காற்று
தீ
குழந்தை
பைத்தியமென
கட்டற்றுத் திரிவனவற்றைக்
காணும் போதாவது
நிகழுமா
அறியவில்லைநான்.

-இரா. இலக்குவன்



படிப்பகம்

www.padippakam.com

# மின்சார வேலியிட்ட வைரஸ் பூ

- சூத்ரதாரி




தமிழ்க் கவிதையின் பொதுமை குணங்களிலிருந்து வேறுபட்டு தனித்துவம் கொண்டிருப்பவை பிரம்மராஜனின் கவிதைகள். கவிதையை பொழுதுபோக்கு அம்சமாய் அனுகுபவர்களை அண்ட விடாதவை இவை. கவிதையையும் கவிதை வாசிப்பையும் நுட்பம் கொண்ட ஒரு சீரிய காரியமாய் ஆக்கியதன் வழியாக தமக்கென கூடுதல் அந்தஸ்தை பெற்றுக்கொண்டவை கலையின்மீது கவியும் மேம்போக்குத் தனத்தை கடுமையாய் விலக்கி நிறுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில், வெகுஜன சீரழிவிலிருந்து விலகி நிற்கும் பொருட்டும், தத்தம் கம்பீரத்தைக் கூடிய வரையிலும் பேணிக் கொள்ளும் பொருட்டும் நவீன வேலிகளை இட்டுக் கொண்டிருப்பவை பிரம்மராஜனின் கவிதைகள்.

கவிதையை ரசித்து அனுபவித்து உள்வாங்கிக் கொள்ளும் பொறுமையும் தேவையும் உள்ள ஒரு வாசகனே அதன் இயங்கு தளங்களை தொடர்ந்து பின்பற்றி கவிதையின் ரகசியக் கதவுகளை திறந்துகொண்டு செல்லும் பேறு பெற்றவன். அவ்வாறான ஒரு வாசகனுக்கு பிரம்மராஜன் கவிதைகளைச் சூழ்ந்து நிற்கும் முள் வேலிகளோ, மின்சார வேலிகளோ ஒரு பொருட்டேயில்லை. அக் கவிதைகள் அவன் முன் நிறுத்தும் சவால்கள் அவனை மொழித் தளத்தின் சாத்தியங்களுக்குள் ஊடாட வைக்கின்றன. இதில் தடங்கலும் மனத்தடை கலுமின்றி முனையும் ஒரு வாசகன் தன் அனுபவ நிலையிலிருந்து கவிஞனின் ஆக்க நிலைக்கு முன்னேறுகிற சாத்தியத்தையும் எதிர்கொள்கிறான்.

கலைத்துப் போட்ட சொற்களில் கவிதையை ஒளித்து வைப்பவர் பிரம்மராஜன் என்ற ஒரு பொதுக் கருத்து உண்டு. அவரது முந்தையத் தொகுப்புகளிலும், இந்தத் தொகுப்பிலும் அவ்வாறான கவிதைகளை காண முடிகிறது. என்றாலும் பெரும்பாலான கவிதைகளில் தேர்ந்த சொற்களின் செறிவான கட்டமைப்பு கவிதை மொழியை இசைவாக்கித் தந்திருக்கிறது. எளிய சொல்லமைப்பின் வழியாக சொற்களைக் கடந்த ஒரு உணர்ச்சி வெளிக்கு செல்லும் கவிதையின் சாத்தியத்தை இக் கவிதைகளில் காண முடியும். (உதாரணம். அவரவர் காணி நிலம்)

தமிழ்க் கவிதைச் சூழலுக்கு பொருத்த மில்லாத மேற்கத்திய இசை, ஓவியச் சொல்லாடல்கள் இவரது கவிதைகளில் மலிந்துள்ளன. என்ற வேறொரு கருத்தும் உள்ளது. மேற்கத்திய ஓவிய, இசைச் சொல்லாடல்கள் இருக்கின்றன என்ற வரையில் இக்கருத்து உண்மையேயொழிய அவை பொருத்தமற்றவை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழ்க் கவிதையின் நவீன மொழியமைப்பிற்கும், நவீன பேசுதனத்திற்கும் பிரம்மராஜனின் கவிதைகள் களன் ஏற்படுத்திக் கொடுத்தன. அதே சமயம் தமிழ் மரபின் வழியில் வந்த, புழக்கத்திலிருந்து அகன்றுவிட்ட தமிழ் சொல்லாட்டுகள் பலவற்றையும் கவிதைகளில் கையாண்டலின் வழியாக, அச்சொற்களுக்கு புத்துயிர் அளித்திருப்பதையும் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். (பகாபதம், மலர்மிசை, பண்ணின், மனையாட்டி...) கவிஞரின் உதகை வாழ்வின் அடையாளங்கள் பலவற்றையும் கவிதைகள் தொடர்ந்துப் பேணுகின்றன. உதகையின் தாவரங்களும் பறவையினங்களும் இயல்பாக கிளைத் தெழுகின்றன. கூடவே அவற்றின் மீதான வன்முறையின் துக்கங்களையும் பதிவு செய்கின்றன. ('உயிர்த்தெழுதல் குறித்த தியானங்கள்' 'இசையின் ஈர டைனமைட்', 'முக்குத்தி சிகரம்)



படிப்பகம்

www.padippakam.com

இயற்கையின் மீதுள்ள அலாதியான ரசனையும் கவனமும் குவியும் அதே ஸ்ருதியில்தான் பெண்ணுடல் மீதும் அதன் வழியான காமத்தின் மீதும் கவிதையின் இன்னொரு தளம் விரிகிறது. காமத்தின் அதிபித்தான தருணங்களில் சித்திக்கும் ஆபூர்வ மனநிலைகளை சொற்களுக்குக் கடத்துவது ஒரு சில கவிஞர்களுக்கே சாத்தியப்பட்டிருக்கிறது. உடலையும் வெளியையும் கடந்து போதையேறிப் பாயும் மனோ வேகங்களில் சொற்கள் திருகியும் பிணைந்தும் உருவாகும் வாக்கியங்கள் 'காமம்' என்ற உணர்வு நிலையிலிருந்து தொடங்கி வாசகனை வேறோருதளத்திற்கு ஏந்திச் செல்கின்றன. கண்ணுறும் உடலின் எழில் வியந்து போற்றும் போதே மனம் கொள்ளும் கற்பனைகலும், முலக்கங்கலும் இடைவெட்டி உடலைத் தாண்டிய ஆன்மிக நிலையைத் தொட்டு விடுகிற வித்தைகளை இக் கவிதைகள் நிகழ்விக்கின்றன. அவ்வனுபவ முழுமைக்கு ஈடு கொடுக்க முடியாத உடலின் எல்லைகளையும், தடைகளையும் இதனூடகவே அறிந்து கொண்டிருப்பது. கவிதையையும் அதன் அனுபவத்தையும் பூர்த்தி செய்வதாகவும் உள்ளது.

*(குத்ருபணி, மஹா வாக்கியம், அழைப்பு வரும் வரை, உன்னைக் கோரி, அர்த்தத் திரிபு...)*

தொகுப்பில் உள்ள கவிதைகளை ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது, பிரம்மராஜனின் பிற தொகுப்புகளைப் போல் அல்லாமல், இத் தொகுப்பு அக ரீதியான எழுச்சியை சாத்தியமாக்கும் கவிதைகள் கூடுதலாகக் கொண்டுள்ளது என்ற நிறைவம்சத்தைச் சொல்லலாம். பொதுவாக, அறிவனுபவம் சார்ந்தவையாக மட்டும் நின்று விடக் கூடிய கவிதைகள் சொற்களாகவோ, சட்டங்களாக வோ மட்டும் எஞ்சி நின்றுவிடும் பலவீனங்களைக் கொண்டிருக்கும். மாறாக பிரம்மராஜனின் சில கவிதைகள் அவ்வாறு தேங்கிவிடாமல் மொழி ரீதியான அல்லது கட்டமைப்பு ரீதியான ஒரு பாய்சலை நிகழ்த்திய பின் அறிவு ரீதியான கவிதைகளாக அமைந்துவிடுகின்றன.

இவற்றைத் தவிர, தீவிர மன எழுச்சியை சாத்தியமாக்கும் நல்ல கவிதைகள் சிலவற்றை இத்தொகுப்பு கொண்டுள்ளது. கடலின் பரிமாணங்களுடே கொந்தளிக்கும் மொழியும் மன அழுத்தங்கலும் கொண்ட 'கடல் பற்றிய கவிதைகள்', 'சித்ருபிணிக் கவிதைகள் ஆகியவை தமிழ்ச் கவிதையின் குறிப்பிடத் தகுந்த ஆக்கங்களாக முன்னிறுத்தும் தகுதிப் பெற்றவை. பிரம்மராஜனின் பிரயானத்தி லிருந்து... கவிதையின் தொடர்ச்சியாக அமைந்த சில கவிதைகள் இத் தொகுப்பில் உள்ளன. 'கடலும் மகளும்' கவிதையின் வாசிப்பில் ஏற்படும் அக நெகிழ்வு, பாரதியின் 'சின்னஞ்சிறு கிளியே' கவிதையினால் ஏற்படும் உணர்ச்சிக்கு நிகரானதாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக ஒன்று... (எந்த விதத்திலும் உள்ளடக்கத்தையோ கவிதை அனுபவத்தை யோ சார்ந்தது அல்ல என்றாலும் கூட). அச்சுத் தொழில் நுட்பங்கள் தலை காட்டாத காலங்களிலேயே 'மீட்சி' யை சர்வதேசத் தரத்துடன் தயாரிக்க முடிந்த பிரம்மராஜன், இத்தொகுப்பின் தரத்தில் சற்றே கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் நிறைவாயிருந் திருக்கும்.

**மஹாவாக்கியம்** (கவிதை தொகுப்பு)
*– பிரம்மராஜன்* ஸ்னேகா வெளியீடு, டிடிகே. ரோடு, ஆழ்வார்ப் பேட்டை, சென்னை. ரூ.45/–.






படிப்பகம்

www.padippakam.com

# காட்டுத் தாவரங்களின் பச்சை இதம்

ந. முருகேச பாண்டியன்

கவிதையைத் தமிழில் விதம்விதமாக எழுதிப்பார்க்கையில், அது செத்து விட்டதென்ற ஒப்பாரியும் இன்னொருபுறம் கேட்கிறது. எனினும் ஜொலிக்கும் வண்ணங்களில் கண்களில் ஒற்றிக்கொள்ளும் அழகிய அச்சமைப்புகளில் நாளும் கவிதைத் தொகுப்புகள் வெளியாகின்றன. கவிதை நூல் வெளியிடுவதெனில் லாபகரமாக செயற்படும் பதிப்பகத்தினர் கூட பேச்சு வார்த்தையை முறித்துக் கொள்கின்றனர். என்றாலும் கவிஞர்களின் கைக்காசில் ஆயிரமாயிரம் பூக்களாக மலரும் கவிதைகள் மனதின் குரலை அழுத்தமாகச் சொல்லுகின்றன. நவீன கவிதைப் போக்குகளில் தனது தடத்தைத் தக்க வைத்துக் கொண்டு புதிய முறையில் கவிதை சொல்லல் மூலம் பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ள பழமலய் அண்மையில் 'புறநகர் வீடு' மூலம் களத்தில் இறங்கியுள்ளார். நூலின் தலைப்பு வாசகனை வெவ்வேறு தளங்களுக்கு இழுத்துச் செல்லக்கூடியது. வீடு கட்டுவதில் பழமலய் எதிர் கொண்ட அனுபவங்களும், அவரது மன உணர்வுகளும் கவிதை வடிவம் பெற்றுள்ளன. நகர்ப்புற நடுத்தர வர்க்கத்து நீண்டநாள் கனவான வீடு, ஒவ்வொரு புள்ளியிலும் மனிதர்களை அலைக்கழிக்கிறது. சௌகர்ய மாகக் குடியிருப்பதற்கானது வீடு என்ற எல்லையைத் தாண்டி, பாதுகாப்பானது என்ற உணர்வில் 'வீடு' பற்றிய கருத்தியல் மனிதர்களுக்குள் உறைகிறது. பறவைகளுக்குக் கூடு போல மனிதனுக்கு வீடு. மனித இயக்க மென்பது எல்லாவகையிலும் வீட்டை மையமிட்டுச் சுழல்கிறது. வீடு என்ற கல்லும் மண்ணும் சிமிண்டும் கலந்து கட்டப்பட்ட ஜடப்பொருள் பழமலய்க்குள் கிளர்ந்தெழச் செய்யும் எண்ணங்கள் அளவிடமுடியாதன. கிராமத்துத் தெருக்கள், வாய்க்கால்கள், மரங்கள் மாறாதவையென்ற பெருமை யுடன்தான் 'நாலு தலைமுறை கண்ட வீடு' என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இயற்கையுடனும் மண்ணுடனும் தன்னை அடையாளங்காணும் பழமலய்யின் இன்னொரு வெளிப்பாடாகத் தான் வீடு உள்ளது. வான்வெளித் தொலைக் காட்சிகளில் கொஞ்சம் இளங்குமரிகளின் ஆதிக்கம் வீடுகளுக்குள் நிலவும் வேளையில் பழமலய் வீடு குறித்து ரொம்ப Sensitive ஆக இருப்பது வியப்பைத் தருகிறது. பழமலய்யை நியூயார்க் நகருக்குக் குடியேற்றினாலும், அங்கும் வீட்டை சுற்றி ஊசியிலை மரங்கள் வளர்த்து, பெயர் தெரியாத பறவைகளுடன் சிநேகம் கொள்ள முயலுவார். அவ்வகையில் கவிஞரின் பார்வை வரம்பற்று மனிதப் பெருவெளிக்குள் பாய்கிறது. கவிஞருக்கு வீடு மட்டும் முக்கியமல்ல வீட்டில் வாழும் மனிதர்கள் மட்டும் முக்கியமல்ல வீட்டிக்குள் சுதந்திரமாக நுழையும் குருவி, சிலந்தி, தேரை, எறும்பு, எலி போன்ற உயிரினங்களும் பொருட்படுத்தப்பட வேண்டியனவாக உள்ளன. தெரு, வீட்டுச்சுவர், வீட்டைச் சுற்றியுள்ள இடம் என வீட்டை அடையாளப்படுத்தும் கவிஞருக்குப் புறநகருக்கு வந்து செல்வது பிரச்சனை யாகிறது. புறநகர் வீட்டிற்குச் செல்லும் வழியிலுள்ள சுடுகாடு கூட வீட்டின் அங்கமாகிப் போவது உயரிய அங்கதமாகும்.

'வீடு' என்றமையத்தில் பழமலய்யின் சிந்தனைகள், எண்ணங்கள் விரிகின்றன. கிராமத்தில் புற்றுக்கருகில் வாழும் பெற்றோரிலிருந்து ஜெயலலிதாவின் வீடு பற்றிய வர்ணனைகள், யாழ்ப்பானத்தில் போர் காரணமாக வீட்டைத் துறந்த மக்கள்... இப்படி வீடு குறித்த தனது அபிப்ராயங்களைக் கவிதைகள் மூலம் நம்முடன் பழமலய் பகிர்ந்து கொண்டுள்ளார். 'வீடு' பற்றிய சித்திரங்கள் மூலம் வாழ்க்கை குறித்த மதிப்பீடுகள் வெளிப் பட்டுள்ளன. வாசிப்பில் நமக்கு வீடு குறித்த அபிப்பிராயங்கள் நுணுக்கமாக மாறுபடுகின்றன.

பழமலய்க்கு எது குறித்தும் தீர்மானகர மான முடிவு இருக்கிறது. கவிதை வெளிப்பாட்டில் தனக்குத் தோன்றுவதை இயல்பாகச் சொல்ல வேண்டுமென்ற அழுத்தமான எண்ணம் காரணமாகப் 'பேச்சு வழக்கில்' கவிதைகளை



படிப்பகம்

www.padippakam.com

எழுதியுள்ளார். கவிதையின் நுட்பங்கள் குறித்துச் சிறிதும் அவருக்கு அக்கறையில்லை. தமிழ்க் கவிதையின் சூட்சுமங்கள் குறித்து மரபு ரீதியிலும் நவீன ஆக்கத்திலும் நன்கறிந்துள்ள பழமலய், அவை குறித்து அக்கறையற்றுத் தனக்கான கவிதை மொழியை உருவாக்கியுள்ளார். அது ரசனை வயப்பட்ட வாசகருக்கு உவப்பாகயிராது. உரை வீச்சாகப் படரும் கவிதையில் அழகியல் அம்சங்கள் குறைவாக உள்ளன. பழமலய்யின் கவிதை மொழியில் கவிதைக்கும் உரைநடைக்குமான இடைவெளி குழம்பிக்கிடக்கிறது. எங்கு கவிதை முடிந்து எங்கு உரைநடை தொடங்குகிறது என்பது நுட்பமாக ஆராயப்பட வேண்டியதாகும். என்றாலும் காட்டுத் தாவரங்களின் ஒட்டுமொத்த பச்சையில் வெளிப்படும் இதத்தைப் பழமலய்யின் கவிதைகள் வாசிப்பில் தருகின்றன.

(புறநகர் வீடு; பழமலய்; பெருமிதம் வெளியீடு, 4,316- இளங்கோ வீதி, சீனிவாசா நகர், விழுப்புரம்-605401. பக்.112; ரூ.40/-)

# உப்புமா கேட்டும், உப்புச் சப்பற்ற சலிப்புகள்

*- யவனிகா ஸ்ரீராம்*

அதிகம் சிறுகதைகள் குறுநாவல்கள், கட்டுரைகள் வழியாகவே அழுத்தம் பெற்று அறியப்பட்டிருக்கும் ஜே.ஆர்.வி. எட்வர்ட், கவிதைகளும் எழுதுவார் என்பது அவருடன் பழகியவர்களுக்கு ஆச்சரியமற்ற விசயம்.

அவருடைய முதல் தொகுப்பாக "போஸ்ட் மார்ட்டம்'' வந்திருக்கிறது. பொதுவாக இன்றைய கவிதைகள், வாசிப்பவனை பதற்றமடைய வைப்பதாகவும், கட்டற்ற ஊடுருவல் தன்மை கொண்ட அதிர்வுகளை சமூகத்தில் வெளிப்படுத்துவதாகவும் சமரசமற்ற பாலியல் ரகசியங்கள், கீழறுக்கப் பட்ட சாதிய, மதச் சொல்லாடல்கள் என அது விரிந்து கொண்டிருக்கிறது. கூடவே அதற்கான அரசியல் அதிகார வேட்கை களையும் முன் வைக்கிறது.

ஏகாதிபத்திய பொருளாதாரம் மனிதர்களை நுகர்வு குறியீட்டு எண்களாக மாற்றிக் கொண்டு, அவனது குரல்களை அலட்சியப் படுத்திக் கொண்டு விரைகிறது. ஆகவே அவனது படைப்புகள் தன் மீதான கவன ஈர்ப்பை பெற வேண்டி மறைக்கப்பட்ட அந்தரங்களுக்குள்ளும், ஒடுக்கப்பட்ட ஆத்திரத்திற்குள்ளும் அதிகாரத்தை நோக்கி "கொடூர விளிப்பை", நிகழ்த்துகின்றன.

ஏற்கனவே சொல்லப்பட்ட எல்லாவற்றின் மீதான அதிகாரப் படிநிலையாக்கம், அதன் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு போன்றவற்றின் மீது அது தன்போக்கில் தீவிரத் தாக்குதல்களை தொடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் அறிந்திருக்கிறது.

இந்தச் சூழலில்தான் ''போஸ்ட் மார்ட்டத்தையும்' அணுக வேண்டி இருக்கிறது. கவிதை ஒரு ''புனிதமான இலக்கியச் செயல்பாடு'' என்பதிலெல்லாம் நம்பிக்கை யற்ற எட்வர்ட் சமூக ஆய்வு ரீதியான பிரச்சனைகளைச் சொல்ல கவிதை வடிவத்தையும் பயன்படுத்தப்பார்க்கிறார். இத்தொகுப்பில் பிரதான அரசியல் சார்ந்த பார்வைகள் எளிய உத்திமுறையில் சொல்லப்பட்டருக்கின்றன. விமர்சனப் பார்வை கூடிய ஒரு சமூகக் கரிசனம் கவிதைகளாக முயன்று ஒரு மெல்லிய இழையில் உரையாகும் ஆபத்திலிருந்தும் தப்பித் திருக்கிறது.

நமக்கு அது முக்கியமில்லை.

அன்றாட அவலங்களில் சிக்கியிருக்கும் மனித வாழ்வை அதன் உளுத்துப்போன காரண காரிய இயங்குதல்களில் இருந்து அரசியல் ரீதியாக மீட்டெடுக்கப் பார்க்கிறதா



படிப்பகம்

www.padippakam.com

என்பதுதான் முக்கியம் அல்லது மாற்று வழிகளை சிபாரிசிக்கிறதா என்பதும் கூடத்தான் அதற்குமேல் இந்த சிறிய தொகுப்பிற்கு வேறு சுமைகளை ஏற்றுவது நியாயமில்லை.

'நான்' என்கிற அரசியல் நிசண்டைத் துளிர்ப்பை சுயமறுப்பின் எக்களிப்போடு முன் வைக்கிற அல்லது 'மற்றதனோடு' உரையாட வைக்கிற கவிதைகளாக 'ஒரே ஒரு உதவி செய்' 'போஸ்ட் மார்ட்டம்' 'சைத்தான்' போன்ற வற்றை குறிப்பிடலாம் அதையும் வெகுசனப் புரிதலுக்கு தோதான எளிய உத்திமுறையில் சொல்லப்பட்டிருப்பது சிறப்பு.

தீவிரமான இடதுசாரி அக்கறை பளிச்சிடும் வர்க்கப்பார்வைகளை அதிக ஆர்ப்பாட்டம் இல்லாமல் உள்முகமாய் இயங்கும். 'கண்ணாடிக் குறியீடாக' முன் வைத்துப் போகும் எட்வர்ட், அதிகம் சிரமப்படாமலே ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை நேரிடையாகவே வெளிப்படுத்துகிறார். அவசியம் கருதி அவற்றை தனித்த குரலாய் அடையாளப் படுத்தலாம்.

இயற்கை சார்ந்த மனித உணர்வுகளை ''பிறவிகள்' 'வாழை' 'பறவை' போன்ற கவிதைகள் வாயிலாக நேசிக்கும் எட்வர்ட் 'சின்னமுள், பெரியமுள்' போன்ற மைய வாத எதிர்ப்பினை முன் வைப்பதும், எவரும் எதையும் எழுத இடமிருக்கிறது எனும் 'பேனா முனைகள்' வழியாக எழுத்ததிகாரத்தை கேள்விக்குள்ளாக்குவதும் போராட்டத் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

நோக்கப் பூர்வமான இக்கவிதைகளின் தீவிரத்தன்மையை இன்னும் அதிகமாக்கி யிருக்கலாம்.

இத்தொகுப்பின் ஆகச் சிறந்த கவிதையாக 'தொலைந்த சாவியை' குறிப்பிடமுடியும். ''எனக்கு மேசையைத் திறக்க வேண்டும்' என்பதில் இருக்கும் பயன்பாட்டு யதார்த்தம் மனதை ஒரு கணம் உசுப்பி நிமிர வைத்து விடுகிறது. 'கள்ளச் சாவிக்கு மசியாத பூட்டாய், இருந்து விட்டது எத்தனை அசௌகரியம்'' என்கிற போது அழுத்தம் பெறுகிற சலிப்பு, குறியீட்டில் லௌகீகத்திற்கும், லட்சியத்திற்கும் ஆன மன உறுதியின் பொருத்தப் பாட்டை எளிமையாக்குகிறது இம்மாதிரிக் கவிதைகளை அவர் அதிகம் முயலலாம்.

தொகுப்பிற்கு முன்னும், பின்னுமான எட்வர்டின் விஸ்தாரங்கள் அவசியமானது தானா?

போக இவ்வகை அரசியல் சொல்லாடல் களை தனித் தன்மையாகக் கொண்டு இன்னும் ஆழமாக, கொஞ்சம் நவீன பண்பாட்டுக் கலாசார மாற்றங்களையும் உள்வாங்கி இதே எளிய முறையில் வெளிப்படுத்த முடியும் என்றால் எதிர்காலத்தில் எட்வர்ட் ஒரு அவசியமான கவிஞராகிவிட முடியும். அரசியல் தன்மையற்று எழுதமுயலும் இளம் கவிஞர்களுக்கு இந்நூல் சில புரிதல்களைத் தரக்கூடும்.



குரல்களின் வேட்டை
- சூத்ரதாரி
விலை ரூ. 20/-
(கவிதைத் தொகுப்பு)




நெடுவழித் தனிமை
- க.மோகனரங்கன்
விலை ரூ. 15/-
(கவிதைத் தொகுப்பு)

இருபுத்தகங்களும் கிடைக்குமிடம்:- சொல்புதிது, எல். 486, பெரியார் நகர், ஈரோடு-9



படிப்பகம்

www.padippakam.com

# பாரஸீகக் கவிதை ஓர் அறிமுகம்

அரபிகள் பாரஸீகத்தை வென்றதும் பாரஸீகத்தவரில் மிகவும் பெரும்பான்மை யானவர்கள் இஸ்லாத்தை தழுவினர். இவர்களுடைய உள்ளங்களில் இஸ்லாமிய வேத நூலான திருகுர்ஆன் மிகுந்த ஆதிக்கம் பெற்றது. அரபிய மொழியும், பாரஸீக மொழியும் இரட்டைக் குழந்தைகள் போல் ஆகிவிட்டன. பழைய பாரஸீகத்தில் ஜொராஸ்தியர்களின் வேதமான 'ஜெண்ட் அவஸ்தா' தவிர குறிப்பிடதக்க இலக்கிய சிருஷ்டி எதுவும் வெளியாகவில்லை. கி.பி. 420-436ல் வேட்டை நிபுணனான மன்னன் பஷ்ராம் கோரும்' அவனுடைய காதலி கிலாராமுந்தான் முதன்முதலில் சந்தத்தை கண்டுபிடித்ததாகவும், கி.பி. 590-628ல் வாழ்ந்த ஷிரினின் சுவரில் எழுதப்பட்டிருந்த ஒரு பாட்டுதான் முதன்முதலில் எழுதப்பட்டது என்பாருமுண்டு. 'வாமிக் அஸ்ராவின் காதல் கதை' என்ற நூல்தான் பாரஸீக மொழியின் முதல் நூல் என்றும் அது அழிந்துவிட்டது என்றும் சொல்வார்கள்.

இஸ்லாமிய பாரஸீகத்தில் முதன்முதலில் பாட்டெழுதியவர் அப்பாஸ் என்னும் கவியாவார். மன்னன் கலிபாமானின் வெற்றியைப்போற்றுவதற்காக எழுதியது என்பர். ஆனால் கி.பி. 875-876ல் ஸஃபாரி வம்சத்தினரை எதிர்த்து கலகம் செய்யுமாறு தூண்டி எழுதப்பட்ட பாடலே முதன்முதலில் பாடப்பெற்றது. கவிஞர் அஹ்மந் என்பவர் தான் அவர் என்றும் கூறுவர்.

முதன்முதலில் அரபி 'தோபைத்தி' பாவினமும் 'ரூபாய்' பாவினமும்தான் பாரஸீக மொழியில் பாடல்கள் இயற்ற கையாளப் பட்டது அடுத்து 'மத்னவி' வந்தது. இதில் ஒவ்வொரு அடியிலும் எதுகை மாறும். இப்பாவினம் வரலாறுகளை கூறவோ, கதை சொல்லவோ, மிகவும் ஏற்றதாக இருந்தது. இதை இயற்றியவர் தாகீது என்பவராவார். இதன்பின்னர் கஸீதாக்களும், கஜல்களும், கிதாக்களும் உண்டாயின. பாரஸீகக் கவிஞர்களில் மிகவும் முக்கியமானவர்களாக கருதப்படுபவர்கள் பலர் ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவில் வாழ்ந்த பெண்கவி 'ராபியா பர்ஸாரி' இவள் பேரழகியாகவும், அறிவு திறன் கொண்டவளாகவும் போற்றப் பட்டவள். இவள் தன்னுடைய அடிமையும் துருக்கி இளை ஞனுமான யக்தாஷ் என்பவனை காதலித்தாா். இவள் சுற்றத்தார் இவளை கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தினர். நிறைவேறாத தன் காதலுக்கு கவிதையில் உருகொடுக்கலானாள். இவளுடைய பாடல் களில் உணர்ச்சி வேகம் பொங்கி வழிந்தது. இவளுடைய பாடல் சமய நம்பிக்கைக்கு முரணானது என்று கருதியதால் இவளது உறவினர்களே இவளை கொலை செய்து விட்டனர். தமிழில் ஆண்டாளுடைய பாசுரங்கள் போலவும், ஹிந்தியில் மீராவிடையது போலவும், இவளுடைய கவிதைகள் - பாடல்கள் திருப்தியடைய முடியாத ஆத்மா தெய்வீகத்தை நோக்கி தவித்தது. இவ்விதம் தெய்வீக காதலை பெறும் தாகந்தான் ஸீபித் தத்துவத்தின் அடிப்படை. பாரஸீகத்தின் முதல் ஸிபித் கவிஞர் 'ராபியா பர்ஸாரி' ஆவார்.

பாரஸீக இலக்கியத்தில் பெருங்காப் பியங்களை இயற்றியவர் பீர்தௌஸி. இவரைத் தொடர்ந்து ஆன்மிக காப்பியங்களையும், பாடல்களையும் எழுதியவர் அபுல் கைர். இவர்களைத் தொடர்ந்து உமர்கைய்யாம் அன்வாரி போன்ற எண்ணற்ற கவிஞர்கள் தோன்றினர். அபுல்கைர் என்பவரே (ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவில்) பாரஸீக மொழியில் ஒரு கலைகளஞ்சியத்தை உருவாக்கினார். இதன் மூலம் சகல ஞானங்களுக்கும் பாரஸீக இலக்கியத்தை இவர் உறைவிடமாக்கினார்.

இந்தியாவில் முஸ்லீம் அரசர்களுடைய ஆட்சியில் பாரஸீக மொழி முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த அழகிய பாஷை அரசாங்க மொழியாகவும் இருந்ததால் இந்திய சுல்தான்களின் அவையிலே பாரஸீக புலவர்கள் பலர் இருந்தனர். இந்தியாவில் உலவிய உருது மொழிக்கு 'ரெக்தா' என்று



படிப்பகம்

www.padippakam.com

பெயர். இம்மொழியோடு பாரஸீகத்தை கலந்து கவிதைகள் எழுதியவர் பலருண்டு. பதாயூனி, முல்லா கைஷீரி, சுர்ஷிஸி, அமிர்குஸ்ரு, ஷைரு பைஸி, போன்ற இந்திய பாரஸீக கவிஞர்கள் நிறைய உண்டு.

ஆயிரமாண்டுகளாய் இலக்கிய விருதுகளை தந்த பாரஸீக மொழி ஜாமியின் காலத்துக்கு பின்னர் புதுமை இலக்கியம் வெளிப்படாமல் நலிவடைந்தது. கடைசியாக சொல்லும் படியாக இலக்கியம் வளர பாடுபட்டவர் கவிஞர் 'அல்லாமா இக்பால்' இவரைப் போன்ற ஒரு கவிஞர் கடந்த இருநூறு ஆண்டுகளில் பாரஸீகத்தில் தோன்றாமல் போனது வருந்தத்தக்கதே.

(இக்கட்டுரை 1955ல் பாரஸீகப் பெருங்கவிஞர்கள் என்ற நூலினை எழுதிய ஆர்.பி.எம். கனி பிஏ.,பிஎல்., அவர்களின் 30 பக்க கட்டுரையின் சுருக்கம். சுருக்கி தொகுத்தவர் லெனா குமார்)

*பாரஸீக கவிஞர்களில் மிகவும் முக்கியமானவராக போற்றப்படுபவர் நிஜாமி. இவர் கி.பி.1140-41ல் பிறந்தவர். அரசர்களை நாடி வாழும் அக்காலத்தில் எந்த அரச குலத்தின் ஆதரவையும் நாடாமல் அப்பழுக்கற்ற வாழ்க்கையை வாழ்ந்தவர். பாரஸீகத்தில் மிகவும் முக்கிய இலக்கியமாக 'பஞ்ச காவியம்' என்று போற்றப்படும் 'கம்ஸா'வை எழுதியவர். ((1) மக்ஸானுல் அஸ்ரார், (2) குஸ்ரு வ ஷிரீன், (3) லைலா வ மஜ்னு, (4) சிக்கந்தர் நாமா, (5) ஹப்தே பைகார். இவைகளே பஞ்ச காவியங்கள் ஆகும்.) மக்ஸானுல் அஸ்ரார். (இரகசியங்களின் பொக்கிஷம்). அவருடைய முதல் நூல் (அதிலிருந்து ஒரு கவிதை.*

## புல்புலும் ராஜாளியும்

*ஒரு பூங்காவிலே ரோஜாப் பூத்தது:*
*அப்போது ஒரு புல்புல் ராஜாளியுடம் சொல்லிற்று:*
*'மௌனமாக இருக்கும் நீ*
*சகல பறவைகளையும்விட எப்படி உயர்ந்தவன்?*
*உன் மூடிய உதடுகளாலே மூச்சை யிழுக்கிறாய்;*
*யாரிடமும் நீ இன்பமொழி பகர்வதுமில்லை;*
*எனினும், நீ துயில்வதோ மெத்தென்ற இடத்திலே;*
*உன் உணவோ இன்பமான நாரையின் இளம் நெஞ்சு.*
*நானோ, கண்மூடி விளிக்கும் நேரத்தில்*
*கண்கட்டி வித்தையைப் போல்*
*நூற்றுக் கணக்கான ரத்னங்களை*
*என் பையிலிருந்து வெளியாக்கிவிடுகிறேன்.*
*எனினும், நானும் ஏன்*
*பூச்சி புழுக்களுக்கும் வகையின்றித் தவிக்கிறேன்?*
*ஏன் முட்களின் முனையில் துயில்கிறேன்?'*
*ராஜாளி பதிலிறுத்தது:*
*'சற்றே கவனமாய்க் கேள்!*
*என் தனிமையைக் கவனித்து மௌனமாகு!*
*தொழில் நன்கு தெரிந்த நான்,*
*நூறு செயல்கள் ஆற்றுகிறேன்;*
*ஆனால், எதையும் வெளியில் சொல்வதில்லை.*
*நீ அதிர்ஷ்டத்தால் ஏமாற்றப்பட்டவன்;*
*நீ ஒரு செயலும் ஆற்றவில்லை;*
*ஆனால், ஆயிரம் செயல்களைப்பற்றிப் பேசுகிறாய்,*
*வேட்டைக் களத்திலே நான் சாதுரியமாக நடக்கிறேன்.*
*எனவே, எனக்கு நாரையின் நடுத் துண்டமும்,*
*மெத்தென்ற துயிலணையும் கிடைக்கின்றன.*
*நீயோ நாவைச் சதா ஆட்டிக் கொண்டிருப்பதால்*
*புழுக்களை உண்டு முட்களின்மீது தூங்க நேர்கிறது.'*



படிப்பகம்

www.padippakam.com

# மொழிவழிச் செலவும் இருப்பின் அடையாளக் குறிப்புகளும்

- தெ. மதுசூதனன் -

நாம் முன்னர் போல் இல்லை பல்வேறு புதிய பிரச்சனைப் பாடுகளின் மத்தியில் கேள்விமேல் கேள்விகள் மேற்கிளம்பிய வண்ணம் நாம் நமக்குள் துரத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கையின் பல்வேறு பரிமாணத் தன்மைகள் துலங்கலாகத் தெரிவதற்கு முன்னே அல்லது கண்டு பிடிப்பதற்கு முன்னே நம்மை மிக மோசமான ஒடுக்குமுறைக் கரங்கள் அழுத்திக் கொண்டிருக்கின்றன. நமது வாழ்கை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுக் கொண்டி ருக்கிறது. நமது அடையாளம் சரி பிழைக்கு அப்பால் அழித்து வாழவேண்டிய நிர்ப்பந்தம்.

> விடியலில்
> கருக்கல் கலைகிற பொழுதில்
> எனக்குக் கிடைத்த
> தற்காலிக அமைதியில்
> நான் உறங்கும் போது
> ஒரு முரட்டுத் தனமான
> கதவுத் தட்டலுக்குச் செவிகள்
> விழிக்கும்
>
> -ஊர்வசி-

நாம் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக் கிறோம். நமது இருப்பின் அர்த்தம் தேடிய 'உயிர்ப்பு' சதாகாலமும் தனக்குள்ளும் தனக்கு அப்பாலும் முரண்டு களைத்துச் சோர்ந்து, தனது அறிவுச் சேகரப் பிடிமானத்தில் தட்டுத்தடுமாறி நிலைகுலைந்து தொப்பென வீழ்தலும் வீழ்ந்த மறுகணம் நிமிர்தலும் என ஒரு சுழற்சிக்குள் நீந்திக் கொண்டிருக்கிறோம்.

விடுதலை, இலட்சியம், கொள்கை, புரட்சி என யாவும் மனித விடுதலை, மனித வாழ்க்கை இவற்றின் அடியொற்றி யாவற்றையும் புரட்டிப் போட்டுப் பார்க்க வேண்டிய நிலைமைக்குள் வைக்கப்பட்டுள்ளோம். விடுதலையின் விரிதளங்கள் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைய நிலையில் தமிழ் அடையாளம் என்பது ஒரு சமூக உண்மை. இதுவும் குறிப்பான அரசியல் விளைவுகளுக் குரியது. 'தமிழர்' எனும் ஒரே ஒரு தகுதிப்பாட்டின் விளைவாகவே அதிகத் துன்பங்களைச் சுமக்க வேண்டியவர்களாகிறோம் இதனால் ஈழத்தில் தமிழ் அடையாளம் 'தமிழ்பேசும் மக்கள்' எனும் அடைமொழியுடன் கூடிய அரசியல் கருத்தாக்கமாகவும் வளர்ந்தது.

ஆக தமிழர் எனும் அடையாளம் எம்மீது திணிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. நாமும் அதனை விடமுடியாது பிணைக்கப் பட்டுள்ளோம். ஆனால் அதற்காகச் சாராம்சமான பண்புகளுடன் கூடிய முழு அடையாளங்களைக் கட்டமுடியாது. இங்கே நாம் எமது விமரிசனங்களை முன்வைத்தேயாக வேண்டும்.

நாம் மாற்றிக் கொள்ளத்தக்க பன்மைத்துவ அடையாளங்களை வற்புறுத்தும் வேளை, சில அடையாளங்கள் குறித்த அரசியல் முக்கியத்துவமும் உண்டு என்பதையும் மறுத்துவிடக்கூடாது. தமிழராக இருப்பவருக்கு வேறு அடையாளங்களும் சாத்தியம். தமிழர் என்பதற்கு எந்தளவு அரசியல் முக்கியத்துவம் உண்டோ, அந்தளவிற்கு சூழலைப் பொறுத்து சில சந்தர்பங்களில் கூடுதலாகவும் கூட பிற பண்பாட்டு அடையாளங்களுக்கும் அரசியல் முக்கியத்துவம் இருக்கும்.

சாதி வர்க்கம், பால், இனம், பிரதேசம்... எனத் தனித் தனியான அடையாளங்களாய் பிரிந்து இருக்கும் அதே நேரம், குறிப்பான நோக்கங்களுக்கான ஒன்றிணைப்புக்கள் எப்போதும் சாத்தியமாகிக் கொண்டிருக்கும். இந்த அவசியப்பாடு சமகால ஓட்டத்தின் இயங்கு புள்ளியாக -



படிப்பகம்

www.padippakam.com

நகரும் இலக்காக-இழையோடிக் கொண்டிருக்கும்.

இதுவரையிலான ஈழத்தின் அனுபவத் தளங்கள், சிந்தனைகள் எம்மை புதிய வகையிலான சிந்தனை முறைமைக்கும் செயற்பாட்டுத் தளத்திற்கும் நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

ஈழத்தின் வரலாறு கொடூரமான இராணுவ அடக்குமுறைகளையும் அதன் உச்சங்களையும் அவற்றுக்கெதிரான பல்வேறு வடிவங்களான போராட்டங்களையும் தினம் தினம் முகங் கொடுத்தேயாக வேண்டிய சூழலமைவை நமக்குத் தந்து கொண்டிருக்கிறது.

அதேநேரம் விடுதலையின் பெயரால் போராட்டத்தில் உள்நுழைந்துவிட்ட அராஜகப் போக்குகளும் சனநாயக மறுப்புகளும் எந்த வடிவில் யார் மூலம் வெளிப்பட்டாலும் அதனையும் எதிர்க்க வேண்டிய தார்மீகப் பொறுப்பையும் உணர்த்திச் செல்லும் காலத்திலேயே உள்ளோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்ற காலத்தில் இருந்து இற்றைவரைக்குமான கால வெளியை கடக்கும் கலை இலக்கியப் பதிகைகள். நமக்குள் ஏராளம் குறிப்பாக நமது தமிழ்க் கலாசார மரபில் கவிதை எப்பொழுதும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது இந்த நீண்ட செழிப்பான கவிதைப் பாரம்பரியம் இன்றைய சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதைப் போக்குகளுக்கு, தக்க தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபின் தனித்துவம், தொடர்ச்சி அதன் இன்றைய புதிய பரிமாணங்கள் யாவும் அனைத்துலகத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் புதிய பரிணாமத்தை ஈட்டியுள்ளன.

எத்தகைய நெருக்கடிகள், இன்னல்கள், வாழ்க்கை முறைகள் யாவற்றுக்குள்ளும் நாம் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றோம். வாழ்வின் சகல பரிமாணங்களினூடு சந்திக்கும் முரண்களையும் அவரவர்தம் இயல்புக்கேற்ப முகங் கொள்கிறோம். சிலர் தம் அனுபவத் தளத்திற்கும் அப்பால் சென்று, தமது அறிவுச் சேகரத் தீவிரத்தையும் உள்வாங்கிக் கொண்டு அதன் நிமிர்வில் சவால்களை எதிர் கொள்கின்றனர். ஒடுக்குமுறைக்கு எதிராகத் தேசிய விடுதலைப் போராட்டம் கிளர்ந்தெழுகையில் அக்கிளர்ச்சி தேசத்தின் பல்வேறு அம்சங்களையும் தழுவியதாகவே இருக்கும் நாமும் இத்தகையதொரு வரலாற்றுச் சூழமைவிலேயே உள்ளோம்.

இதனால் தமிழ்க் கலை இலக்கிய வரலாற்றில் முக்கியமான தளமாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் உருவான எழுத்துகள் 'அரசியல் எழுத்துகள்' என அடையாளம் காணும் விதத்தில் அமைந்தன. கவிதைச் செயற்பாட்டில் புதிய விழிப்புணர்வுடன் 'அரசியல் கவிதைகள்' தோற்றம் பெற்றன. இவை ஈழத்துத் தமிழ்க் கவிதையின் சமகால அரசியல் முக்கியத்துவம் உள்ள கவிதைகளாகவே பிரிநிலைப்படுத்திப் பார்க்கும் தேவையை இயல்பாக்கிக் கொண்டன.

இப்போ கவிதைச் செயற்பாட்டில் ஒரே வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுழன்று கொண்டிருந்த போக்குகளுடன் புதுப்பிரக்ஞையுடன் பீறிட்டுப் கிளம்பும் பெண்களின் குரல்கள் எண்பதுகளின் பின்னர் அதிகமாகத் தமிழ்க் கவிதையில் மேற்கிளம்பின.

தமிழ்த் தேசியப் போராட்டம் பல்வேறு முரண்களைத் தன்னகத்தே கொண்டு வந்தாலும் தமக்குள் பல்வேறு பரிமாணங்களையும் உள்வாங்கிக் கொண்டுதான் உள்ளது. இதனால் இக்காலகட்ட கவிஞர்கள் யாவரும் ஒரே வார்ப்பில் ஒற்றைக்குரலில் மட்டும் ஒலிப்பவர்கள் அல்ல. அவர்களும் பல்வேறு குரல்களில் தமது கவிதையாகச் செயல் பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரசியல் கவிதை, போராட்டக் கவிதை இன்னும் விரிந்த தளங்களில் நீட்சி கொள்கிறது.

*என்னிடம்*
*ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல*
*நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க*
*வார்த்தைகள் இல்லை.*

- சிவரமணி-

எண்பதுகளின் பின்னர் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல் முனைப்பும் அதனால்



படிப்பகம்

www.padippakam.com

உருவான விழிப்பும் பிரக்ஞையும் கவனிப்புக் குரியது. இதன் முக்கியத் தளமாற்றம் பெண்கள் அரசியல் ஈடுபாட்டிலும் கலை இலக்கிய வெளிப்பாட்டிலும் நிகழ்ந்தது.

தேசிய விடுதலை இயக்கங்களில் பெண்கள் அதிகமாகத் தங்களை இணைக்கத் தொடங்கினர். தேசிய விடுதலையின் விரிதளச் சிந்தனை பன்முகப்பட்டதாயிற்று. சாதியம் பால்நிலை கடந்த விடுதலைக்கான வித்துகள் மேற்கிளம்பின பல்வேறு பெண் அமைப்புகள் தோற்றம் பெற்றன.

தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த அரசியல் கோட்பாட்டு ரீதியான சிந்தனைகள் தாங்கிய பாத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிப்பட்டன. பெண்களுக்கென்று தனித்த இதழ்கள் வெளிவந்தன. கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், நாடகம் என கலை இலக்கியத்தளங்களில் பெண்கள் அதிக நாட்டம் கொண்டு ஈடுபடத் தொடங்கினர். வாசிப்பும் எழுத்தும் (பெண்கள் சார்ந்த) சமூகச் செயற்பாட்டு ரீதியிலும் அதிகம் வெளிப்படத் தொடங்கின.

இப்பின்புலத்தில் தான் 1986களில் பெண்கள் ஆய்வு வட்டம் 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டது. இத்தொகுப்பின் வருகை, பெண் எழுத்தாளர்களின் தனித்துவத்திறன் வெளிப் படும் போக்கையும் பெண்மொழி சார்ந்த படைப்புகளின் வருகையையும் தமிழுக்கு வழங்கிச் செல்லும் தேவையையும் உணர்த்திற்று.

'சொல்லாத சேதிகள்' வெளிப்பட்ட காலத்தின் பின்னர் தேசிய விடுதலைப் போராட்டத்டதிலும் பல்வேறு தளமாற்றங்கள் உருவாயின அவற்றினூடும் பெண்கள் எவ்வாறு அவற்றை முகங்கொடுத்துள்ளனர் என்பதற்கு இக்காலத்தின் பின்னர் வந்த கவிதைகளே சாட்சி. இது இத்துடன் நிற்கவில்லை. இன்னும் பல்வறு புதிய புதிய பெண் எழுத்தாளர் களையும் தமிழுக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

இந்த வகையில் தொன்னூறுகளில் புதிய பெண் எழுத்தாளர்கள் பலர் தோற்றம் கொண்டனர். இவர்களது கவிதை வெளிப்பாட்டுப் பாங்கும் கவிதையின் மொழி ஆக்கத் தேர்வும் புதியதாக அமைந்தன. பெண்ணிலைவாதம் குறித்த சிந்தனைத் தெரிவும் கோட்பாட்டுப் புரிதலும் வாய்க்கப்பெற்ற காலகட்டத்தில் இவர்களது எழுத்துகள் அமைந்தமை தனிச்சிறப்பு.

இன்றைய சமூகம் என்பது ஆணாதிக்கச் சமூகமே என்பது வெளிப்படை இவ்வகையில் இந்த ஆணாதிக்கச் சமூகத்தினுடைய யதார்த்த நிலை, நடைமுறை ஆகியவை மொழியல் செல்வாக்குச் செலுத்துகின்றன. சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கூட இதன்வழியே உற்பத்தி செய்கின்றன. இச்சொற்களும் சொற்றொடர்களும் அடங்கிய மொழியானது பால்வாதத்தை வெளிப்படுத்து வதாகவும் அதனை நிலைநிறுத்தும் சாதனமாகவும் அமைகிறது.

இது மாத்திரமன்றி இன்றைய ஆணாதிக்கம், தந்தை வழிச் சமூகத்தின் மொழியின் இலக்கணங்கள், சமூகத்தில் அதிகாரம் பெற்றிருந்த ஆண்களாலேயே உருவாக்கப் பட்டிருந்தன. மொழி பற்றிய சிந்தனைகள் பேரகராதிகள், சொற்களஞ்சி யங்கள் யாவும் அதிகாரம் பெற்றிருந் தோராலேயே நிலை நிறுத்தப்பட்டுள்ளன. அவர்களுடைய பார்வையும் நோக்கும் கிரகிப்பும் புரிதலுமே மொழியில் முதலிடம் பெற்றன. இவ்வகையில் ஆண் நிலைப்பட்ட ஒன்றாகவே மொழி உருவாகி வளர்ந்துள்ளது. அவ்வாறே அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணாதிக்க மொழிப் பரப்பில் பெண்கள் குறுக்கீடு செய்து, தமக்கான கவிதை மொழியாக, தம்மை வெளிப்படுத்தும் மொழியாக ஆக்கிச் செயற்படுவது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால் பெண் மொழி சார்ந்த படைப்பு முயற்சியில் ஈடுபட வேண்டிய சமூக நிர்பந்தத்தை ஈழம் பெண்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தது.

யுத்தம் அனைத்துச் சுமைகளையும் பெண்கள் மீதே சுமத்தி விட்டுள்ளது. ஆயினும் பெண்கள் தேசிய அரசியலில் ஈடுபடுகின்றனர். யுத்த களத்தில் நின்று போராடுகின்றர். தங்களைத் தனித்து அடையாளப்படுத்தும் அரசியலையும் தக்கவாறு வெளிப்படுத்தத்



படிப்பகம்

www.padippakam.com

தொடங்கினர். கவிதையாக்கச் செயற்பாட்டில் மொழி வழி தம்மை முழுமையாக வெளிப்படுத்தத் தொடங்கினர்.

இன்றைய போராட்ட காலத்தில் கூட, "தாய்நாடு", "தாய் மொழி" என பரவலாகக் கூறப்படுகிறது. தாய்மொழி என ஒருவருடைய சொந்த மொழியைக் குறிப்பிட்டாலும் மொழியைப் பெண்ணாக உருவகம் செய்தாலும் நடைமொழியில் மொழி தந்தையர் மொழியாக - ஆண்மொழியாக - அமைவது எமது கவனிப்புக்குரியது. ஏன், தேசம் என்பது கூட தந்தையர் தேசமாகவுமே கட்டமைக்கப்படுகிறது.

பொதுவில் மொழி, ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது. இதனால் நாம் புழக்கத்தில் இருக்கும் சொற்களை அப்படியே ஏற்க முடியாது. அச்சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்பே அவற்றைக் கையிலெடுக்கவேண்டும் இதனாலேயே "நாம் மொழியைப் பேசுகிறோம் என்பதைவிட மொழி நம்மைப் பேசுகிறது" என்பர். ஆக மொழியைப் பெண்கள் தங்களைப் பேசக்கூடிய மொழியாக மாற்றியமைக்கும் பாரிய முயற்சியில் ஈடுபட வேண்டியுள்ளது.

ஈழத்துப் பெண் கவிஞர்கள் இவற்றில் உந்துதல் பெற்றவர்களாகவே உள்ளனர். கவிதையாக்கச் செயற்பாட்டில் தனது அனுபவத் திரட்சியையும் உணர்வுகளையும் மனவுழைச்சல்களையும் சிந்தனைகளையும கேள்விகளையும் வெளிப்படுத்தத் தொடங்கினர். இதற்கான புதிய சொற்களின் தேர்வுக்குரிய உழைப்பில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினர். இப்போக்கின் தொடக்கக் குறியீடாகவே 'சொல்லாத சேதி' களை நோக்கலாம்.

தமிழ் போன்ற நீண்ட பாரம்பரியம் உடைய மொழியில் எத்தனை சுமைகள். திணிப்புக்கள். ஆனாலும் காலாதி காலமாகப் பின்பற்றப்பட்ட நடைமுறைக்கு மாற்றாக, மொழியில் மாற்றங்களைக் கோருவது, புதிய சொற்களை உருவாக்குவது அவ்வளவு இலகுவானது அல்ல.

எனவே ஆணாதிக்கம் நிறுவியுள்ள மொழிக் குறியீட்டு அமைப்பு முறையில் இருந்து பெண் வெளியே வர, மொழி உலகம் உருவாவதற்கு முன்பு இருந்த இயற்கையான உண்மையான ஆதிப் பெணணாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள இனி என்ன செய்ய வேண்டும் என்னும் வினா மேற்கிளம்புகிறது.

இப்போது பெண்கள் தங்களது எழுத்தைத் தாங்களே எழுதுதல் எனும் நிலைக்கு வந்துவிட்டனர். அதிகார ஆதிக்க மமதைகளுக்கு எதிராகக் கொப்பளிக்கும் கோபங்களும் வெடித்துக் கிளம்பும் அழுகைகளும் தங்களுக்கான மொழியைக் கண்டு பிடிக்கும் அவஸ்தையும் மௌனத்துக்குள் ஆழ்ந்து போக... என பன்முக மனநிலைகளில் - ஊடுபாவு கொண்ட எழுத்துகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

மொழியின் அமைப்பாகத்தைச் சிதைத்து, மொழிக் களத்தில் புதிய மொழியை உருவாக்கும் செயற்பாட்டில் பிரக்ஞை பூர்வமாக ஈடுபடக்கூடிய போக்கு மேற்கிளம்பியாகி விட்டது. இதன் அறிகுறியாக - வரவாக - 'உரத்துப் பேச' - அமைகிறது.

கவிதையைக் கவிதையாக மட்டும் எழுதாமல் இதுவரையிலான புழக்கத்தில் உள்ள மொழியிலிருந்தும் புதியதொரு அமைப் பாக்கத்தை கலாசாரத்திற்கு உருவாக்கித்தர முற்பட்டதன் விளைவுதான் 'உரத்துப் பேச'...

அதாவது ஆணின் மொழியாக வெளிப்பட்ட ஆண் கற்பித்துள்ள அர்த்தத்தை மாற்றி, பெண் தன் நோக்கில் அர்த்தங்களைக் கற்பிக்க முயன்றதன் விளைவே இக்கவிதைகள்

*அடி தங்காய்*
*முறிவு கொள்ளாதே*
*மேலும் மேலும் நம்பு*
*வாழ்வு பற்றி*
*உன் இருப்பு பற்றி*
*அதன் அர்த்தம் பற்றி*
*இன்னும் வலுவாய்*

- ஆகர்ஷியா



படிப்பகம்

www.padippakam.com

'உரத்துப் பேச' - ஆழியாளின் கவிதைகள் வழி வாசிப்புச் செய்யும் பொழுது நாம் எதிர்கொள்ளக்கூடிய அவஸ்தைகள், அதிர்ச்சிகள் ஏராளம். பல மௌனங்கள் உடைக்கப்பட்டுப் பேசு பொருளாக்கப் படுகின்றன.

ஒரு பெண் ஓர் ஆணுடன் சகஜமாகப் பழகும் பொழுது அவள் பற்றிய படிமங்கள் அவன் மனதில் எவ்வாறு நிழலாடும் என்பதை ஆண் நிலையில் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் அந்தப் புரிதலை இவள் நமக்கு வேறொரு தளத்தில் நகர்த்திச் செல்கிறாள்.

*நீயும் நானும்*
*வரையறைகளைக் கடக்க வேண்டும்*
*நான்*
*உன் விவேகத்தோடும்*
*நீ என் வீரியத்தோடும்*
*கடக்க வேண்டும்*
*எனினும்*
*என் கருவறையை*
*நிறைப்பது உன் குறியல்ல*
*என்ற புரிதலோடு*
*வா,*
*ஒன்றாய்க் கடப்போம்*
*நீ என் விவேகத்தோடும்*
*நான் உன் வீரியத்தோடும்*

என தனது புரிதலைக் கூறிச் செல்கிறாள்.

'நிலுவை' எனும் கவிதை எமக்குள் தோற்றுவிக்கும் உணர்வு நமக்குள் ஒருகணம் அற்பப்படும் மனநிலையைத் தோற்றுவித்துச் செல்வதாக இருக்கிறது. அவள் கேட்கும் கேள்விகள், பலரும் தமக்குள் மட்டும் மௌனமாகவே கேட்டுக்கொள்ளும் கேள்வி களையே - சிந்தனைகளையே - தம்முள் பேசுகிறாள். கவிதையில் இழையோடும் உணர்ச்சியும் அதன் தார்மீகக் கோபமும் கவிதை உருவாக்கத்துக்குப் பல்வேறு பரிமாணங்களைத் தருகிறது.

யுத்தச் சூழல் வழியே ஆழியாளுக்கு காதுகொள்ளாக் காட்சிகள் பல திரண்டு வருகிறது. ''என் நாட்டில் போரா? , யார் சொன்னது'' இவ்வாறு உரத்துக் கேட்கக் கூடியளவிற்கு உந்துதலின் இயக்கம் எத்தகையது என்பது வாசிப்பின் போதே சாத்தியமாகும்

மன்னம்பேரிக்கும் கோணேஸ்வரிக்கும் புரிந்த வன்மொழியின் கொடூரம் எத்தகையது என்பது இதன் வரலாறு புரிந்தோர்க்கு நன்கு விளங்கும் ஆனால் கவிஞரோ இதனை கவிதையாக்கியிருக்கும் பாங்கு, அதன் மொழி நம்மை வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

ஆழியாளின் ஒவ்வொரு கவிதையின் வழியே விரியும் 'வெளி' நமக்குள் ஏற்படுத்தும் அர்த்தப் புரிதல்கள் ஏராளம் அவை பன்முகத் தன்மை கொண்டவை.

'விடுதலையின் பெயரால்' என்னும் கவிதை கட்டமைத்துச் செல்லும் வழியில் நமக்குள் ஏற்படுத்தும் அதிர்ச்சி, கேள்வி, சிந்தனை அவரவர் அனுபவத் தளத்துக்கேற்ப விரிவு கொண்டவை. இதன் மொழிதல் புதுமையாகவும் விரைவுத் தன்மை கொண்டதாகவுமே உள்ளது. கணணிச் செயற்பாட்டின் இயக்கமும் வேகமும் கொண்ட ஒரு நவீன உணர்தலின் பெறுமான நிலைப்பட்ட கவிதை அது.

மொழி பெயர்ப்புக் கவிதைகளின் தேர்வு, அதன் அரசியல், தொகுப்புக்கு ஒரு முழுமையைக் கொடுக்கிறது. பெண்களின் அனுவத்திரட்சியின் பல்வேறு முகங்கள், பெண் மொழி சார்ந்த தேடலில் அகப்படுவது இத்தொகுப்பின் தனிச்சிறப்பு. சமூக அனுபவங்கள் மாறுபட மாறுபட சொற்றொடர்கள் அமைப்பு மாற்றங்களை அவாவி நிற்கும். ஆழியாளின் எடுத்துரைப்பு முறைமை வேறுபட்டவை. இவை நீண்ட சொற்றொடர்க்ள மூலமும் பேசுகின்றன.

நமது தினசரிச் சொற்கள் படைப்பில் அழுத்திக் காட்டும் பாங்கால், அவற்றைப் பயன்படுத்தும் தன்மையால் நாம் இது வரை பெறாத புதிய அனுபவம் எமக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு கவிதையும், தனக்கான இயங்கு தன்மையுடன் தனக்கான புதிய சொற்களை உற்பவித்து நிற்கிறது.

ஆழியாளின் கவிதைகள் நுண்ணிய உணர்திறனையும் கவிதையாக்கலையும்



படிப்பகம்

www.padippakam.com

கருத்துநிலைச் செம்மையினையும் தன்னளவில் நன்கு வெளிப்படுத்துகிறது.

நமது காலசாரத்தில் மௌனப்படுத்தப் பட்டவை கவிதையாக்கத்தில் பேசப்படு கின்றன. வரலாற்றுச் சாத்தியப்பாடுகளுடன் கவிதையைப் தொடர்வுபடுத்தி வாசிப்புச் செய்யும் பொழுதே பன்முக அர்த்தப்பாடுகள் சாத்தியப்படும். அப்போதுதான் அவை உரத்துப் பேச முற்படும். இவ்வகையிலேயே இக்கவிதைகள் பார்க்கப்பட வேண்டும். வாசிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு அர்த்தப்படுத்தல்களின் விரிவுத்தன்மை கொண்டவை. எவை எவை மௌப்படுத்தப் பட்டனவோ அவை இங்கே பேச வைக்கப்படு கின்றன. இப்பேச்சு,மொழியின் உள்ளுமையை -ஆளுமையைப் - பேச வைக்கும் முயற்சியின் பாற்பட்டது. இதில் ஆழியாள் எவ்வளவு தூரம் முன்னோக்கி நகர்ந்துள்ளார் என்பதை வாசகர்களின் வாசிப்புக்கு விட்டுவிடுவோம்.

*அங்கு எனக்கென*
*ஓர் பிரபஞ்சம் உருவாகும்*
*அப்போது உயிர் பெறும்*
*எனக்கான வரிவடிவகங்களுடன் கூடிய*
*என்மொழி*
*அதன் பின்*
*தேமல் படர்ந்த எவனாயினும்*
*என்னோடு உரையாடட்டும்*
*அப்போது கூறுகிறேன்*
*பதிலை,*
*என் மொழியில்,*
*என் ஆதித்தாயின்*
*பெண் மொழியில்.*
*அதுவரை நீ காத்திரு.*

- ஆழியாள் -

**உரத்துப் பேச...**(கவிதைத் தொகுப்பு),
ஆழியாள்,
வெளியீடு; **மறு**,
71, முதல் பிரதானச் சாலை,
இந்திரா நகர், சென்னை-20.
விலை. ரூ. 30/-




தாமரைச் செல்வி பதிப்பகம்,
31/48, ராணி அண்ணா நகர்,
கலைஞர் நகர், சென்னை-78.,(விலை ரூ. 125)
**E-mail:**- thamaraiselvi@intamm.com

"சிலுவையில் தொங்கும் சாத்தான்" என்ற இந்நாவல் கிக்கூயூ மொழியில் வெளிவந்தது. மௌண்ட் கென்யாவிலிருந்து நைரோபி வரை கென்ய மக்கள் வீடுகளிலும் கடைகளிலும் மற்ற பொது இடங்களிலும் கூடி கூடிப் படித்தார்கள், வாய்விட்டு உரக்கப் படித்தார்கள். சிறைப்பிடிக்கப் படுவதற்கு முன்னால் தொடங்கப்பட்ட இதனை ஒரு வருட காலம் தடுப்புக் காவல் சிறையில் இருந்தபோது மலம் துடைக்கும் தாளில் எழுதி ரகசியமாக பாதுகாத்து வந்தார் கூகி. விடுதலை பெறுவதற்கு சில வாரங்கள் முன்பு சிறைக் காவலரால் பறிமுதல் செய்யப்பட்ட நாவலின் பிரதி, பின்பு எதிர்பாராத விதமாக அவரிடமே திருப்பித் தரப்பட்டது. கிக்கூயூ மொழியில் மூன்று பதிப்புகளைக் கண்டது. ஆங்கில வாசகர்களால் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கபட்ட இந்நாவல் பின்பு ஆசிரியரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டது. தமிழில் அமரந்தா-சிங்கராயர் ஆகியோரால் மொழி பெயர்க்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# சிபிச் செல்வன் கவிதைகள்

## பொருந்தாயிருவுடல்கள்


ஒரு இரவில் கண் விழித்து
தேடினேன் என்னை
இருள் வெளிச்சத்தில்
சிதைந்து கிடக்கிறது உடல்
தலை மாறி கால் மாறி
எனது ஈரல் எடுத்துண்ண
பசி தீராது
இரத்தம் குடிக்கிறேன்
தாகம் தீர்க்க
கண்களும் குறியும்
தொலைந்திருக்க
பொருத்திக் கொண்ட யோனியில்
புதைந்திருக்கிறது குறி.
முலைகளில் மொய்த்திருந்த கண்கள்
மீண்டும்
என்னுடலில் பொருந்த
பொருந்தாவுறுப்புகள்
சதா தேடி யலைகிறது
என துயிரை

## நினைவில் ஒளிகிற நீர்

ஓடிக் கொண்டிருக்கிறது நதி
சுழலில் படகு சுற்ற
மீன்கள் துள்ளி இரை விழுங்கும்
நிலவொளியில் கூசுகிறது
நீரில் ஒளிர்ந்த மின்சாரம்
பதினாறு கதவுகளை தாண்டி பாய்கிறது அலை
செம்மண் நீரில் முகம் திரிந்து அலைய
நிழல் கொத்தும் மீன்கள்
வளைந்து தப்பி வலையில் விழும்
தூண்டில் புழு
நினைவில் ஒளிகிற நீர்

## கறுப்பு நாய் - V

யாவர் பின்னும் சதா அலைந்த
கறுப்பு நாய்
என் வழியில்
உமிழ்நீர் சுரக்க பாய்ந்து வருகிறது
உயிர் சுவை யறிந்த நாக்கு
கேட்கிறது
தீராத உணவு
நாளும் எரிகிறது
நெருப்பு
தன் பசி தீர தன்னை யுண்ணும் நாள்
கறுப்பு நாள்



படம்: A.செல்வம்

இருப்புப் பாதையில் ஊர்கிறது
நத்தை
இரயில் வருவதற்குள்
கடந்து போ

வா இரயிலே
நம் வழி குறுக்கிடுமெதையும்
மோதிச் சிதைப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

## அசைவு

நெருங்கிய சப்தங்களை
மறந்து
கலங்கிய மனம் தேடும்
அமைதியில்
நெடுந்தூரம் சென்றபின்
புரிந்தது ஒன்றுமில்லை
மீண்டும் சப்தங்களில்
மனம் கிடந்து
நரகமானது
நூறிலிருந்து
ஒன்றுக்கும்
ஒன்றிலிருந்து
நூறுக்கும்
உயிரின் பயணம்

-கா. விஸ்வாமித்ரன்


படம்: A.செல்வம்

## அபிப்பிராயங்கள்

சிவந்த அபிப்பிராயங்களோடு
மூல விரோதம் எனக் கொன்றுமில்லை
பீடித் தொழிலாளர்களுக்கு
என் கவிதை மாற்றீடாகாது
தெங்குச் சிரட்டையில் ஐஸ்கீரிம்
தின்றவாறு விண்வெளி நகர வரைபடம்
மேய்பவன் ஏவுகணைகளுக்கும் இடம் போட்டிருப்பான்
மூதாட்டிகள் உலர்ந்த பழங்களை வெயில் காட்டி பத்திரப் படுத்துவார்கள்
வெகுகாலமாய் ஒருவன் துருப்பிடித்த சைக்கிளோடு எப்போதும் எதிர்வருகிறான்.
ஒட்டகச் சிவிங்கிகள் பாதுகாக்கப் படவேண்டியவைதான்
ஒரு நாட்டின் தலைமை நிர்வாகி எதற்கும்
தன்னொத்த அடையாளத்தை வரலாறுகளில்
தேடிச் சமாதானம் அடைந்து கொள்ளட்டும்
துயர இசையும், தொடுவானக் கடல் படகும்
ஆலைப்புகையும், தீர்ந்து போன புகையிலையும்
நள்ளிரவை வார்த்தைகளாக்குகின்றன.
சோடியம் வேஃபர் நுழைய முடியாத குடியிருப்பின்
கீழ்த்தளங்களில் தவளைகள் துள்ளுகின்றன.
நம்பத் தகுதியற்றோ திராணியற்றோ
உலகம் கால்களுக்கடியில் நழுவுகிறது
கேளிக்கைகள் துவங்கி விடுகின்றன
மோசமான மது கணவனைப் பிரிந்து
குழந்தைகளையும் கைவிட்ட தாயைப் போன்றது
மற்றபடி கிழக்குச் சிவக்கிறது
எனக்கு எதுவும் புரியவேண்டியதில்லை.

-யவனிகா ஸ்ரீராம்



படிப்பகம்

www.padippakam.com

# இழப்பு

உள்ளே செல்லச் செல்ல
சூழ்ந்து கொண்டது
இருளின் மௌனம்

வார்த்தைகளே தடையாக
உணர்ந்த கணம்
நெஞ்சில் ஊர்ந்தது
சர்ப்பத்தின் பயம்

அறிவதற்கா, இழப்பதற்கா
குறிக்கோளற்ற நகர்வின்
ஒவ்வொரு அடியிலும்
தன் சிதைந்த அழகை
திறந்து காண்பித்தது பழைய
நூற்றாண்டு ஒன்று

எதையிட்டும் நிரப்ப முடியாத
இழந்த அதன் இருப்பு
அறிந்தவற்றையெல்லாம்
துறக்கச் சொன்னது
பரவசத்தின் பரந்த வெளியில்

- லெனாகுமார்

நீராளியின் வாதைகள் ஆழித்திட
பனியுறை மெல்லச் செடிந்தது
கனப்பறைகளில் புலத்தாரையிழந்து
மிருகவுடல்
நிலைகுத்தியது புள்ளியில்
தாழிகளின் தகிப்பில்
உருகியோடும் மூர்க்க அணங்குகள்
பல்லியமங்கி
பூமியில் சுவாசவேர் நீட்டியது
விழிபடர்ந்த மண்ணோடுகளில்
கதகதப்பாய் மாறி
காட்டெறும்புகளில் அடைகாத்தன
மூதாளின் நெளிவிரலுயிரிகள்
வரை வரையாய் யொடிய
குளம்படியூர்ந்த வனச்சி
ஒப்பனை நிழலாய்
கள்ளிகளில் மறைகிறாள்.

- அறிவழகன்

விழுந்து
சிதறி
வெண்ணலையாய்
பரவி
நீண்டு
நிலம் கடந்து கடல்
சேர்ந்திடும் அருவி
மகிழ்ந்து
நெகிழ்ந்து
ஓடிந்து
கூடி
நிமிர்ந்து
கூத்தாடி
பின்
கூடற்று
வெளிச்சென்றிடும்
உயிர்

- A. செல்வம்

உற்று
கவனித்து
நிலையாய்
ஓர்
கிளையில்
அச்சமுற
கண்பதித்து
ஆவலாய்
எதிர்நோக்கி
யாதுமற்ற
ஒன்றைஅக்கறையாய்
தேடும்
பார்வை
திடீரென
ஓர் பாய்ச்சல்
கிளை விட்டு
கிளை
மரம் விட்டு
மரம்

- A. செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# மௌனத்தோடு நகுலனின் உரையாடல் தொடர்ந்த வண்ணமிருக்கிறது.

- குழகன்



விருதுகள் குழுமனப்பான்மை சார்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் அமெரிக்க தமிழ் அமைப்பு 'விளக்கு' பரிசை கவிஞர் நகுலனுக்கு வழங்கி இருப்பது நவீன தமிழ் கவிதை உலகத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். இதுகாறும் இப்பரிசு சி. சு. செல்லப்பா, பிரமிள், ஞானி என தமிழின் நவீன எழுத்தை முன்வைத்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாய் இப்பொழுது கவிஞர் நகுலனுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

ஒரு விருது கொடுக்கப்படுவதன் மூலம் அதை பிரதிநிதியத்துவப்படுத்தும் கவிஞன் - கலைஞன் தீவிர வாசகர்களின் கவனத்தை ஈர்க்கிறான் அவனது படைப்புகள் அவன் வாழும் சமூக, கலாச்சாரத்தின் பிரதிபலிப்புகள் இவ்வாறே நகுலனின் படைப்பை நாம் எதிர்கொள்ள வேண்டும். நவீன படைப்பாக்கத்தில் அரவமற்று இயங்கிக்கொண்டிருக்கும் அகமனக்கவிஞன் நகுலன். மலையாளத்தில் குமார ஆசான் விருதுபெற்ற முதல் தமிழ் கவி. நகுலனைப்பற்றி பரவலான செய்திகள் வணிகப் பத்திரிக்கையில் இடம் பெறுவதில்லை. அவரும் அதில் கவனம் செலுத்துவதில்லை. தனக்கென ஒரு 'லாபி' உருவாக்கி கொண்டு நிறுவனமாய் செயல்படும் படைப்பாளிகள் மத்தியில் தன்னந்தனியே இயங்கி, தனக்குள்ளே வசிக்கும் கவிதா உள்ளம் கொண்டவர். குழந்தைத்தனமான மனோபாவத்தையும், படைப்பாளிக்கான தீவிரத்தையும் ஒரே நிலையில் வெளிப்படுத்தும் தன்மை, தனிமனித நேர்மை, சகமனிதனை நேசிக்கும் பண்பு இவைகள் நகுலனிடம் காணும் விசேஷ குணங்கள்.

சென்ற வருடம் திரைப்பட விழாவில் ஒரு ஆர்மீனிய திரைப்படத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த படத்தை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் காட்சிரூப கவிதை வரிகள், ஓவியமாக உலாவரும் மனிதர்கள் ஏனோ எனக்கு நகுலனையும், நகுலனின் கவிதை வரிகளையும் நினைவுப்படுத்தியது. **The colours of pomegranates** என்ற அந்த படம் 18-ஆம் நூற்றாண்டில் ஆர்மீனியாவில் வாழ்ந்த செய்யத் நோவா என்ற கவிஞனின் வாழ்க்கையையும் அவனுடைய சிந்தனைகளையும் மட்டுமே அடிப்படையாக கொண்டு 1969 ஆம் ஆண்டு செர்க்கை பிரஜனெவ் என்ற இயக்குனரால் சோவியத் நாட்டின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து ஆர்மீனிய தேசவிடுதலைக்குரலை வெளிப்படுத்தும் படமாக எடுக்கப்பட்டிருந்தது.

செய்யத் நோவா ஆர்மீனிய மக்களின் உன்னத கவி. அவருடைய வாழ்வும் சிந்தனையும் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. உண்மை, சுதந்திரம், தனிமை, அழகு, உயிர்ப்பு, மரணம் என்று அகமனத்தளத்தில் செயல்பட்ட கவிஞனின் அற்புத கவிதை வரிகளையே காட்சி ரூபமாக்கி பிரச்சார பாங்கற்று தனிமனித சுதந்திரமே தேசத்திற்கான சுதந்திரம் என விளக்கிய படம்.

சுதந்திரமாய் ஒரு சித்தரின் மனப்பக்குவத்தோடு எந்த நேரமும் மரணத்தோடும் விவாதித்துக் கொண்டு வாழும் நம் நகுலன் அந்த படம் பார்த்துக் கொண்டிருந்த போது என் நினைவிற்கு வந்தது ஆச்சிரியம் இல்லைதான்.

தமிழ் சூழலில் இதே மாதிரி படங்கள் சாத்தியம்தானா? கவிதை என்கிற ஊடகத்தை காட்சி ஊடகமாக்க தேர்ந்த கலைஞர்கள் இருக்கிறார்களா? அல்லது அது அவசியம்தானா? நவீன ஊடகங்களின் சூட்சுமம் அறிந்த கலைஞர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதுவும் தமிழ் சூழலில் விரலுக்கு (மருந்துக்கு) கூட ஆள் இல்லை!



தனக்கென ஒரு வாழ்க்கை முறையும் நவீன சிந்தனையும் குழந்தைத்தனமான பழகு திறனும் கவிதா ஆளுமையுமுடைய நகுலனை தமிழ் கூறும் நவீன நல்லுலகம் காட்சி ஊடகங்களில் பதிவு செய்ய முன்வருமா? அப்படி யாரும் முன்வந்தால் உதவி செய்ய முன் நீளும் முதல் கை நம் கைகளாக இருக்கட்டும்.

• • • • • •



படிப்பகம்

www.padippakam.com



**எக்ஸில் EXIL**

புகலிட எழுத்தியக்கத்தில் பேசப்படாத பல விடயங்கள் பற்றிய விவாதங்களுக்கு அடிகோலிட்டு பின் நவீனத்துவம் பற்றிய கட்டுரை மற்றும் சிறுகதைகள், கவிதைகள், விமர்சனங்கள் தாங்கி பாரீஸிலிருந்து வரும் காலாண்டிதழ். பிரதி ஒன்று 20 FF வருட சந்தா 100 FF (4 பிரதி தபால் செலவு உட்பட) தொடர்புக்கு காசோலை அனுப்ப வேண்டிய வங்கியும் இலக்கமும்
CREDIT LYONNAIS ASSOCIATION EXIL
0554 / 6772 L 19



**யுத்தத்தின் இரண்டாம் பாகம்**

போர் எதிர்ப்பை இலக்காகக் கொண்ட இவரது படைப்பியக்கம் தமிழ் பாசிஸ்டுகளின் இனச் சுத்திகரிப்பின் போது முஸ்லீம்கள் மீது நடாத்தப்பட்ட விரட்டியடிப்புக்கள், பள்ளிவாசல் படுகொலைகள் என்று தமிழ்தேசியம் கடந்துவந்த நிஜங்களை இலக்கியமாக்கியுள்ளதோடு தமிழ்ச் சமூகத்தினது போலி ஒழுக்க வாதத்தின் நேரடி விமர்சனமாகவும் தன்னை இனம் காட்டுகிறது. சக்கரவர்த்தியின் யுத்தத்தின் இரண்டாம் பாகம். விலை ரூ. 65/-

வெளியீடு :
எக்ஸில் (N° d' enreg: 13022670)
B.P. 204, 92604 Asnieres Cedex,
France.

கிடைக்குமிடம் :
யாதுமாகி,
6, பருவத சிங்கராஜ தெரு,
திருநெல்வேலி டவுண்-627006. தமிழ்நாடு.



**அம்மா**
நவீன இலக்கிய புகலிட காலாண்டிதழ்
இதழ் மற்றும் தொடர்புகளுக்கு

மனோ
m1a2n3o4@aol.com
S. Manoharan (Esc. 13)
210, Ave. du 8Mai 1945
93150 Le Blanc Mesnil, France.



**எப்போதாவது ஒரு நாள் - நட்சத்திரன் செவ்விந்தியன் (கவிதைத் தொகுப்பு)**
நட்சத்திரன் கவிதைகள் தேசவிடுதலைப் போராட்டத்தினது மட்டுமல்ல பல்வேறு யுத்தங்களின், பிரிவுகளின், மரணங்களின், மனித இருப்பு பற்றிய இன்னொரு வகைக் கவிதைகள். விலை ரூ. 25/-
தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48 இராணி அண்ணா நகர், கலைஞர் நகர், சென்னை-78



**மைலாஞ்சி - ஹெச்.ஜி.ரசூல் (கவிதைத் தொகுப்பு)**
இஸ்லாமியர்களின் ஓரங்கட்டப்பட்ட வட்டாரமொழிக்கூறுகளும் பேச்சு வழக்கும், தமிழ் அரபு, தமிழ் மலையாள சொல்குறியீடுகளாகி தமிழின் இன்னொரு அடையாளமாகவே பிறப்பெடுத்துள்ளது மைலாஞ்சி. விலை ரூ. 50/-
ஞானியார்வீதி
சரம், 21,77
தக்கலை-629 175, கன்னியாகுமரி மாவட்டம்.



**வயலட் நிற பூமி (கவிதைத் தொகுப்பு**
அப்பாஸ்
14-டி, 1/6, திருநகர் 3வது தெரு,
பசுவந்தனை ரோடு,
கோவில்பட்டி.
விலை ரூ. 40/-



**ஒத்திகை**
(அரங்கம் குறித்த கட்டுரைகளும், நாடகங்களும்)
ஆசிரியர். அ. ராமசாமி
விடியல் பதிப்பகம்,
3, மாரியம்மன் கோவில் தெரு,
உப்பிலிப்பாளையம்,
கோயம்புத்தூர்-5
விலை ரூ. 40/-



படிப்பகம்

# வரப்பெற்ற சிற்றிதழ்கள்

**வேறு வேறு (காலாண்டிதழ்)**
தனியிதழ் - 25.
ஆண்டுச் சந்தா ரூ. 100/-
இரா. மணிகண்டன், 111. சு. காந்தி நகர்,
ஆத்தூர்-636 102. சேலம் மாவட்டம்.

**ஏழைதாசன்**
26, அடப்பன்வயல் 8ஆம் வீதி,
புதுக்கோட்டை-622 002, தனியிதழ் ரூ.3/-
ஆண்டுக்கு ரூ. 35/-

**தமிழ் அமுதம்**
அஞ்சல் பெட்டி எண். 18,
58, சன்னதித் தெரு,
திருவண்ணாமலை - 606 601.
தொலைப்பேசி 25276.

**பயணம் புதிது**
நன்கொடை ரூ. 3/-
கவிஞர் முருகேசன், புலியூர் அஞ்சல்,
கரூர் மாவட்டம்-639 114.

**சொல் புதிது**
தனியிதழ் ரூ. 30/-, ஆண்டுக்கு ரூ. 100/-
ட. 486, பெரியார் நகர்,
முதல் பிரதானச் சாலை, ஈரோடு-638 009.

**கவிதா சரண்**
(மாதந்திர படைப்பிலக்கிய இதழ்)
ஆசிரியர். கவிதா சரண்
31, டி.கே.எஸ். நகர், சென்னை-600 019.
வருடச்சந்தா 100/-, தனியிதழ் ரூ. 10/-

**கதவு (காலாண்டிதழ்)**
தனியிதழ் ரூ. 10/-, ஓராண்டு ரூ. 40/-
ஐந்தாண்டு ரூ. 150/-,
5-36-4 ஆ. பாரதிநகர்
மின்வாரிய குடியிருப்பு (கிழக்கு)
அருப்புக்கோட்டை-626101.
தொலைபேசி 04566-73322.

**கனவு**
தனியிதழ் ரூ. 8/-
சுப்ரபாரதிமணியன்,
80-70, சி.பாண்டியன் நகர்
திருப்பூர் 641602. Phone: 0421-850199

**தமிழீழம்**
(தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல்
பத்திரிக்கை)
The Editor, BM Box 4002,
London WCIN 3xx, United Kingdom
விலை ரூ. 10/-

**உறவு (மார்க்சிய தத்துவ இதழ்)**
தனியிதழ் ரூ. 5/-, ஓராண்டு ரூ. 50/-
தொடர்புக்கு கா.சே. பாலசுப்பிரமணி
6/5, கீழச்செட்டியார் தெரு,
காரைக்குடி-630 001.

**கிராமியக் கலை (கலைஞர்களே**
கலைஞர்களுக்காக நடத்தும் செய்திம
நன்கொடை ரூ. 25/-
கலைமாமணி மு. குமாரராமன்
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மைய
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை-627 002.

**கதை சொல்லி**
தனியிதழ் ரூ. 25/-
ஆண்டுச்சந்தா ரூ. 100/-
பேர. க. பஞ்சாங்கம்
காசிஇல்லம், அவ்வை நகர்,
25, இருபதாவது குறுக்குத் தெரு,
புதுவை-605 008.
தொலைபேசி 0413-253226

**புதிய தடம்**
நன்கொடை ரூ. 5/-
தொடர்புக்கு மேகவண்ணன்,
44, லெட்சுமண தீர்த்தம் தெரு,
ராமேஸ்வரம்-623 526.

**காலக்குறி (காலண்டிதழ்)**
தனியிதழ் ரூ. 30/-
ஆண்டுச்சந்தா ரூ. 100/-
18, அழகிரி நகர் 2வது தெரு,
வடபழனி, சென்னை 26.

**ரஜினி, சிலமுகங்கள்,**
சிலம்பம் வெளியீடு, பண்பாட்டு
மக்கள் தொடர்பகம்
லொயாலாகல்லூரி
சென்னை-34.

**புதிய எழுத்து (காலாண்டிதழ்)**
தனியிதழ் ரூ. 25/-, ஆண்டுக்கு 10
தட்சணாமூர்த்தி
192, பன்னீர் செல்வம் தெரு,
காவேரிபட்டிணம் - 635 112.
தர்மபுரி மாவட்டம்.

**சதுக்கப்பூதம்**
விலை ரூ. 30/-, மாரப்பன்,
புதுப்பட்டி (போஸ்ட்)
நாமக்கல் - 637 003.

**சமவெளி (காலாண்டித**
தரும இரத்தினகுமார்
வெ. நாராயணன்
113, காமாட்சி அம்
காஞ்சிபுரம்-2.

## வரப்பெற்ற புத்தகங்கள்

**நேர்க்கோட்டு வரம்பு...**
(கவிதைத் தொகுப்பு) விலை ரூ. 7/-
செய்யாறு வி. பாலு
கவிதாபதிப்பகம், 77 கன்னுகாபுரம் தெரு,
திருவந்திபுரம், செய்யாறு - 604 407.

**கடற்கரைக் கால்கள், (கவிதைக் தொகுப்பு)**
பூமா ஈஸ்வரமூர்த்தி, விலை ரூ. 40/-
முகவரி பதிப்பகம், திலிப் குமார்,
216/10 இராம கிருஷ்ணாமடம் சாலை,
முதல்தளம் மைலாப்பூர், சென்னை 4.

**இயல்பு (கவிதைத் தொகுப்பு)**
விலை ரூ. 20/-, பொன் குமார்
சேலம் ஓவியர்-எழுத்தாளர் மன்றம்
14-1, மாரியம்மன் கோவில் தெரு,
சன்ஜீவிராயூ பேட்டை, சேலம் 636 006.

**சுயம் (கவிதைத் தொகுப்பு)**
விலை. ரூ. 40/-, வத்ஸலா வெளியீடு
ஸ்நேகா, 348, டி.டி.கே. சாலை,
சென்னை-14.

**முன்னு முறுக்கு (கவிதை தொகுப்பு)**
விலை ரூ. 28/- , புலன்விளை, கல்லன்குழி,
குமரிமாவட்டம் - 629166.

**நீ+நான்=கவிதை (கவிதைத் தொகுப்பு)**
தமிழ்ச் செல்வன், விலை ரூ. 30/-
வெளியீடு யூனிட்டி பதிப்பகம்
தபால்பெட்டி எண் 15
திங்கள் சந்தை, குமரிமாவட்டம்-629 802.

**என் மெல்லிய தொடுகையில்**
(கவிதைத் தொகுப்பு), சூர்ய நிலா
விலை ரூ. 15/-, முப்பாலிகை பதிப்பகம்
10, காளியப்பா குடியிருப்பு பெரமனூர்,
சேலம்-7.

**ஒற்றை இறகு (கவிதைத் தொகுப்பு)**
வசந்த் செந்தில், விலை ரூ. 50/-
யாளி பதிவு வெளியீடு, 8, பார்க் அவின்யூ,
கார்ப்ரேஷன் காலனி, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம், சென்னை-24.

**சூரியப்பயணம், (கவிதைத் தொகுப்பு)**
புதிய மாதவி, விலை ரூ. 30/-
ராஜா பதிப்பகம், 6/11-பி,
Yellappa Seth Estate Jerimeri (w) Mumbai - 72

**போஸ்ட் மார்ட்டம் (கவிதைத் தொகுப்பு)**
ஜே.ஆர்.வி. எட்வர்ட்,
விலை ரூ. 20/-, சிந்தனை வெளியீடு,
வானவில் வெளியீட்டகம்,
பரணியறத்தலவிளை, களியக்காவிளை-3.
குமரிமாவட்டம்.

**உதிரி சயனத்தை நீரில் அலகும் வரை**
(கவிதை தொகுப்பு) அமிர்தம் சூர்யா
விலை ரூ. 30/-, எழில் வெளியீடு,
31. மாதாவரம் நெடுஞ்சாலை (வடக்கு)
பெரப்பூர், சென்னை-11.

**சங்கருக்கு கதவற்ற வீடு,**
(கவிதைத் தொகுப்பு) விலை. ரூ. 20/-
லஷ்மி மணிவண்ணன்,
ஜீபிடர் வெளியீடு, 4ஏ, குஞ்சன் விளை
மணிக்கட்டி பொட்டல் அஞ்சல்,
நாகர்கோவில்-1.

**ஒடக்கு (கவிதைத் தொகுப்பு)**
விலை ரூ. 20/-
என்.டி. ராஜ்குமார்
கலை இலக்கிய பெருமன்றம்
1, திருநாவுக்கரசர் தெரு,
திருவண்ணாமலை-1

**அலமாரியில் ஓர் ராஜ கிரீடம்**
(கவிதைத் தொகுப்பு)
விலை ரூ. 30/-
தமிழ் மணவாளன், கோமளவல்லி பதிப்பகம்
18, பத்மாவதி நகர், மாதவரம் பால்பண்ணை
சென்னை-51

**சமதர்ம போதினி**
விலை ரூ. 100/-
அடையாளம், எச். 15/193, 2வது தளம்
கருப்பூர் சாலை,
புத்தாநத்தம்-621310
E-mail: adaiyalam@yahoo.com

**விண்ணளவு பூமி (கவிதைத் தொகுப்பு)**
தேவதேவன்
தமிழினி, 342, டி.டி.கே. சாலை,
ராயப்பேட்டை, சென்னை-14
விலை ரூ. 25/-

### தேவதேவன் நூல்கள்

**கவிதை**
*குளித்துக் கரையேறாத கோபியர்கள் (1976)*
*மின்னற் பொழுதே தூரம் (1981)*
*மாற்றப்படாத வீடு (1984)*
*பூமியை உதறியெழுந்த மேகங்கள் (1990)*
*நுழைவாயிலிலேயே நின்றுவிட்ட கோலம் (1991)*
*சின்னஞ்சிறிய சோகம் (1992)*
*நக்ஷத்ரமீன் (1994)*
*அத்தரத்திலே ஓர் இருக்கை (1995)*
*நார்சிலை வனம் (1996)*
*புல்வெளியில் ஒரு கல் (1998)*
*விண்ணளவு பூமி (2000)*

**கட்டுரை**
*கவிதை பற்றி - உரையாடல் (1993)*

**நாடகம்**
*அபிபாபாவும் மோர்ஜியானாவும் (1990)*

**கிடைக்குமிடம்: 4/5, மணிநகர், தூத்துக்குடி-3**



படிப்பகம்

www.padippakam.com


A/c Restaurent

சுகாதாரமான சமையல்

சுவையான உணவு

அமுல் ஐஸ் கிரீம்

அவுட்டோர் கேட்டரிங்

பசியாற்றுவதில் ஒரு தாயைப்போல...

# குமாரவிலாஸ் A/c

(சைவ உணவகம்)

வடக்கு ரதவீதி, நெல்லை-6.
போன்: 333189


படிப்பகம்